DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999



26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN
# உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit



PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099



உதயம் 1374 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 5, 2022


## Four Service Ontario employees charged in National Vehicle Theft Ring

## கனடாவில் "வேலியே பயிரை மேய்ந்த" கதை

## சேர்விஸ் ஒன்றாரியோவைச் சேர்ந்த நான்கு பணியாளர்கள் திருடப்பட்ட வாகனங்களை சட்டவிரோதமாக பதிவு செய்வதற்கு உதவினார்கள் என்ற குற்றசாட்டில கைது

கனடாவில் “வேலியே பயிரை மேய்ந்த“ கதைக்கு உதாரணமாக ஒன்றாரியோ அரச திணைக்களமான சேர்விஸ் ஒன்றாரியோவைச் சேர்ந்த பணியாளர்கள் நால்வர் குழுவாகச் சேர்ந்து சட்டத்திற்கு முரணான வகையில் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தி துஸ்பிரயோகம் செய்தார்கள் என்று விசாரணைகளின் பின்னர் தெரியவந்துள்ளது இந்த பதவித் துஸ்பிரயோகம் செய்த சேர்விஸ் ஒன்றாரியோவைச் சேர்ந்த நான்கு பணியாளர்கள் திருடப்பட்ட வாகனங்களை சட்டவிரோதமாக பதிவு செய்வதற்கு உதவினார்கள் என்ற குற்றசாட்டில கைது செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் அறியப்படுகின்றது.

(உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)

## Ontario Govt would train more Workers for In Demand Careers in Auto Manufacturing

## வாகன உற்பத்தித்துறையில் முக்கியவத்துவம் வாய்ந்த தொழில்நுட்ப பதவிகளுக்குரியவர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ள ஒன்றாரியோ அரசாங்கம்




ஒன்ராறியோ அரசாங்கம், மாகாணத்தின் செழித்து வரும் வாகன உற்பத்தித் துறையில் நல்ல ஊதியம் பெறும் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்பா பதவிகளுக்குரியவர்களுக்கு அவர்களைத் தயார்படுத்தும் வகையில் பயிற்சி அளிக்க திட்டங்களை வகுத்துள்ளது. குறிப்பாக வாய்ப்புக்கள் குறைந்த பிரதிநிதித்துவச் சமூகங்களைச் சேர்ந்த 500 பேருக்கு இலவசப் பயிற்சி அளிப்பதற்காக கூ5 மில்லியன் முதலீடு செய்து தொழிலாளர்களை உருவாக்கும் வகையில் இந்த திட்டம் செயல்படும்.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)


தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX REALTRON BLUE FORCE
கவாஸ். சோம சச்சிதானந்தன்

STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)


# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## Help Wanted

**Indoor shopping mall looking for full time maintenance employees.**
**More than 40 hrs weekly.**

**Call: 647-218-3698**

## Be Your Own Boss

Markham / McNicoll

Units for sale at
Majestic City Mall.
Very busy Tamil mall.
Corner 2 units together for sale.
Possible for men/ladies salon or any other business.

call FILONA:
(647) 606-1009

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415

## லஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

"தனி நபர் தகவல்கள், படங்கள், மற்றும் குறிப்புகள் என்பன 100% பாதுகாக்கப்படும்"

## மொன்றியாலில் உணவகத்தில் வேலை வாய்ப்பு

மொன்றியாலில் உள்ள கனடிய உணவகத்தில் வேலை வாய்ப்பக்கள் உண்டு. தகுந்த சம்பளம் வழங்கப்பெறும். காலை நேர உணவு தயாரித்தல் மற்றும் ஏனைய உணவக பணிகள் செய்ய வேண்டும். தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு:
1-450-774-3541

## Basement for Rent

**Markham & Denison**

**1 bedroom basement available immediately.**
**Parking, laundry, cable, internet included.**
**Close to all facilities.**

**Call: 416-317-8449**
**416-451-6680**


LOOKING FOR YOUR
Dream House?



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING




## உதயன் கதிரோட்டம்

# மக்கள் வரிப்பணத்தில் அதிக சலுகைகளையும் சம்பளத்தையும் அனுபவிப்பவர்கள் பாராளுமன்ற அரசியல்வாதிகளே!

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு தகுதியற்ற ஒருவர் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார் என்பதை உலகெங்கும் உள்ள பல நாட்டுத் தலைவர்கள் நன்கு உணர்ந்து முடிவுகளை எடுத்து வருகின்றார்கள். சரியான முறையில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாத ரணில் விக்கிரமசிங்க என்னும் ஒரு சாதாரண பிரஜை தற்போது மிகவும் வஞ்சகத்தனமாக அந்த பதவியில் ஏறி அமர்ந்திருந்து அட்டகாசகங்களை நடத்திவருகின்றார்.

இவரது அட்டகாசமான அறிவிப்புகளின் மத்தியில் கனடாவிலிருந்து ஒரு நம்பிக்கை தரும் அறிவிப்பு ஒன்று வெளியாகியுள்ளது

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சாவை கைது செய்து சர்வதேச நீதிமன்றில் முன்நிறுத்தும் கோரிக்கையை ஆதரிப்பதாக கனேடிய எதிர்க்கட்சியான கன்சவேடிவ் கட்சியின் தலைமைக்கான தேர்தலில் முன்னணியில் உள்ள பியர் பொலிவேரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிமன்றத்தை உறுதி செய்ய கனடா அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்பைக் கொண்டுவருவதாகவும் அவர் உறுதியளித்தார்.

இவரது அறிவிப்பு கோத்தாபாயவை நோக்கிய ஒரு அம்பு வீச்சு என்று கருதினாலும் ரணிலுக்கு எதிரான ஒன்று என்றும் நாம் கருதலாம்

மேலும் ரணிலுக்கு எதிராக குரல் எழுப்பு வரும் பலரும் அவரை பதவியிலிருந்து நீக்கும் நாள் மிகுவ விரைவில இடம்பெறும் என்று அறிவித்து வருகின்றார்கள்.

ரணில் விக்கிரமசிங்க, ஒரு ஜனநாயகத் தலைவனாகக் காட்சியளிக்கும் வேளையில், இரத்த வெறி விளையாட்டை மீண்டும் ஆரம்பித்துள்ளார்.ரணில் விக்கிரமசிங்கவினால் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் உள்ள மக்களை மட்டுமே துடைத்தெறிய முடியும் அவர் மக்களின் அழுகையை துடைக்க முடியாது.சட்டவிரோதமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்வதை ஐ.யு.எஸ்.எவ் எதிர்பார்த்துள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளன ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே இவ்வாறான முக்கிய அறிவிப்பை துணிச்சலுடன் அறிவித்துள்ளார். ஆனால் எமது தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து கோடிக்கணக்கான பணத்தைப் பெற்று அவருக்கு வாக்களித்துள்ளார்கள் என்ற செய்தி பரவத் தொடங்கியுள்ளுத. எமது தமிழ்த் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் அனைவரும் இந்த பாராளுமன்றம் என்னும் உல்லாசபுரியில் சல்லாபித்து வரும் அதிஸ்டக்காரர்கள். மக்களின் வரிப்பணத்தில் தங்கள் வாழ்க்கையை வளமாக அமைத்துக் கொண்டுள்ள இவர்கள் மக்களுக்கு ஆற்றிய சேவை என்று எதையும் கூற முடியாது. இதைத்தான் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அமைப்பின் முக்கிய உறுப்பினர் தனது உரையில் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

இவற்றை நாம் நன்கு கற்றுத் தேர்ந்து பாராளுமன்றம் என்னும் குகைக்குள் சுகபோகம் அனுபவிக்கும் அவர்களை வீட்டுக்கு அனுப்பும் வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

# சட்டவிரோதமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்வதை எதிர்பார்த்துள்ளோம்

### பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளன ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே அறிவிப்பு



ரணில் விக்கிரமசிங்க, ஒரு ஜனநாயகத் தலைவனாகக் காட்சியளிக்கும் வேளையில், இரத்த வெறி விளையாட்டை மீண்டும் ஆரம்பித்துள்ளார்.ரணில் விக்கிரமசிங்கவினால் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் உள்ள மக்களை மட்டுமே துடைத்தெறிய முடியும் அவர் மக்களின் அழுகையை துடைக்க முடியாது. சட்டவிரோதமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்வதை ஐ.யு.எஸ்.எவ் எதிர்பார்த்துள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளன ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே இவ்வாறான முக்கிய அறிவிப்பை துணிச்சலுடன் அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்றில் முதன்முறையாக,அநேகமான மக்களின் பார்வையில் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனம் (ஐ.யூ.எஸ். எவ் ) வித்தியாசமான தன்மையில் தோன்றுகிறது. இதன் பின்னணியில் உள்ள பிரதான காரணம், “அரகலய “ஜபோராட்டம்ஸ வெற்றிபெற ஐ.யூ.எஸ்.எவ் வழங்கிய பங்களிப்பு ஆகும்.

இலங்கையர்கள், இனம், மதம் அல்லது சமூக வர்க்கம் எதுவாக இருந்தாலும், ராஜபக்ச ஆட்சியால் மோசமடைந்த மிக கடினமான பொருளாதார நெருக்கடிக்கு எதிராக ஒன்றுபட்டு கூட்டாக எதிர்ப்பு தெரிவித்தனர். உணவு, எரிபொருள் மற்றும் மருந்து உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் இல்லாத பொதுமக்கள் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்புக் குரல் எழுப்புவதற்காக வீதிகளில் இறங்கினர்.

ஆங்காங்கே சிதறி காணப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் ஏப்ரல் 9 இல் ஜனாதிபதி செயலகத்தைச் சூழவுள்ள காலி முகத்திடல் பகுதியில் ஒன்றிணைந்து, இலங்கையின் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்ப்பு இயக்கமாக பரிணமித்தது.இப்போது அரகலய –மக்களின் போராட்டம் என்று அழைக்கப்படுகிறது.ஏற்கனவே 100 நாட்களுக்கும் மேலாக நீடித்த அரகலயவின் அழுத்தத்திலிருந்து தப்பி ஓடிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஜூலை 14 அன்று தனது பதவி விலகலை அறிவித்தார்.

மூன்று மாதங்களுக்கும் மேலாக, ஐ.யு.எஸ்.எவ் அரகலயவில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.இந்தப் பின்னணியில், எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ள நிலையில்,போராட்டங்களின் எதிர்கால செல்திசை குறித்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளன ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே.டெய்லி மிரர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கலந்துரையாடியுள்ளார். இதேவேளை, ஐ.யு.எஸ்.எவ் அழைப்பாளர் வசந்த முதலிகே உட்பட ஆறு செயற்பாட்டாளர்களுக்கு வெளிநாட்டுப் பயணத்தடையை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் திங்கட்கிழமை பிறப்பித்திருந்தது .

பேட்டி வருமாறு கேள்வி˙ உங்கள் அமைப்பின் பிரதான இலக்குகள் என்ன?

பதில்: 1978 இல் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டபோது, மூன்று முக்கிய நிறுவன ரீதியான இலக்குகள் இருந்தன.அவை எங்களுக்காக மாறவில்லை. நிபந்தனையின்றி இந்நாட்டு மக்களின் உரிமைகளுக்காக நிற்பது முதலாவதாகும்.இரண்டாவது இலவசக் கல்விக்கான உரிமைக்காகப் போராடுவதாகும்.மூன்றாவது கல்வி விவகாரங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் மாணவர் நலன்களில் தலையிடுவதாகும்.பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனம் இந்த அபிலாஷ‘களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.எனவே ஐ.யு.எஸ்.எவ் என்பது இந்த நாட்டின் பிரஜைகளின் கல்வி உரிமைகளைப் பாதுகாப்பதில் தலையிடும் ஒரு அமைப்பாகும். அத்துடன் இந்த நாட்டின் முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் குறிப்பிடத்தக்க பங்கை கொண்டுள்ளது.

கேள்வி :உங்கள் நடவடிக்கைகளை ஏனைய தேசிய பிரச்சினைகளில் தலையிடாமல் பல்கலைக்கழக பிரச்சினைகளுக்குள் மட்டுப்படுத்த வேண்டும் என்று சில விமர்சகர்கள் கூறுகிறார்கள். உங்கள் கருத்து என்ன?

பதில்:இலவசக் கல்வி என்றால் இந்தக் கல்வியை நாம் இலவசமாகப் பெறுகிறோம். எங்களுக்கு இலவச சீருடைகள், இலவச புத்தகங்கள் மற்றும் மஹாபொல புலமைப்பரிசில் கூட கிடைக்கும்.இருப்பினும், இலவசக் கல்வி தொடர்வதற்கும் விரிவடைவதற்கும் அனைத்து பொது மக்களும் பெரிதும் பங்களிப்பு செலுத்துகிறார்கள். அவர்கள் வரி செலுத்துகிறார்கள்.இந்த நாட்டில் மீனவர்கள் ஆழ்கடலில் உயிரைப் பணயம் வைத்து வரி செலுத்துகிறார்கள்,தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வரி செலுத்துகிறார்கள்,விவசாயிகள் தினமும் உழைத்து வரி செலுத்துகிறார்கள்.எனவே, அரிதாகவே வரி செலுத்தும் மக்கள் உட்பட, அத்தகைய சமூகத்தின் பிரச்சினைகளை புறக்கணிப்பதற்கான வழி இல்லை என்று நாங்கள் நம்புகிறோம்.எனவே, இந்த நாட்டு மக்களின் பிரச்சினைகளில் நாம் தலையிட வேண்டுமென நம்புகின்றோம்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703

4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2

website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# முன்னாள் ஜனாதிபதி கோத்தபாயவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தும் கோரிக்கையை ஆதரிப்பதாக கூறும் கனேடிய கன்சவேடிவ் கட்சி தலைமைக்காக போட்டியிடும் பியர் பொலிவேரா



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்து சர்வதேச நீதிமன்றில் முன்நிறுத்தும் கோரிக்கையை ஆதரிப்பதாக கனேடிய எதிர்க்கட்சியான கன்சவேடிவ் கட்சியின் தலைமைக்கான தேர்தலில் முன்னணியில் உள்ள பியர் பொலிவேரா **(Pierre Poilievre)** தெரிவித்துள்ளார்.

இது குறித்து அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிமன்றத்தை உறுதி செய்ய கனடா அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்பைக் கொண்டுவருவதாகவும் அவர் உறுதியளித்தார்.

தற்போது சிங்கப்பூரில் இருக்கும் கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்வதற்கான கோரிக்கைகளில் இலங்கையின் மனித உரிமை சட்டத்தரணிகளுடன் இணைந்து கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போரினால் கணவனை இழந்த பெண்களுக்கு இழப்பீடுகளை வழங்குமாறும் இலங்கையின் வடக்கு,கிழக்கை இராணுவமயமற்ற பகுதிகளாக்குமாறும் ஒரு தசாப்தத்துக்கு மேலாக வலியுறுத்தி நின்றோம்.

ஆனால் அமைதியான எவ்வித போராட்டங்களும் அற்ற வடக்கு,கிழக்கு உலகில் அதிக இராணுமயமாக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாக மாறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் இன்றைய குழப்பத்துக்கும் சீர்கேட்டுக்கும் ராஜபக்ச அரசே காரணம் என்ற எமது புரிதலை இன்று உலகே புரிந்துள்ளதாகத் தெரிவித்த அவர், தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்குப் பின்னர் நல்லிணக்கத்தை நீண்டகாலம் நாம் வலியுறுத்தியதுடன் அரசியல் கைதிகளின் விடுதலையையும் கோரி நின்றோம்.

அத்துடன் அதிகார வெறி கொண்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்துவிடுங்கள் என்ற இலங்கை மக்களின் கோரிக்கைக்கு மரியாதை செலுத்துமாறும் வேண்டுகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒத்தாசையாக யாழில் கனடிய துணைத்தூதுவராலயத்தை அமைப்போம் எனவும், போர் குற்றவாளிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். அதேவேளை கன்சவேட்டிவ் கட்சிக்கான புதிய தலைவருக்கான தேர்தலில் அக்கட்சியின் உறுப்பினர்கள் தற்போது வாக்களித்து வருகின்றனர்.

அதன் முடிவுகள் வரும் செப்டம்பர் 10ம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். இதில் கன்சவேட்டிவ் கட்சியின் முன்னாள் பிரதமர் ஸ்ரீபன் காப்பர் உட்பட பலரின் ஆதரவைப் பெற்றிருக்கும் பியர் பொலிவேராவே வெற்றி பெறுவார் என்ற நிலையில் அவர் ஈழத்தமிழர் விவகாரத்தில் காத்திரமான கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஈழத்தமிழர் விவகாரத்தில் சர்வதேச அளவில் சிறப்பாக செயற்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட்டை இவ்விவகாரத்தில் தனது ஆலோசகராகவும் பியர் பொலிவேரா நியமித்துள்ளார்.

கனடிய செய்திகள்
Canadian News

BRAMPTON

Media Release

Brampton Library

Brampton Transit

உடனடி வெளியீட்டுக்காக

## நகரில் புதிதாக குடியேறியவர்களுக்கான 'பேருந்து சுற்றுலா' மூலம் ப்ராம்ப்ட்டன் நகரைத் தேடிக்கண்டறியுங்கள்!

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 27, 2022) – ப்ராம்ப்ட்டன் நூலகம் மற்றும் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து நிறுவனம் ஆகியோர் இணைந்து வழங்கும் இலவசப் புதிய பேருந்து சுற்றுலாவை மேற்கொள்ள ஜனவரி 1, 2019க்குப் பிறகு ப்ராம்ப்ட்டன் நகருக்கு புதிதாக குடியேறியவர்கள் தகுதி பெறுகிறார்கள்.

சுற்றுலா பயணங்கள் ஆகஸ்ட் 16 மற்றும் ஆகஸ்ட் 18 ஆகிய தேதிகளில் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை மேற்கொள்ளப்படும். குடியிருப்பாளர்கள் ஆன்லைனில் bramptonlibrary.ca அல்லது 905.793.4636 என்ற எண்ணில் பதிவு செய்து கொள்ளலாம்.

சுற்றுலா பயணத்தின் சிறப்பம்சங்களில் ப்ராம்ப்ட்டன் நகர் மன்றம், பூங்காக்கள், மருத்துவமனைகள், சமுதாய மையங்கள், பேருந்து மற்றும் ரயில் நிலையங்கள் மற்றும் நூலகக் கிளைகள் ஆகியவை அடங்கும். ப்ராம்ப்ட்டனைப் பற்றி அறிந்து கொண்டு வேடிக்கையில் இணையுங்கள்!

பெருந்தொற்றுநோய் காரணமாக இரண்டு வருடகால இடைநிறுத்தத்திற்குப் பிறகு, விருது பெற்ற இந்த சுற்றுலா பயணமானது, பொது நூலக சேவையில் சிறந்து விளங்குவதற்கான **அங்கஸ் மோவாட்** விருது (Angus Mowat Award), பொது நூலக சங்கம் அப்ஸ்டார்ட் இன்னோவேஷன் விருது, மற்றும் கனடியன் நகர்ப்புற போக்குவரத்து சங்கத்தின் (CUTA) விருது போன்ற விருதுகள் பெற்றபடி அங்கீகாரம் பெற்றுள்ளது.

**அறிஞர் கூற்றுக்கள்**

"2019 ஆம் ஆண்டு தொடங்கி, எங்கள் நகருக்குள் புதிதாக குடிபெயர்ந்த குடியிருப்புவாசிகளுக்கு புதியவர்களுக்கான பேருந்து சுற்றுலாவை வழங்க ப்ராம்ப்ட்டன் நூலகத்துடன் மீண்டும் கூட்டு சேருவதில் ப்ராம்ப்ட்டன் நகரம் உற்சாக கொண்டுள்ளது. ப்ராம்ப்ட்டன் ஒரு பலகலவை நகரம் ஆகும், மேலும் எங்கள் நகரம் பலதரப்பட்ட, பன்முக கலாச்சாரம், இளமை மற்றும் சுறுசுறுப்புடன் வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகை கொண்ட நகரமாக உள்ளது. இந்த சுற்றுலா பயணங்கள் புதிய ப்ராம்ப்ட்டன்வாசிகளுக்கு நகரை அறிமுகப்படுத்தும் ஒரு அற்புதமான வாய்ப்பை வழங்குகின்றன; இவை அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன."

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"எங்கள் பயணிகளுக்கு வரவேற்கத்தக்க, அனைத்தையும் உள்ளடக்கிய சூழலை வழங்குவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். புதிய குடியிருப்புவாசிகள் நட்புறவான எங்கள் ஊழியர்களைச் சந்திக்கவும், கேள்விகளைக் கேட்கவும், எங்கள் விரிவான பொதுப் போக்குவரத்து நெட்வொர்க்கின் பலன்கள் மற்றும் வசதிகளை அனுபவிக்கவும் இந்தச் சுற்றுலாப் பயணம் சிறந்த ஒரு வழியாகும்."

*- அலெக்ஸ் மிலோயெவிச், பொது மேலாளர், ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பு*

"புதிய குடியிருப்பாளர்களுக்கு ப்ராம்ப்ட்டன் வழங்கும் விஷயங்களுக்கு அறிமுகத்தை வழங்கும் இந்த பேருந்து சுற்றுலா பயணத்தை மீண்டும் நடத்துவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். ப்ராம்ப்ட்டன் நூலகங்கள், இணைப்புகளை ஊக்குவிக்கும் மற்றொரு வழி இதுவாகும்!"

*- டோட் கைல் (Todd Kyle), தலைமை செயல்பாட்டு அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நூலகம்*

-30-

*ப்ராம்ப்ட்டன் நகரம் பற்றி*

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter, Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ப்ராம்ப்ட்டன் நூலகம்பற்றி**

புத்தகம் மற்றும் சம்பந்தப்பட்ட பொருட்களைக் கடனாகப் பெற, அவற்றை ஆன்லைனில் உங்கள் ப்ராம்ப்ட்டன் நூலக அட்டை எண் மற்றும் பதிவு PIN உபயோகித்து செய்யவும். எங்கள் ஆன்லைன் சேகரிப்புக்களுக்கான இலவச அணுகல் பெற, இ-புத்தகங்கள் மற்றும் இ-கற்றல் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். எங்கள் எட்டு கிளைகளின் வேலை நேரங்கள் மற்றும் முழு விவரங்களைப் பற்றி பார்க்கவும். நிகழ்வுகளுக்கான நாட்காட்டி மூலமாக அனைத்து வயதினருக்குமான மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ற நேரடியான அல்லது மெய்நிகர் நிகழ்ச்சி நிரல்களுக்கு பதிவு செய்யவும். Facebook, Twitter, Instagram, YouTube, மற்றும் LinkedIn, இல் எங்களைப் பின்பற்றவும் மற்றும் iOS மற்றும் கூகிள் ப்ளேயில் ப்ராம்ப்ட்டன் நூலக மொபைல் செயலியை பதிவிறக்க மறக்காதீர்கள். எங்கள் செயலி பற்றி தெரிந்து கொள்ளுங்கள். எங்கள் அலுவலர்களுடன் நேரலை அரட்டை செய்து கேள்விகள் கேட்க எங்கள் வலைத்தளத்திற்கு வருகை தாருங்கள். 905-793-4636ஐ அழைத்து எங்கள் கணினிக்கான அடிப்படை திறன் கட்டமைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பதிவு செய்யுங்கள் அல்லது எந்த ஒரு கிளையிலும் வாடிக்கையாளர் சேவை அலுவலரிடம் பேசுங்கள். உங்கள் செல்லக்குழந்தை படிக்கத் தயாராவதில் அவர்களுக்கு உதவுகின்ற குடும்ப கதை சொல்லும் நேர அட்டவணையை பாருங்கள்!

**ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பு பற்றி**

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பானது கனடா நாட்டின் மிக விரைவாக வளர்ந்து வரும் பேருந்து போக்குவரத்து அமைப்புக்களில் ஒன்றாகும். வசதியான எளிதில் அணுகவல்ல ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பில், 65 க்கும் மேற்பட்ட வழித்தடங்கள் உள்ளன; இவை நகரையும் சுற்றுப்புறத்தில் உள்ள நகராட்சிகளையும் இணைக்கின்றன. Triplinx உதவியுடன் பயணிகள் தங்கள் பயணத்தை திட்டமிடலாம்; e-newsletter க்காக பதிவு செய்யுங்கள் அல்லது Twitter, Instagram மற்றும் Facebook இல் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பை பின்தொடருங்கள். இன்னும் பல தகவல்களுக்கு வருகை தரவும்: bramptontransit.com

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca

ப்ராம்ப்ட்டன் நூலகம்
jdickenson@bramptonlibrary.ca

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

## Four Service Ontario Employees Charged in National Vehicle Theft Ring

# கனடாவில் "வேலியே பயிரை மேய்ந்த" கதை

### சேர்விஸ் ஒன்றாரியோவைச் சேர்ந்த நான்கு பணியாளர்கள் திருடப்பட்ட வாகனங்களை சட்டவிரோதமாக பதிவு செய்வதற்கு உதவினார்கள் என்ற குற்றசாட்டில கைது

கனடாவில் "வேலியே பயிரை மேய்ந்த" கதைக்கு உதாரணமாக ஒன்றாரியோ அரச திணைக்களமான சேர்விஸ் ஒன்றாரியோவைச் சேர்ந்த பணியாளர்கள் நால்வர் குழுவாகச் சேர்ந்து சட்டத்திற்கு முரணான வகையில் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தி துஸ்பிரயோகம் செய்தார்கள் என்று விசாரணைகளின் பின்னர் தெரியவந்துள்ளது.



இந்த பதவித் துஸ்பிரயோகம் செய்த சேர்விஸ் ஒன்றாரியோவைச் சேர்ந்த நான்கு பணியாளர்கள் திருடப்பட்ட வாகனங்களை சட்டவிரோதமாக பதிவு செய்வதற்கு உதவினார்கள் என்ற குற்றசாட்டில கைது செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் அறியப்படுகின்றது.

சர்வீஸ் ஒன்றாரியோவின் நான்கு ஊழியர்கள், சட்டவிரோதமாக திருடப்பட்ட வாகனங்களைப் பதிவுசெய்த குற்றவியல் செயற்பாட்டுக்கு உதவியதற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் - நேற்று வியாழக்கிழமை ஒன்றாரியோ மாகாணப் பொலிசாரின் அறிவிப்பின் பிரகாரம் இந்த கூட்டுத் துஸ்பிரயோகம் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பெற்றுள்ளது.

ஒன்றாறியோ மாகாணக் காவல்துறை (OPP) செப்டம்பர் 2020 இல் இந்த வாகனத் திருட்டு தொடர்பான விடயங்களை கண்டறிய Project Myra என்று பெயரிடப்பெற்ற புலனாய்வை அறிமுகப்படுத்தியது, ரொறன்ரோ பெரும்பாகத்தின் முழுவதும் கார் திருட்டு அலைகள், சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் வாங்குபவர்களுக்கு மறுவிற்பனை செய்வதற்கு முன் திருடப்பட்ட வாகனங்களை மாற்றியமைக்கும் மோசடி நடைமுறைகள் உட்பட பல அதிகார வரம்பிற்கு உட்பட்ட நடவடிக்கையாக. காணப்பட்டன.

இருபத்தி இரண்டு மாதங்களுக்குப் பிறகு, கூட்டு நடவடிக்கை $12 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள 214 வாகனங்களை கடும் நடவடிக்கைகளுக்குப் பின்னர் வெற்றிகரமாக மீட்டெடுத்ததாக ஒன்றாரியோ மாகாண காவல்துறை அறிவித்தது.

குறிப்பாக, ப்ராஜெக்ட் மைரா, புலன் விசாரணைத் திட்டத்தின் படி. திருடப்பட்ட வாகனங்களை மறு- விற்பனை செய்வதற்கும், மோசடியான சூழ்ச்சிகள் மூலம் பதிவுசெய்து, தனிநபர்கள், மற்றும் நீண்டகாலமாக இயங்கிவரும் பிற குற்றவியல் குழுக்கள் அல்லது தங்கள் சொந்த உபயோகத்திற்காக அவற்றை மீண்டும் விற்பதற்குமாக இயங்கிவந்த மூன்று தனித்தனி மோசடி மற்றும் குற்றவியல் அமைப்புகளை கண்டுபிடித்ததாக ஒன்றாரியோ மாகாண காவல்துறை மேலும் தெரிவித்துள்ளது.

ஒன்றாரியோவின் டர்ஹாம் பிராந்தியத்தில் உள்ள குற்றவியல் குழு சஸ்காட்செவனில் மாகாணத்தில் திருடப்பட்ட வாகனங்களைப் பதிவுசெய்தது கண்டுபிடிக்கப்பட்டது, அதற்கு முன்பு புதிய பதிவு மற்றும் மறுவிற்பனைக்காக சட்டவிரோத ஆவணங்களை ஒன்றாறியோவிற்கு மாற்றியது. யோர்க் பிராந்தியத்தில் உள்ள மற்றொரு குற்றவியல் குழு குறிப்பாக விலை அதிகம் கொண்ட உயர்தர வாகனங்களை குறிவைத்தது, மேலும் மூன்றாவது மோசடிக்குழு யோர்க் பிராந்தியத்தில் இயங்கிவந்ததும் கண்டு பிடிக்கப்பட்டது.

ஒன்றாரியோ மாகாண காவல்துறையின் உயர் குற்றவியலைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரி அண்ட்ரு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் . ஒன்றாறியோவில் திருடப்பட்ட வாகனங்களை மாற்றியமைக்கப்பட்ட வாகனத்தின் இயந்திர இலக்கங்கள் மூலம் பதிவு செய்ததில் மூன்று குற்றவியல் வலையமைப்புகளுக்கு உதவியதற்காக ரொறன்ரோ பெரும்பாக்த்தில் இல் சர்வீஸ் ஒன்றாரியோ வின் அலுவலகங்களில் பணியாற்றி நான்கு பணியாளர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தினார்.

இந்த மோசடி வலையமைப்பில் மொத்தம், 28 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் என்றும் மற்றும் துப்பாக்கி மற்றும் போதைப்பொருள் குற்றச்சாட்டுகள் உட்பட 242 குற்றங்களை எதிர்கொள்கிறார்கள் என்றும் அவர்களில் ஐந்து பேர் தற்போது தடுப்புக் காவலில் உள்ளனர் என்றும் மற்றவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர், என்றும் அறியப்பட்டுள்ளது. இந்த மாதமும் அடுத்த மாதமும் பல்வேறு ஒன்றாறியோ மற்றும் சாஸ்கடூன் மாகாண நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்றும் அறியப்பட்டுள்ளது.

"தற்போது ரகசியமாக இயங்கிவந்த மோசடி வலையமைப்புக்கள் அனைத்து தகர்த்து எறியப்பெற்றுள்ளன," என்று ஒன்றாரியோ மாகாண காவல்துறை அதிகாரி அன்ட்ரூ. கூறினார், பொதுமக்கள் இன்னும் விழிப்புடன் இருக்க வேண்டும் மற்றும் அவர்களின் வாகனங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் ஊடகங்கள் மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.



- LJI Journalist Arjune

## ஆராலி கலாச்சார ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் - 2022

ஆராலி கலாச்சார ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், பொதுக்கூட்டமும் எதிர்வரும் August 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 12:00 மணிக்கு வழமைபோல் Sunnybrook Park இன் உட்புறம் Serina Gundy Park, Area 3 இல் (Leslie and Eglinton) இல் நடைபெற உள்ளதால் சகல அங்கத்தினரையும், அராலி ஊர் மக்களையும், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தோடர்புகளுக்கு: செல்வரட்ணம்: (647) 828-4614 இரவிநேசன்: (647) 464-9508
உருத்திரன்: (647) 294-6863 தனராஜா (ஐயா):(416) 726-8569

# கடல் கடந்து நீண்ட ஒரு உதவிக் கரம்

## வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் இருந்து யாழ் வைத்தியசாலைக்கு கிடைத்த மருந்துப் பொருட்கள்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது சமூகத்தின் அனைத்துப் பிஷிவினரையும் மோசமாகப் பாதித்துள்ளது. மருந்துகள், பொருட்கள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மருத்துவமனைகள் பல சவால்களை எதிர்கொள்வதில் சுகாதாரத் துறையும் விதிவிலக்கல்ல. மயக்க மருந்து மற்றும் நுகர்பொருட்கள் பற்றாக்குறையால் பல வாரங்களாக மருத்துவமனைகள் அவசர அறுவை சிகிச்சையை மட்டுமே செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சில முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், பல பொருட்களுக்கு இன்னும் கடுமையான பற்றாக்குறை உள்ளது, இது நோயாளிகளுக்கு திருப்திகரமான சேவையை வழங்குவதில் இலங்கையின் சுகாதார அமைப்புக்கு கடினமாக உள்ளது. அந்நிய செலாவணி நெருக்கடியால் மருந்துகள் மற்றும் மருத்துவ நுகர்பொருட்கள் இறக்குமதியாளர்கள் எதிர்கொள்ளும் சிரமம், தனியார் துறையில் பொருட்களை வாங்குவதைக் கூட கடினமாக்குகிறது.

நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் தேவைப்படும் இந்த நேரத்தில் பல அரசாங்கங்கள், அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் உதவ முன்வந்திருப்பது நாடு அதிர்ஷ்டம். பணம் மற்றும் பொருட்கள் நன்கொடைகள் எங்கள் மக்களின் துயரத்தை எளிதாக்க முயற்சிக்கின்றன மற்றும் இந்த உதவி விலைமதிப்பற்றது.

இவ்வாறான பாதிப்புக்களுக்கிடையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கடந்த சில மாதங்களாக இவ்வாறான உதவிகளை உலகின் பல்வேறு அமைப்புக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை கொண்டுள்ளது இருந்து அந்த வரிசையில் தமிழகத்தின் வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் இருந்து இந்த மருத்துவமனைக்கு சமீபத்திய மிகப்பெரிய உதவி கிடைத்துள்ளது. வேலூர் மருத்துவக் கல்லூரி என்பது சர்வதேச அளவில் புகழ்பெற்ற மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையாகும், இது பல ஆண்டுகளாக இந்திய சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் மிகவும் வெற்றிகரமாக சேவை செய்து வருகிறது. ஆயிரக்கணக்கான இலங்கையர்களும் வேலூர் மருத்துவக் கல்லூரி வழங்கும் உயர்தர மருத்துவப் பராமரிப்பு மூலம் பயனடைந்துள்ளனர்.

வேலூர் மருத்துவக் கல்லூரி என்பது சர்வதேச அளவில் புகழ்பெற்ற மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையாகும், இது பல ஆண்டுகளாக இந்திய சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் மிகவும் வெற்றிகரமாக சேவை மருத்துவ மிஷனரியான Dr. John Scudder, 1819 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் உள்ள பண்டத்தரிப்பில் மருத்துவ மனையை அமைப்பதற்காக அமெரிக்காவின் நியூ இங்கிலாந்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தார். தீவில் எங்கும் பொதுமக்களுக்கு மேற்கத்திய மருத்துவ சிகிச்சைகளை முதன்முதலில் வழங்கியவர். பல வருடங்களாக யாழ்ப்பாண மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அவர், தமிழ்நாட்டின் வட ஆற்காடு மாவட்டத்தில் பணியாற்ற அமெரிக்க மிஷன் குழுவினால் அனுப்பப்பட்டார். கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை நிறுவியவர் அவருடைய பேத்தி டாக்டர். ஐடா ஸ்கடர்!

இவ்வாறான நிலையில் இலங்கையைச் சேர்ந்த பல மருத்துவர்கள் சிஎம்சியில் இளங்கலை மற்றும் முதுகலை நிலைகளில் பயிற்சி பெற்றுள்ளனர். உண்மையில் தற்போது இலங்கையைச் சேர்ந்த ஐந்து இளம் ஆலோசகர்கள் வெளிநாட்டு பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். பல ஆண்டுகளாக, மருத்துவ அதிகாரிகள், மருத்துவத் தாதியர்கள் மற்றும் புற்றுநோய் பிரிவு ஊழியர்கள் உட்பட மற்ற ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் வெளிப்பாட்டிற்கு வேலூர் மருத்துவக் கல்லூரி என்பது சர்வதேச அளவில் புகழ்பெற்ற மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையாகும், இது பல ஆண்டுகளாக இந்திய சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் மிகவும் வெற்றிகரமாக சேவை உதவியுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு உதவுவது தொடர்பில் வேலூர் மருத்துவக் கல்லூரி இன் பணிப்பாளர் Dr. J.V.Peter ஐ தொடர்பு கொண்ட போது அவர் மிகவும் சாதகமாக பதிலளித்து ஒரு குழுவை ஒன்றிணைத்து ஏற்பாடு செய்தார். வேலூர் மருத்துவக் கல்லூரி இந்தியாவிற்கு வெளியே இத்தகைய மனிதாபிமானப் பயிற்சியை மேற்கொள்வது இதுவே முதல் முறை.

யாழ்ப்பாணத்திற்கு இப்போது வந்துள்ள இந்த மருந்துப் பொருட்கள் மற்றும் உப பொருட்கள் அவசரமாகத் தேவைப்படும் மருந்துகள் மற்றும் நுகர்பொருட்கள் உட்பட சுமார் எழுபத்து நான்கு வெவ்வேறு பொருட்கள் உள்ளன. இவற்றின் மொத்த மதிப்பு சுமார் 7.5 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அர்ப்பணிப்புள்ள உதவிக்கு சென்னையில் உள்ள இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயம் மற்றும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஆகியவை கொழும்பில் உள்ள சுகாதார அமைச்சகத்திற்கு கப்பலை அனுப்ப உதவிகள் வழங்கின.

வேலூர் மருத்துவக் கல்லூரி சார்பில், இந்தச் மருந்துப் பொருட்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி அவர்களிடம் சத்திரசிகிச்சை நிபுணரும் வேலூர் மருத்துவக் கல்லூரியின் பழைய மாணவருமான வைத்தியர் தைலன் அம்பலவாணரால் கையளிக்கப்பட்டது.

வேலூர் மருத்துவக் கல்லூரிஇன் இந்த தாராளமான உதவி ஒரு முக்கியமான நேரத்தில் வருகிறது மற்றும் இந்த கல்லூரிக்கும் உலகின் இந்தப் பகுதிக்கும் இடையே ஏற்கனவே இருக்கும் பிணைப்புகளை மேலும் வலுப்படுத்த உதவுகிறது. எதிர்காலத்தில் இப்பகுதிக்கு வேலூர் மருத்துவக் கல்லூரியானது உதவுவதற்கும் ஒத்துழைப்பதற்கும் பல வழிகள் திறந்தே இருக்கும் என்று நம்பப்படுகிறது. இந்த உதவி கரம் யாழ்ப்பாணத்தின் உள்ளூர் சமூகம் எப்போதும் நன்றியுடன் நினைவில் வைத்திருக்கும் ஒன்று என நாம் நம்பலாம்.



தகவல்: டாக்டர் டி.சி. அம்பலவாணர்

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## நடுக்கடலில் தத்தளித்த தமிழக மீனவர்களை காப்பாற்றிய இலங்கை கடற்படை

# தமிழகத்தில் இலங்கை கடற்படைக்கு குவியும் பாராட்டு



நடுக்கடலில் பழுதாகி நின்ற ராமேஸ்வரம் மீன்பிடி விசைப் படகை மீனவர்களுடன் மீட்ட இலங்கை கடற்படையினர் படகின் பழுதை சரி செய்து பின் படகில் இருந்த மீனவர்களுக்கு உணவளித்து பத்திரமாக ராமேஸ்வரம் திருப்பி அனுப்பினர்.

இலங்கை கடற்படையின் இந்த மனிதாபிமான செயல் ராமேஸ்வரம் மீனவர்கள் மட்டுமல்லாமல் தமிழக மீனவர்கள் மத்தியில் பாராட்டை பெற்றுள்ளது.

சனிக்கிழமை (30) ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து சுமார் 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடி அனுமதி சீட்டு பெற்று மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். அதில் ராமேஸ்வரத்தை சேர்ந்த ராஜா என்பவருக்கு சொந்தமான மீன்பிடி விசைப் படகில் சரவணன், அலெக்சாண்டர், அந்தோணி, பாண்டி உள்ளிட்ட 6 பேர் மீன்பிடிக்க சென்று தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

சனிக்கிழமை இரவு சுமார் 11 மணியளவில் திடீரென படகில் உள்ள இன்ஜினில் ஏற்பட்ட கோளாறு காரணமாக படகில் கடல் நீர் புக ஆரம்பித்தயைடுத்து படகு மெல்ல மெல்ல கடலுக்குள் மூழ்க தொடங்கியது.

அதை கவனித்த அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் உடனடியாக மீனவர்களை பத்திரமாக மீட்டு படகில் ஏற்பட்ட எஞ்சின் கோளாறு சரி செய்ய முயற்சி செய்தனர். ஆனால் கடற்படை வீரர்களின் முயற்சி தோல்வியில் முடிந்ததால் உடனடியாக மன்னார் கடற்படை முகாமில் இருந்து மெக்கானிக்கை வரவழைத்து படகை சரி செய்யும் பணியை மேற்கொண்டனர்.

ஆனால் தொடர்ந்து இலங்கை கடற்படை எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. உடனடியாக இலங்கை கடற்படை வீரர் ஒருவர் ராமேஸ்வரத்தில் உள்ள விசைப்படகு உரிமையாளர் செல்போன் எண்ணை வாங்கி வாட்ஸ்அப் மூலமாக "நான் இலங்கை கடற்படை வீரர் பேசுகிறேன், உங்களுடைய படகு பழுதாகி மன்னார் கடற்படை முகாம் அருகே உள்ளது. உடனடியாக வந்து படகை மீட்டுச் செல்லுங்கள்" என வாய்ஸ் மெசேஜ் அனுப்பினர்.

உடனடியாக படகின் உரிமையாளர் ராஜா மீனவர்களையும் படகையும் பத்திரமாக மீட்டு கொண்டு வர ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப்படகு ஒன்றை அனுப்பினர்.

இந்நிலையில் பழுதான படகை இலங்கை கடற்படை வீரர்கள் சர்வதேச கடல் எல்லை வரை இழுத்து வந்து படகின் உரிமையாளர் அனுப்பி வைத்த படகில் மீனவர்களையும் படகையும் பத்திரமாக ஒப்படைத்தனர்.

நடுக்கடலில் பழுதாகிக் கிடந்த படகில் இருந்த மீனவர்கள் 6 பேருக்கும் இலங்கை கடற்படையினர் வாழைப் பழம், பிஸ்கட், உணவு உள்ளிட்டவைகளை அளித்து அவர்களுக்கு முழு உதவி செய்து பத்திரமாக ராமேஸ்வரம் திருப்பி அனுப்பினர்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள மக்கள் உணவின்றி தவிக்கும் சூழ்நிலையில் இலங்கை கடற்பரப்பில் படகு பழுதாகி நின்ற தமிழக மீனவர்களுக்கு உணவளித்து பத்திரமாக திருப்பி அனுப்பிய நிகழ்வு ராமேஸ்வரம் மீனவர்கள் மட்டுமல்லாமல் தமிழக மீனவர்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நடுக்கடலில் இலங்கை கடற்படை ரோந்து கப்பல் சுற்றி வளைத்தது, தங்களை படகுடன் இலங்கை கடற்படை வீரர்கள் கைது செய்து சிறையில் அடைக்க போகிறார்கள் என அச்சமடைந்திருந்த சூழலில் உணவளித்து பத்திரமாக திருப்பி அனுப்பியதற்கு இலங்கை கடற்படைக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக கரை திரும்பிய மீனவர்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.



- மன்னார் நிருபர்

# மடு ஆவணி திருவிழா தொடர்பில் விசேட கலந்துரையாடல் – பல்வேறு தீர்மானங்கள் முன் வைப்பு



எதிர் வரும் ஆவணி மாதம் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள மடு ஆவணி திருவிழா தொடர்பாகவும் முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் முன் ஆயத்த கலந்துரையாடல் திங்கட்கிழமை (1) காலை 11.30 மணியளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் எஸ்.ஜே. பெப்பி சோசை அடிகளார், சுகாதார திணைக்கள அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள், பொலிஸ், ராணுவ அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். இதன் போது மடு திருத்தலத்தின் ஆவணித் திருவிழா தொடர்பாக ஆராயப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் சுமார் 4 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருவார்கள் என்ற காரணத்தால் அதற்கு அமைவாக திணைக்களங்கள் தொடர்பான சேவைகளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் விசேட புகையிரத சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து மடு புகையிரத நிலையத்திற்கும், அநுராத புரத்தில் இருந்து மடு புகையிரத நிலையத்திற்கும் எதிர்வரும் 13ஆம், 14ஆம், மற்றும் 15ஆம் திகதிகளில் வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மடு புகையிரத நிலையத்தில் இருந்து மடு திருத்தலத்திற்கு பேருந்து சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கொரோனா தொற்று மீளவும் ஆரம்பித்துள்ள மையினால் பொதுமக்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்து திருவிழா திருப்பலியில் கலந்து கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

- மன்னார் நிருபர்

# வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் 100 நாள் செயல் முனைவு மன்னாரில் ஆரம்பம்

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப் பொருளில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் நூறு (100) நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு திங்கட்கிழமை (1) காலை 11 மணி அளவில் மன்னார் பிரதான சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் இடம் பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நூறு (100) நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ். திலீபன் மற்றும் கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், மாணவர் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், மன்னார் மெசிடோ பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.

குறித்த செயல் திட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களால் மகஜர் ஒன்று வாசிக்கப்பட்டது.

குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடுகையில், "நாங்கள் நாட்டை துண்டாடவோ, தனியரசு கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம்".

"வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்".

"13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்க துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது".

இலங்கையின் வடக்கு கிழக்கு வாழ் சிறுபான்மை தமிழ் மக்களான நாம் ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகளின் இனவாதக் கொள்கைகளால் பல்வேறு வழிகளிலும் அடக்கப்பட்டு வந்துள்ளோம். அது இன்று வரை தொடர்கிறது.

இதுவே தமிழ் மக்கள் தமக்கான அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பரவலாக்கம் குறித்து சிந்திக்கத் தூண்டியது. இதன் நியாயத்தன்மையை பிராந்திய நட்பு நாடான இந்தியாவும் சர்வதேச நாடுகளும் என்றோ ஏற்றுக்கொண்டுள்ளன.

அதன் விளைவே இந்தியா, இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் சார்ந்து இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் (1987 இன் இந்திய - இலங்கை உடன்படிக்கை), 1999-2008 வரையான காலப்பகுதியில் நோர்வேயின் மத்தியத்துவம் மற்றும் 2002இல் இலங்கையில் சமாதானம், புனர்வாழ்வு மற்றும் மீளக் கட்டுமானம் சார்ந்து பங்களிப்பு செய்வதற்கு ஜப்பானின் அமைச்சரவை திரு. யசூசி அகாசி அவர்களை நியமித்தமை ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

1987 இன் பின்னர் இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசுகள் எதுவுமே



அதிகாரப்பரவலாக்கத்தை நிராகரிக்கவில்லை. விரும்பியோ விரும்பாமலோ அவர்கள் அதிகாரப் பரவலாக்க உரையாடலை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது.

1987இல் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான 13வது திருத்தச்சட்டத்தை அரசியலமைப்பில் இணைத்தார்.

1990இல் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அரசியல் தீர்வுகளுக்கான திட்டங்களை முன்வைத்தார். இவரின் காலத்தில், 1991இல், திரு. மங்கள முனசிங்க தலைமையில் 45 பேர் கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டு தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

1994 திருமதி. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாயிருந்த காலத்தில், 1995இல் திரு. நீலன் திருச்செல்வம் மற்றும் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தலைமையில் "ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு" அடங்கலான தீர்வுப் பொதி தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

2001இல் ஆட்சிக்கு வந்த திரு. ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக கொண்ட அரசாங்கம் நோர்வே மத்தியத் துவத்துடன் சுயாட்சி (பெடரல்) முறையில் அதிகார பரவலாக்கத்துக்கு இணங்கியது நினைவுகூறத்தக்கது.

2015இல் ஆட்சிக்கு வந்த விக்கிரமசிங்க - சிறிசேன "நல்லாட்சி" அரசு, ஐ.நா. மனித உரிமைப் பேரவையால் ஏற்கப்பட்ட தீர்மானத்தின் இணைப்பங்காளியாக இருந்தது. இத்தீர்மானத்தின் செயற்பாட்டு உறுப்புரை 16 ஆனது, அரசியல் தீர்வை, அதிகாரப் பரவலாக்கத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வலியுறுத்துகிறது.

அவ்வகையில், வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு, அதிகாரப் பரவலாக்கம் என்பது இலங்கையின் அரசியலமைப்பின் அங்கமாயிருப்பதுடன், சர்வதேச சமூகத்தினால், ஐக்கிய நாடுகள் சபையினாலும் வரவேற்கப்படுகின்ற ஒன்றாகும்.

ஆகவே, எமக்கான உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசுக்கும், நட்பு நாடான இந்தியாவுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் வலியுறுத்தி கொண்டு வடக்கு கிழக்கு வாழ் மக்களான நாம், எமது சாத்வீகமான, ஜனநாயகமான நூறு நாட்கள் செயல்முனைவு ஆவணி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கிறோம். "வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" என குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மன்னார் நிருபர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கஜிவத்தை பகுதியில் உள்ள புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் தூய அந்தோனியார் திருச் சொரூபங்கள் இரண்டு உடைப்பு



முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குற்பட்ட கஜிவத்தை பகுதியில் பல வருடங்களாக காணப்பட்ட புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் உள்ள தூய அந்தோனியார் திருச் சொரூபங்கள் இரண்டு இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளதாக கொக்குப்படையான் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொக்குப்படையான் கிராம மக்கள் கஜிவத்தை பகுதியில் பல வருடங்களாக காணப்பட்ட புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் செவ்வாய்க்கிழமை (2) மாலை ஆராதனைகளை மேற்கொள்ள சென்றிருந்தனர்.

இதன் போது குறித்த சிற்றாலயத்தில் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1 மற்றும் 3 அடி உயரம் கொண்ட அந்தோனியார் திருச் சொரூபம் உடைக்கப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் குறித்து உடனடியாக சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக கொக்குப்படையான் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**

# வவுனியா பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் அமைப்பதற்கான திட்டம் அறிக்கை அங்கிகரிக்கப்பட்டது




வவுனியா பல்கலைக்கழகத்திற்கு மருத்துவபீடம் ஒன்றை அமைப்பதற்கான திட்டமுன்மொழிவை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கிகாரத்திற்காக சமர்ப்பிக்கவுள்ளதாக துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், மருத்துவபீடம் ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவை எமது மூதவையும் பேரவையும் ஏற்றுக்கொண்டுள்ளன. தற்போது அதற்கான திட்டமுன்மொழிவினை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பவுள்ளோம். இதன் மூலம் வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலையையும் ஒரு போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவால் எமது திட்ட அறிக்கை அங்கிகரிக்கப்பட்டதுடன் அதன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படும். குறிப்பாக எதிர்வரும் சில வருடங்களுக்குள் மருத்துவ பீடத்தினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன் சூழலியல் பீடம் ஒன்றினை உருவாக்குவதற்கும் எமது மூதவையும் பேரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. வங்கியியல், காப்புறுதி தொடர்பான புதிய கற்கைநெறி ஒன்றை ஆரம்பிப்பதற்கு மானியங்கள் ஆணைக்குழு எமக்கு அனுமதி வழங்கியுள்ளது. குறித்த கற்கைநெறிக்கு க.பொ.த உயரதரத்தில் கடந்தவருடத்தில் சிறப்புத்தேர்ச்சிபெற்ற மாணவர்களை அனுமதிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றது. மானுடவியல் சமூகவியல் என்ற பீடத்தை ஆரம்பிப்பதற்கான முன்மொழிவையும் சமர்ப்பித்துள்ளோம். அதற்கான அனுமதி கிடைத்ததும் அது விரைவில் ஆரம்பிக்கப்படும்.

பொருளாதார நெருக்கடி நிலமையால் அரசாங்கம் சாதாரண செலவீனங்களை வழங்குவதற்கே உடன்பட்டுள்ளது. நிர்மாண துறைகளிற்கான நிதியினை தராத சூழ்நிலையில் அதனை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதி உதவிகளூடாகவும், அரச தனியார் பங்குடமையின் ஊடாகவும் அதனை செய்வதற்கான திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம் என்றார்.

# கதிர்காம தலத்திற்கு அடியார்கள் காட்டு வழியாக பாதயாத்திரை



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. கதிர்காமம் தலத்திற்கு அடியார்கள் காட்டு வழியாக பாதயாத்திரை செல்வது பன்னெடுங்காலமாக இடம்பெற்று வருகின்றது.

உகந்தமலை தலத்திலிருந்து கதிர்காமத்திற்குச் செல்லும் காட்டுப்பாதை கடந்த ஜுலை மாதம் 22 ஆம் திகதி திறக்கப்பட்டிருந்தது. உகந்தைமலையிலிருந்து கதிர்காமம் வரை 56 மைல்கள் தூரம் ஆகும். உகந்தமலை முருகன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமான பாதயாத்திரை தற்போது கதிர்காமத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. முதலாவதாக வாகூரவெட்டை என்னுமிடத்துக்குச் சென்றதையடுத்து அங்கு வண்ணாத்திக்கிணறு என்ற பழைய கிணறு உள்ளது. இங்கு இரவு வேளையில் பஜனை, பக்திப் பாடல்கள்பக்தர்களால் இசைக்கப்படுகின்றன. மறுநாள் காலையில் அவ்விடத்தில் கற்பூரமெரித்து தேவாரம்பாடி தமது பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து குமுக்கன் ஆறு, குமுனையை அடைகின்றனர். அங்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாள் தங்குவார்கள். அங்கு ஒரு அம்மன் கோயில் உள்ளது. கோயிலுள்ள அம்மனை "கவளத்தம்மா" என்று அழைப்பார்கள். அந்த வழியால் செல்பவர்கள் தாம் உண்ணும் உணவில் ஒரு "கவளம்" உணவை அந்த அம்மனுக்கு படைப்பதால் "கவளத்தம்மா" எனப் பெயர் வந்தது. அங்கு ஆலயத்தின் பின்புறமாக ஒரு பெரிய மரம் நிற்கின்றது. அவற்றில் கொத்துகளை கட்டி வழிபடுவார்கள்.

அடியார்கள் மோதகம், அவல், கடலை, பொங்கல் படைத்து பூசை செய்து வழிபட்டு பின்னர் கற்பூரம் எரித்து தேவாரம் பாடி குமுக்கன் ஆற்றை கடந்து சென்று நாவலடியை அடைகின்றனர்.

நாவலடியிலே ரொட்டி சுட்டு வைரவரை வழிபாடு செய்வதுடன், நாகதம்பிரானுக்கும் பொங்கல் பொங்கிப் படைத்து வழிபட்டு காலையில் தமது இடத்தில் கற்பூரம் எரித்து தேவாரம் பாடி பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

தொடர்ந்து நீண்ட பயணம் தொடரும். இதனால் தொலையாப்பளை வட்டை என்று அந்த இடத்துக்கு பெயர் வழங்கப்படுகின்றது. இவ்வெளி கழிந்தவுடன் "வியாள" யால என்று சொல்லப்படுகின்ற இடத்தினை வந்தடைகின்றனர். இங்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கியிருப்பார்கள். இங்கு தங்குபவர்கள் பாரம்பரியமாக மரத்தினால் வேல் செய்து அதனை ஆற்றில் நீராட்டி ஆற்றோரம் பந்தலமைத்து அங்கு அவ்வேலை எடுத்து வந்து வைத்து அவல், மோதகம், பொங்கல் படைத்து பஜனை செய்து வழிபட்டு இரவுப்பொழுதை கழிப்பர். காலையில் தமது இடத்தில் கற்பூரம் எரித்து பயணத்தினை ஆரம்பிக்கின்றனர்.

தொடர்ந்து வள்ளியம்மன் ஆறுபாலம் எனும் இடத்தை அடைந்து சற்று இளைப்பாறிய பின்னர், கதிரமலை கண்ட இடத்தை அடைந்து அங்கு இருக்கின்ற வேலை வழிபட்டு பின்பு கட்டகாமத்தை வந்தடைகின்றனர். இங்கு யானைகள் மிகுந்த இடம் இருப்பினும் கதிர்காமக்கந்தனின் பெருவருழினால் பக்தர்களுக்கு மனத்தைரியம் கிடைத்து விடுகின்றது. சிலர் மதியம் உணவு உண்டு விட்டு தொடர்ந்து செல்வார்கள். இவ்வாறு நடந்து சென்று பின்னர் வீரச்சோலை அல்லது பிள்ளையாரடி எனும் இடத்தினை அடைந்து இரவு தங்குவர். மறுநாள் காலையில் தமது இடத்தில் கற்பூரம் எரித்து தேவாரம் பாடி பயணத்தினை தொடர்கின்றனர். செல்லுகின்ற போது அரோகரா அரோகரா என்ற கோசத்துடன் காவடிச்சிந்து பாடிச் செல்வர். அவர்கள் பக்திப்பரவசத்தோடு கதிர்காமத்தினை அடைகின்றனர். அங்கு சென்றதும் மாணிக்கக்கங்கையில் நீராடி மாணிக்கப்பிள்ளையாரையும் கதிர்காமக் கந்தனையும் வழிபாடு செய்து, ஏனைய கோயில்களை வழிபாடு செய்வர். மறுநாள் கதிரமலை, செல்லக்கதிர்காமம் சென்று வழிபடுகின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க பாதையாத்திரையின் மகிமைகளும் அனுபவச் சிறப்புக்களும் ஏராளம் ஆகும். அதிகமான பக்தர்களின் புதிய அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு சமைத்து உண்ணல், ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பாங்கு, உடல் சுகாதாரம், ஒற்றுமை சமத்துவம், பஜனை, கூட்டுப் பிரார்த்தனைகள்என்பவை கதிர்காமம் யாத்திரையில் கிடைக்கும் சிறப்பான அனுபவங்களாகும். மேலும் காடுகள், குளங்கள், ஆறுகள், களப்புக்கள், வெளி, மலை, மணல், சேறு, தென்றல், குளிர்காற்று, கச்சான் காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி என பல அனுபவங்களை அனுபவித்தே இத்தகைய பாதயாத்திரையை மேற்கொண்டு அடியார்கள் கதிர்காமக்கந்தன் சன்னிதானத்தை அடைந்து திருவருள் பெறுகின்றனர்.

**- நாராயணபிள்ளை நாகேந்திரன்**

# படகு கவிழ்ந்து விபத்து 16 மணி நேரம் நீந்தி வேதாரண்யம் கரைசேர்ந்த இலங்கை மீனவர்கள்



கடல் சீற்றம் காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இலங்கையை சேர்ந்த மீனவர்கள் இரண்டு பேர் 16 மணிநேரம் நீந்தி வேதாரண்யம் அருகே கரை சேர்ந்துள்ளனர். இலங்கை பலாலி என்ற பகுதியில் இருந்து ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு பைபர் படகில் ஜனார்தனன், ஜெசிகரன் ஆகிய இரு மீனவர்களும் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர். நேற்று மதியம் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது திடீரென்று கடல் சீற்றம் மற்றும் காற்றின் காரணமாக படகு நிலைதடுமாறி கடலில் கவிழ்ந்து விட்டது.

படகு கவிழ்ந்து நடுக்கடலில் தத்தளித்த 2 மீனவர்களும் செய்வது அறியாது உயிருக்கு போராடியுள்ளார். அப்போது படகில் இருந்த பிளாஸ்டிக் கேன் கடலில் மிதந்துள்ளது. அந்த கேனில் டீசல் இருந்துள்ளது டீசல் எடுத்து கடலில் ஊற்றிவிட்டு மிதவையாக கேனை பிடித்து கொண்டு உயிருக்கு போராடி 16 மணி நேரம் நீந்தி வேதாரண்யம் அடுத்த சிறுதலைகாடு கடல் கரை பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இதைக்கண்ட அப்பகுதி மீனவர்கள் வேதாரண்யம் கடலோர காவல் நிலைய போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவலின் பேரில் இரண்டு இலங்கை மீனவர்களையும் உணவு அளித்து காவல் நிலையம் கொண்டு விசாரணை செய்து வருகின்றனர்.

இந்தியா செய்திகள்
India News

# தில்லியில் நடைபெறவிருந்த ஈழத்தமிழர் ஆதரவு மாநாட்டிற்குத் தடை! இந்திய அரசின் போக்கிற்கு பழ. நெடுமாறன் கடும் கண்டனம்



01-08-2022

தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பின் சார்பில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கும் வகையில் தில்லியில் 30.07.2022 சனிக்கிழமை அன்று நடைபெறவிருந்த ஈழத் தமிழர் பிரச்சனைக் குறித்த மாநாட்டிற்கு இந்திய அரசு தடை விதித்ததை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மாநாடு நடைபெறவிருந்த மண்டபத்தை காவல்துறையினர் பூட்டியதையும், தமிழ்நாட்டிலிருந்து கலந்துகொள்ள சென்ற மாணவர்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றி வளைத்து மத்திய காவல்படை நிறுத்தப்பட்டு அவர்கள் சிறை வைக்கப்பட்டது போன்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டது அப்பட்டமான மனித உரிமை மற்றும் கருத்துரிமை மீறலாகும்.

பல்வேறு நாடுகளில் நடைபெறும் இனப்படுகொலைகளைக் கண்டித்துப் பல மாநிலங்களில் கட்சிகள் ஆர்ப்பாட்டங்கள், மாநாடுகள் நடத்துகின்றன. ஆனால், ஈழத் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட பிரச்சனைக் குறித்து நடத்தப்பெறும் நிகழ்ச்சிகளுக்கு மட்டும் தடைவிதிக்கப்படுவது தமிழின எதிர்ப்போக்காகும். இதற்கு எதிராக மனித உரிமை அமைப்புகளும், கட்சிகளும் கண்டனக் குரல் எழுப்ப வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

அன்புள்ள,

பழ.நெடுமாறன்
தலைவர்

# சென்னை விமான நிலையத்தில் வெளிநாட்டுக்கு கடத்த முயன்ற வெளிநாட்டுப் பணம் பறிமுதல்



சென்னையில் இருந்து துபாய்க்கு விமானத்தில் கடத்த முயன்ற வெளிநாட்டு கரன்சிகளை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து விமானத்தில் பயணம் செய்ய வந்த பயணிகளை விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகள் கண்காணித்தனர். அப்போது துபாய் செல்ல வந்த சென்னையை சேர்ந்த இளைஞரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது, அவர் முன்னுக்கு பின் முரணாக பேசினார். இதையடுத்து அவரது உடைமைகளை சோதனை செய்தனர். அப்போது அவருடைய டிராலி பை மீது சந்தேகம் கொண்டனர். அதில் ரகசிய அறை வைத்து வெளிநாட்டு கரன்சிகளை மறைத்து வைத்து இருந்ததை கண்டுபிடித்தனா. அவற்றில் இருந்து கட்டுக்கட்டாக அமெரிக்க டாலர்கள், யூரோ கரன்சிகள் மறைத்து வைக்கப்பட்டு இருந்தன. அவரிடம் இருந்து 24 லட்சத்தி 37 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கரன்சிகளை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனா. இது தொடர்பாக அவரை கைது செய்த சுங்க இலாகா அதிகாரிகள் ஹவாலா பணமா என விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இணையவழி சூதாட்டம் "ரம்மி" விளையாடி ரூ.5 லட்சம் இழந்த பட்டதாரி இளைஞர் தற்கொலை



நாமக்கல் மாவட்டம் பட்டணம் கிராமத்தில் ஆன்லைன் ரம்மி விளையாடி 5 லட்சம் ரூபாயை இழந்த பட்டதாரி இளைஞர் தற்கொலை செய்துகொண்டார். நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த பட்டணம் பகுதியை சேர்ந்தவர் விஸ்வநாதன். இவர் அரசு பேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார். இவருடைய மகன் சுரேஷ், பி.காம் படித்துவிட்டு வெளிநாட்டில் வேலை பார்க்க முயற்சி செய்து வருகிறார். நாள் முழுவதும் வீட்டில் உள்ள சுரேஷ் அடிக்கடி ஆன்லைன் ரம்மி விளையாடி வந்ததாக கூறப்படுகிறது. நாளடைவில் ஆன்லைன் ரம்மிக்கு அடிமையான சுரேஷ், தொடர்ந்து ஆன்லைனில் ரம்மி விளையாடி வந்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு ஆன்லைன் ரம்மியில் விளையாடியபோது சுமார் 5 லட்சத்திற்கும் மேல் பணத்தை இழந்துள்ளார். இதில் மனமுடைந்த சுரேஷ், ரம்மி விளையாட்டில் இருந்து மீள முடியவில்லை என்று கூறி "Bye Bye Miss U ரம்மி" என கடிதம் எழுதி வைத்துவிட்டு தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். கடிதத்தில் யார் யாரிடம் எவ்வளவு பணம் வாங்கியுள்ளேன் என்பதை தெளிவாக எழுதி வைத்துவிட்டு சென்றுள்ளார். ஆன்லைன் ரம்மி விளையாட்டால் இளைஞர் தற்கொலை செய்து கொண்டது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# சுமந்திரன் தமிழர்களின் சமகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஒரு புற்று நோய் என்கிறார் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கச் செயலாளர்

இலங்கை செய்திகள் Sri Lanka News



சுமந்திரன் தமிழர்களின் சமகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஒரு புற்று நோய். சுமந்திரனும் சம்பந்தனும் தமிழர்களுக்குச் செய்த எந்த காரியம் எமக்கு நன்மை பயக்கும் என்று கேட்க விரும்புகின்றோம். நீங்கள் ஒரு நன்மையையும் பெயரிட முடியாது. தமிழ் விடுதலையாளர்களை அரசியல்வாதிகளாகவோ அல்லது முடிவெடுப்பவர்களாகவோ வைத்திருந்தால் மட்டுமே தமிழர்களின் இறையாண்மையை மீள் எடுக்க முடியும் என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் தெரிவித்தார்.

இன்று ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறிய உதவவும், தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வகையில் பொது வாக்கெடுப்பு நடத்துவதற்கு இந்த நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நமது தொடர்ச்சியான போராட்டத்தின் 1990 நாளாகும்.

பேச்சு, சங்கம், கூட்டம், மதம் மற்றும் இயக்கம் ஆகியவற்றின் சுதந்திரங்கள் ஆரோக்கியமான ஜனநாயகம் மற்றும் வலுவான சிவில் சமூகத்திற்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. இந்த விழுமியங்கள் ஒவ்வொரு மனிதனையும் தங்கள் சொந்த நாட்டில் பாதுகாக்கும். இந்த விழுமியங்களைப் பாதுகாக்கக்கூடிய தலைவர்கள் நமக்குத் தேவை.

வட-கிழக்கில் தமிழர்கள் அரசியல் உரிமைகளோ பொருளாதார பலமோ இன்றி திறந்தவெளிச் சிறையில் அடைக்கப்பட்டு ஒவ்வொரு நிமிடமும் இராணுவத்தினராலும் உளவு முகவர்களாலும் கண்காணிக்கப்படுகின்றனர்.

தமிழர்களுக்கு இறையாண்மை இல்லாத வரை, நமது பணக்காரர்கள், உயர் கல்வியறிவு மற்றும் திறமையான புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து முதலீடு இங்கு வரப்போவதில்லை.

இந்த பொருளாதார நெருக்கடியின் போது இலங்கையுடன் கைகோர்த்து தமிழர்களுக்கு ஆதரவளிக்க மறுத்த இந்திய அதிகாரிகளின் ஆணையை ஏன் வுயே கேட்டு டலஸ்க்கு வாக்களித்தார்கள்?

இந்தியா நமது நண்பன் அல்ல. அவர்கள் எமது நண்பரை போல செயல்படுகிறார்கள், ஆனால் இந்தியர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு உடன்பட இலங்கையை அச்சுறுத்த தமிழர்களை இந்தியா பயன்படுத்துகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனுமதியின்றி சுமந்திரனும் சாணக்கியனும் சீனத் தூதுவரை இரகசியமாகச் சந்தித்தது ஏன்? அனுமதி கொடுத்தது யார்? இவர்கள் இருவரும் தங்களது சொந்த நலனுக்காக சீனர்களை ரகசியமாக சந்தித்ததாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மாவை தமிழரசு பாட்டியை சீர்திருத்த வேண்டும், இல்லையெனில் கட்சியை விட்டு விலக வேண்டும். கொழும்பில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளை வடக்கு கிழக்கு அரசியலில் இருந்து அகற்ற வேண்டிய நேரம் இது. அவர்களால் கடந்த கால செயலால் இன்றும் தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது வரலாறு. வடகிழக்கில் பிறந்த தமிழ்த் தலைமைகள் தமிழர் தாயகத்தில் தமிழர்களைக் கவனித்து வந்ததையும் வரலாறு காட்டுகிறது.

10 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நடத்தை தமிழர்களுக்கு சங்கடமாகவும் வெட்க்கமாவும் உள்ளது. தமிழ் அரசு கட்சி கூட்டம் நடத்தி சுமந்திரனை ஒழிக்க வேண்டிய தருணம் இது.

சுமந்திரன் தமிழர்களின் எதிர்காலத்திற்கும் தற்போதும் ஒரு புற்று நோய். சுமந்திரனும் சம்பந்தனும் தமிழர்களுக்குச் செய்த எந்த காரியம் எமக்கு நன்மை பயக்கும் என்று கேட்க விரும்புகின்றோம். நீங்கள் ஒரு நன்மையையும் பெயரிட முடியாது.

தமிழர்கள், விடுதலையாளர்களை அரசியல்வாதிகளாகவோ அல்லது முடிவெடுப்பவர்களாகவோ வைத்திருந்தால் மட்டும் தமிழர்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும்.

தமிழர்களுக்கு நன்மை பயக்கும் அல்லது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் துணிச்சலுடன் முடிவெடுக்கும் புதிய தலைமுறை இளம் தமிழ் அரசியல்வாதிகள் தேவை.

நமது அரசியல் தீர்மானத்தை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் மட்டுமே தீர்க்க முடியும் என்பதையும் நாங்கள் அறிவோம். நமது அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வாக்கெடுப்புக்கு ஆதரவைப் பெற ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் பயணிக்கக்கூடிய இளம் அரசியல்வாதிகள் தேவை.

மாவை கட்சியை செம்மைப்படுத்த வேண்டும், இல்லாவிட்டால் விரைவில் யாழ் விளையாட்டு மைதானத்தில் “கோ ஹோம் TNA” போராட்டம் நடத்தப்படும்.

நன்றி,

கோ. ராஜ்குமார்
செயலாளர் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம்
ஆகஸ்ட் 01, 2022

# பௌத்த தேசியவாதமும், யுத்த வெற்றி வாதமும், ராணுவ மேட்டிமைத்தனமும் தோற்றுவிட்டது என்பதை உணருங்கள்

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் அவசர கடிதம்

வலிமையான ஜனநாயக கட்டமைப்பை உருவாக்கி இன ஐக்கியத்தை ஏற்படுத்த உளப்பூர்வமாக செயலாற்றுவார்கள் என்று மிகுந்த நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம். ஏனெனில் மூன்று தசாப்தமாக நீங்கள் கண்ட பெருங்கனவு பேரதிஸ்ரமாக நிறைவேறியுள்ளது. ஆகவே இலக்கை எட்டுவதற்கு அதிகாரம் கிடைத்துள்ளதால் இலகுவாக இருக்கும் என நம்புகிறோம்.என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு செவ்வாய்கிழமை (2) அனுப்பி வைத்துள்ள குறித்த கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், முதலில் பொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்தி சாமானியனின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழி கோலுங்கள். அதுவே இன்றைய அத்தியாவசிய அடிப்படை தேவை. குறிப்பிட்ட காலத்துக்குள் உலக ஒழுங்கு நடப்பியலுக்கமைய பொருளாதார நிலையியலை சீர்படுத்துவீர்கள் என பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

ஏற்றுமதி செய்யக்கூடிய உள்நாட்டு உற்பத்தியை அதிகம் ஊக்குவியுங்கள், போர்க்கால அடிப்படையில் அதனால்தான் அன்னிய செலவாணியை ஈட்ட முடியும். எனவே கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கு ஏற்ற முறைமையை (சிஸ்ரம்) உருவாக்கவில்லை. தூய அரசியலை மேற்கொள்ளாமல் சாக்கடை அரசியலை மேற்கொண்டு நாட்டை அழிவுப் பாதையில் இட்டு செல்லப்பட்டுள்ளது.

காரணம் பல்லினத்தன்மை அற்ற பௌத்த தேசியவாத மேட்டிமையை போக்கை முதன்மைப்படுத்தியதன் விளைவே இந்த நிலைமைக்கு அடிப்படைக் காரணம். ஆகவே பௌத்த தேசியவாதமும், யுத்த வெற்றிவாதமும், இராணுவ மேட்டிமைத்தனமும் தோற்றுவிட்டது என்பதை இனியாவது உணருங்கள்.

சிங்கள கடும் போக்காளர்களுக்கு உணர்த்துங்கள். புத்தரின் தம்மபதக் கோட்பாட்டை இனியாவது நடைமுறைப்படுத்த முனையுங்கள். நாட்டுக்கு நாடு கடன் பெற்று இலங்கை பொருளாதாரத்தை நிலை நிறுத்த முடியாது என்பதை இதுவரை உணர்ந்ததாக தெரியவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும் வரை இலங்கைத் தீர்வு சுபிட்சமாக முன்னோக்கி நகர்தல் என்பது வெறும் பகட்டு பகல் கனவு. அது உதட்டளவு டன் உரு மறைந்து போகும் என்பதை தாங்கள் உணராதவர் அல்ல. ஆகவே இடைக்கால தீர்வையாவது முன்வையுங்கள். புலம்பெயர்ந்த இரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் பெரும் பங்காற்றுபவர்கள்.

தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமை வழங்க வேண்டும். என்பதிலும் அதிகாரப் பகிர்வு மூலமே இன முரண்பாட்டிற்கு முற்றுப்புள்ளி இட முடியும் என பல சந்தர்ப்பங்களில் தாங்கள் வெளிநாட்டு ராஜ தந்திரிகளுக்கும் தமிழ்த் தலமைகளுக்கும் வெளிப்படுத்தி உள்ளீர்கள். 2002 உடன்படிக்கை இதற்கு சிறந்த உதாரணம். வரலாறு தங்களுக்கு பெரும் வாய்ப்பை வழங்கியிருக்கிறது. அதை சரியாக பயன்படுத்தி வரலாறாக வாழ்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆகவே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல பல முடிவுகளை துணிகரமாக தேர்தல் அரசியல் கடந்து எடுக்க வேண்டும். வருமானம் வரக்கூடிய அரச திணைக்களங்கள் பல ஊழலில் மூழ்கிக் கிடக்கின்றன. அவற்றை உடனடியாக மீட்டெடுங்கள். காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வருபவர்கள் நாட்டைப்பற்றி தேசாபிமான விசுவாசமின்றி வினைத்திறனற்ற அரசு நிறுவனங்களை உருவாக்கி வகை தொகையின்றி அரச ஊழியர்களை நியமனம் செய்துள்ளீர்கள்.




இந்த நாட்டிற்கு பெரும் சுமை அரச ஊழியர்களே! அதிகமானவர்கள் நாட்டிற்கும் பொருளாதாரத்திற்கும் எந்த பங்களிப்பும் இல்லை வினைத்திறன் அற்றவர்கள் பட்டதாரியானால் அரச நியமனம் வழங்க வேண்டும் என்பது மிகத் தவறான கொள்கையாகும். தங்களின் 2003ம் ஆண்டு ஆட்சியில் கொண்டுவந்தது போல் சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வந்து அரச ஊழியர்களை அரைவாசியாக குறையுங்கள் யுத்தம் முடிவுற்று பதின்மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன நான்கு இலட்சத்திற்கு மேற்பட்ட முப்படையினர் எதற்கு நாட்டின் பொருளாதார இழப்பில் பெரும் பங்கு இராணுவ செலவீனமே. இனம் கடந்து தேசமாக சிந்தியுங்கள்.

சனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள் இவர்களின் உச்சபட்ச வேதனத்தையும் சிறப்பு சலுகைகளையும் சாதராண வாழ்க்கைக்கு ஏற்றது போல குறையுங்கள். பாராளுமன்றம் கூடும் நேரகாலத்தை குறையுங்கள் அர்த்தமில்லாத பயனற்ற விவாதங்களே அதிகம் நடக்கின்றது. கால நீடிப்பு செய்யப்பட்ட அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் உடனடியாக கலையுங்கள் மாதாந்தம் பாரிய செலவு ஏற்படுகிறது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை எந்த வித அரசியலும் இன்றி சுயாதீனமாக செயற்பட அனுமதியுங்கள் சாதாரணமாக அரசியலுக்கு வந்து கோடிஸ்வரராக மாறிய அனைத்து அரசியல்வாதிகளின் சொத்துக்களை அரசுடமையாக்குங்கள்.

வினைத்திறனின்றி இருக்கும் அரச அதிகாரிகளை உடனடியாக மாற்றுங்கள் ஓய்வு பெறும் வயதை அறுபதாக குறையுங்கள் இல்லாவிட்டால் அரச திணைக்களங்கள் முதியோர் இல்லங்களாக மாறிவிடும். நிலையாக நின்று நிலைக்கக் கூடிய ஒற்றையாட்சி அல்லாத புதிய அரசியல் அமைப்பை உருவாக்குங்கள். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விரைவாக விடுதலை செய்யுங்கள் அல்லது மாற்றுவழி தேடுங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு விரைந்து தீர்வு காணுங்கள் உண்மையை கண்டறிந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள்.

தொல்பொருள் திணைக்களம், வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, கனியவளத்திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக நில அதிகரிப்பை நிறுத்த வேண்டும், அபகரித்த நிலத்தை உடனடியாக விவசாய உற்பத்திக்காக விடுவிக்க வேண்டும். வடகிழக்கில் பௌத்த விகாரைகள் அமைப்பதை நிறுத்த வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டதத்தை நீக்க வேண்டும். வடகிழக்கில் உள்ள இராணுவம் குறைக்கப்பட வேண்டும்.

ஆகவே இணைந்து முன் நோக்கி நகர்தலுக்கு தங்களின் நல்லெண்ண தாராளாத செயற்பாடே இன ஐக்கியத்திற்கு வழிவகுக்கும் என்பதை கடந்த கால பட்டறிவுடன் தெரிவித்து கொள்கிறோம். என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்துகின்ற எந்த செயற்பாட்டையும் நாங்கள் ஏற்க மாட்டோம்

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

இலங்கை பொருளாதார ரீதியாக நலிவடைந்து மக்களுடைய அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இருக்கின்ற இந்த சூழ்நிலையில் ஒரு ராஜதந்திர நடவடிக்கையாக இலங்கை அரசாங்கம் செயல்படவில்லை. ஏனெனில் இந்தியாவினுடைய புலனாய்வு அறிக்கையின் படி சீனாவினுடைய உளவு கப்பல் வருகை என்பது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பாரிய ஒரு இடைவெளியை கொண்டு வரும் என நாங்கள் நினைக்கிறோம். என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (2) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களுடைய பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் இந்தியா பெரும் பங்கு வகிக்கின்றது. சீனாவின் உளவு பார்க்கும் கப்பல் இலங்கை நோக்கி வருகை என்பதை இலங்கை அரசு மற்றும் ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும். எங்களைப் பொறுத்தமட்டில் இந்தியாவுக்கு பாதுகாப்பு பிரச்சினை வருமாக இருந்தால் அதனை அனுமதிக்க முடியாது என்பதில் எமது மக்கள் உறுதியாக உள்ளார்கள்.

தற்போது இந்திய மீனவர்களின் வருகை என்பது கவலையான விடயமாக இருந்தாலும் தமிழ் பேசும் சமூகமாகிய நாங்கள் இந்தியாவை ஒருபோதும் கைவிட முடியாது. அதை விட தமிழ்நாடு இன்றைக்கும் எங்களோடு இருந்து கொண்டிருக்கிறது.

எமது ஈழப் பிரச்சனையில் எமக்காக பல பேர் தங்களை எரித்து தற்கொலை செய்து இருக்கிறார்கள். அப்படியான ஒரு சூழலில் இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கின்ற சம்பவங்கள் எதுவாக இருந்தாலும் எமது தமிழ் தரப்பு எதிர்க்கும் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அண்மையில் சீனாவினுடைய தூதுவர் இங்கு வந்து ஒரு சர்ச்சையை கிளப்பி சென்ற பின்னணியில் பல எதிர்ப்புகளை எமது மக்கள் காட்டியிருந்தார்கள். ஆகவே இலங்கை அரசாங்கம் ராஜா தந்திர நடவடிக்கையாக இரண்டு நாடுகளையும் சாதகமாக வைத்திருக்க வேண்டும் என்றால் இந்தியாவை பகைக்க கூடாது என்பது எனது கருத்து. ஏனெனில் இந்தியா தான் பொருளாதார ரீதியில் விழுந்து கிடக்கின்ற இலங்கையை அண்மைக்காலமாக கை தூக்கி வருகிறது.

எமது தமிழர்களை பொருத்தமட்டில் இந்தியா தான் எமக்கான தீர்வை பெற்று தரக்கூடியதும் எங்களுக்கு குரல் கொடுக்கக்கூடிய வல்லமை பொருந்தியதாக இருக்கிறது. இந்த விடயத்தில் சீனாவின் வேவு பார்க்கும் கப்பல் வருகையை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

இல்லையெனில் இந்தியா இலங்கையை விட்டு அதிக தூரம் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்தியாவை பகைப்பதால் இலங்கைக்கு ஒருபோதும் நன்மை கிடைக்காது. அதை தமிழர்களாகிய நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.




மேலும் முல்லைத்தீவில் எமது மீனவர் சமாசம் ஒன்று கூடி இந்த மீனவ பிரச்சினை தொடர்பான ஆதங்கத்தை வெளியிட்டு செய்திருந்தது உண்மையில் அது ஒரு நியாயமான கோரிக்கையாகவே நாங்கள் பார்க்கின்றோம். அமைச்சரிடம் ஏற்கனவே பாராளுமன்றத்தில் எமது மீனவர்கள் நான்கு மாதங்களுக்கு மேலாக பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள் என்று நேரடியாக தெரிவித்து அது உடனடியாக நடவடிக்கைக்கு வர வேண்டும் கோரிக்கை விடுத்திருந்தோம்.

தற்போது அந்த தீர்மானத்தின் படி அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்ற படாவிட்டால் பாரிய ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வதாக தெரிவித்து இருந்தார்கள்.

எமது மீனவர்களும், விவசாயிகளும் போராட்டத்தில் இறங்கினால் நாடு தாங்காது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கனவே கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் விவசாயிகளுடைய வயிற்றில் கை வைத்ததன் பின்பு தான் அவர் நாட்டை விட்டு ஓடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

அதேபோல் எமது மீனவ சமூகத்தையும் நோகடிக்கும் அல்லது அவர்களுடைய வயிற்றில் அடிக்கின்ற செயற்பாடுகளை இந்த அரசும் செய்யுமானால் அவர்களுடைய போராட்டம் வெடிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே பெட்ரோல், டீசலுக்கு கொடுக்கின்ற முன்னுரிமையை மண்ணெண்ணெய்க்கும் வழங்க வேண்டும்.

இதனால் எமது விவசாயிகளும் மீனவ சமூகமும் பயனடைய வேண்டும். எனவே முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளும் மீனவர்களும் விடும் கோரிக்கையை நிறைவு செய்து கொடுக்க வேண்டும். நாம் ஜனாதிபதியிடமும் அமைச்சரிடமும் மீண்டும் வலியுறுத்தி கோரிக்கை விடுக்கின்றோம் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table
Life100 INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
LaCapitale | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life | BMO Insurance
- digi Media -
Are you getting Million Dollar advice?

# Ontario Gov't Would Train More Workers for In Demand Careers in Auto Manufacturing

# வாகன உற்பத்தித்துறையில் முக்கியவத்துவம் வாய்ந்த தொழில்நுட்ப பதவிகளுக்குரியவர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ள ஒன்றாரியோ அரசாங்கம்



ஒன்றாறியோ அரசாங்கம், மாகாணத்தின் செழித்து வரும் வாகன உற்பத்தித் துறை-யில் நல்ல ஊதியம் பெறும் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்பா பதவிகளுக்குரியவர்களுக்கு அவர்களைத் தயார்படுத்தும் வகையில் பயிற்சி அளிக்க திட்டங்களை வகுத்துள்ளது. குறிப்பாக வாய்ப்புக்கள் குறைந்த பிரதிநிதித்துவக் சமூகங்களைச் சேர்ந்த 500 பேருக்கு இலவசப் பயிற்சி அளிப்பதற்காக $5 மில்லியன் முதலீடு செய்து தொழிலாளர்களை உருவாக்கும் வகையில் இந்த திட்டம் செயல்படும்.

இந்தத் திட்டத்தில் இணைக்கப்படுகின்றவரகளுக்கு இயந்திர இயக்கம், அசெம்பிளி எனப்படும் உதிரிப்பாகங்களை இணைத்தல் மற்றும் தரக் கட்டுப்பாடு மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றில் வாகன உற்பத்தித்துறைக்கு தேவையான திறன்களை வழங்கும். ஒன்றாறியோ வாகன உற்பத்தியில் வட அமெரிக்காவில் முக்கியமான மாகாணமாகவும் தலைமைத்துவம் கொண்டதாகவும் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதால், ஒரு முக்கியத் தொழிலில் உள்ள தொழிலாளர்களின் நெருக்கடியான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும் இந்த திட்டம் உதவும் என ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அறிவித்துள்ளார்.

"எங்கள் அரசாங்கம் மாகாணத்தின் வாகனத் துறையில் விளையாட்டை மாற்றும் முதலீடுகளைப் பாதுகாத்து வருகிறது, இது எதிர்காலத்தில் மின்சார வாகனங்கள் மற்றும் பேட்டரிகள் ஒன்டாரியோ தொழிலாளர்களால் ஒன்டாரியோவில் தயாரிக்கப்படுவதை உறுதி செய்யும்" என்றும் மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் கூறினார். "நாங்கள் செய்வது போல், ஒன்டாரியோவின் அடுத்த தலைமுறை வாகனத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் முதலீடு செய்கிறோம், மேலும் நூற்றுக்கணக்கானவர்களை அவர்களின் உலகத் தரம் வாய்ந்த தி-றமை மற்றும் நிபுணத்துவம் தேவைப்படும் உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களில் நல்ல ஊதியம் பெறும் வேலைகளுடன் இணைக்கிறோம்".

வாகன உதிரிபாகங்கள் உற்பத்தியாளர்கள் சங்கம் (APMA) தலைமையில், 300க்கும் மேற்பட்ட சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் கொண்ட APMA இன் அமைப்பு மூலம் மூன்று மாத ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்புகள் பயிற்சியில் அடங்கும். திட்டத்தை முடித்த பிறகு, ஒவ்வொரு பயிற்சியாளரும் உள்ளூர் வாகன உற்பத்தி நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள்.

"எங்கள் வாகனத் தொழிலாளர்கள் ஹீரோக்கள், மேலும் ஒன்டாரியோவைக் கட்டியெழுப்பும் எங்கள் லட்சியத் திட்டத்தை வழங்க இன்னும் அதிகமானவர்கள் தேவை" என்று தொழிலாளர், குடிவரவு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சர் மான்டே மெக்நாட்டன் கூறினார். "இந்த முதலீடு உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நமது பொருளாதாரத்தை வளர்ப்பதற்குத் தேவையான திறமையான தொழிலாளர்களைக் கண்டறிய உதவுகிறது மற்றும் வேலை தேடுபவர்களை அர்த்தமுள்ள வேலைகளுடன் இணைக்க உதவுகிறது, அங்கு அவர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் பெரிய சம்பளத்தை சம்பாதிக்க முடியும்".

இந்தத் திட்டமானது இணையவழி மற்றும் நேரடியாக உற்பத்தி நடைபெ-றும் இடங்களில் வேலையில் இருக்கும் பயிற்சி ஆகியவற்றைக் கொண்டுள்ளது, இதில் பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளர்கள் முக்கியமான திறன்களான உற்பத்தி, திட்ட மேலாண்மை மற்றும் சரிசெய்தல் போன்றவற்றைக் கற்றுக்கொள்கிறார்கள். பயிற்சி ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் $4,600 வரை ஊதிய மானியத்தை நிறுவனங்களை நடத்துபவர்கள் அரசாங்கத்திடமிருந்து பெறலாம்.

"ஒன்டாரியோவில் வாகனத் துறையின் உற்சாகமான எதிர்காலம் புதிய முகங்கள், குரல்கள் மற்றும் முன்னேற்றகரமாக வளர்ச்சியை வரவேற்பதன் மூலம் பயனடையும்" என்று APMA தலைவர் ஃபிளேவியோ வோல்ப் கூறினார். "இந்த முதலீடு, இத்துறையில் வரலாற்று ரீதியாக இதுவரை பங்கேற்காத சமூகங்கள் இணைத்து கொள்ளப்பட்டு அவற்றின் வெற்றிக்கு ஒருங்கிணைந்ததாக மாறுவதற்கு ஒரு நிலையான தளத்தை உருவாக்குகிறது".

இந்த திட்டமானது, ஒன்டாரியோவின் திறன் மேம்பாட்டு நிதியத்தால் நிதியளிக்கப்படுகிறது, இது $200 மில்லியனுக்கும் மேலான முன்முயற்சியாகும், இது வேலை தேடுபவர்களை வீட்டிற்கு அருகாமையில் நன்கு ஊதியம் பெறும் வேலைகளைக் கண்டறிய தேவையான திறன்கள் மற்றும் பயிற்சியுடன் புதுமையான திட்டங்களை ஆதரிக்கிறது.

இவ்வாறு ஒன்றாரியோ அரசின் முதல்வர் அலுவலகம் மற்றும் தொழிற்பயிற்சி மேம்பாட்டு அமைச்சு ஆகியவை அறிவித்துள்ளன.



இங்கே காணப்படும் படங்கள் மேற்படி திட்டம் பற்றிய அறிவிப்பை ஒன்றாரியோ மா-காண முதலவர் அண்மையில் ஒன்றாரியோவின் ஸ்ரெட்போர்ட் நகரில் விடுத்து உரையாற்றியபோது எடுக்கப்பட்டவையாகும்.





# அரகலய 4.0?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

இந்த வாரத்துக்குள் மட்டும் காலி முகத்திடலில் இரண்டு ஆண்களின் பிணங்கள் கரையொதுங்கி உள்ளன. அரகலய போராட்டம் ஆரம்பமானதிலிருந்து இதுவரையிலும் ஆறு உடல்கள் இவ்வாறு கரை ஒதுங்கி உள்ளன.

"எமது நாட்டின் பொலிஸார், புலனாய்வுப்பிரிவினர் இணைந்து ஜனாதிபதி மாளிகையில் கழிவறையில் சிறுநீர் கழித்தவரைக்கூட கைதுசெய்துள்ளனர். அத்தகைய திறமைவாய்ந்தவர்களே பொலிஸ் பிரிவில் காணப்படுகின்றனர். எனினும் எமது நாட்டு மக்கள் கொழும்பு காலிமுகத்திடலில் சடலமாக மீட்கப்படும் போது அந்த சடலங்கள் யாரினுடையது என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது" என்று கூறியிருக்கிறார் ரவி குமுதேஷ். சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் அவர். சில நாட்களுக்கு முன் கொழும்பில் நடந்த ஊடக சந்திப்பில் அவ்வாறு கூறியுள்ளார்.

கோட்டா கோகம கிராமம் அமைந்திருக்கும் அதே கடற்கரையில் இவ்வாறு பிணங்கள் ஒதுங்குகின்றன. இது முதலாவது விடயம்.

இரண்டாவது விடயம், அண்மை வாரங்களில் தென்னிலங்கையில் ஆங்காங்கே துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. இதில் சிலர் கொல்லப்பட்டும் இருக்கிறார்கள். யார் யாரை கொல்லுகிறார்கள் என்பது பொதுமக்களைப் பொறுத்தவரை மர்மமாக உள்ளது.

மூன்றாவது விடயம், அரகலய போராட்டக்காரர்கள் ஆங்காங்கே உதிரி உதிரியாகக் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். சட்டம் ஒழுங்கை மீறிய குற்றச்சாட்டுகளின் பெயரில் அவர்கள் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

நாலாவது விடயம், கொழும்பில் எரிவாயு வினியோகம் சீராகிவிட்டது. எரிபொருள் தட்டுப்பாடாக உள்ளது, எனினும் வரிசைகளில் நின்றால் கிடைக்கும் என்ற நம்பிக்கை தோன்றியிருக்கிறது. எரிபொருளுக்காக வரிசைகளில் நிற்பதிலேயே நாளின் ஒரு பகுதி கழிக்கிறது.

ஐந்தாவது விடயம், அரகலயவின் பின்னணியில் நிற்பதாக கருதப்படும் முன்னிலை சோஷலிச கட்சியின் அலுவலகம் சோதனையிடப்பட்டுள்ளது. அக்கட்சியின் செயற்பாட்டாளர்கள் பின் தொடரப்படுகிறார்கள்.

ஆறாவது விடயம், யாப்பில் 22A திருத்தத்துக்கான புதிய வரைவு அமைச்சரவையின் அனுமதி பெற்று இருக்கிறது. இதன்மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்ற ஒரு தோற்றம் உருவாகின்றது.

ஏழாவது விடயம், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை எதிர்க்கட்சிகளோடு இணைந்து உருவாக்குவதற்குத் தான் தயார் என்று ரணில் அறிவித்திருப்பது.

மேற்கண்ட எழு விடயங்களையும் தொகுத்துப் பார்த்தால் ஒரு தெளிவான சித்திரம் நமக்கு கிடைக்கும். ரணில் விக்கிரமசிங்க அரகலயவை இருமுனைகளில் முறியடிக்க முயற்சிக்கின்றார். முதலாவது அரகலயவுக்கு காரணமாக இருந்த எரிபொருள் எரிவாயு போன்ற அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்குவது. அரகலயவின் பிரதான கோரிக்கையான முறைமை மாற்றத்துக்கான ஆரம்ப அடிகளை எடுத்து வைப்பது. இரண்டாவது அச்சுறுத்தலான கைது மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் மூலமும் செயற்பாட்டாளர்களை பின்வாங்கச் செய்வது. இவ்விருமுனை நடவடிக்கை மூலம் ரணில் விக்கிரமசிங்க அரகலயவை குறிப்பிடத்தக்க அளவுக்கு சோரச்செய்து விட்டார் என்றே கூற வேண்டும். கோட்டா கோகமவில் நூற்றுக்கும் குறைவானவர்களே காணப்படுகிறார்கள். ஏற்கனவே அங்கு காணப்பட்ட முன்னணி செயற்பாட்டாளர்கள் பலரும் தலைமறைவாகி வருவதாக கருதப்படுகிறது. மேலும் யூ.என். பிக்கு ஆதரவான செயற்பாட்டாளர்கள் காலி முகத்திடலைவிட்டு வெளியேறி இருப்பதாகவும் அவதானிக்கப்படுகிறது. சில கூடாரங்களில் மிகச் சிலர் மட்டுமே தங்கியிருப்பதாகவும் தெரிகிறது.

முன்னணியில் காணப்பட்ட செயற்பாட்டாளர்கள் சட்டம் ஒழுங்கை மீறிய குற்றச்சாட்டுகளின் பெயரில் கைது செய்யப்படுகிறார்கள். உலகில் எந்த ஒரு தன்னெழுச்சி போராட்டமும் சட்டம் ஒழுங்குக்கு உட்பட்டு நடக்காது. போராட்டம் என்றாலே சட்ட மறுப்புத்தான். சட்ட மறுப்பாகத் தோன்றிய மக்கள் எழுச்சிகளை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்க முடியாது. ஆனால் ரணில் விக்ரமசிங்க அதை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்கத் தொடங்கி விட்டார். அதற்கு காரணம் எதிர்ப்பு இல்லை என்பது. உள்நாட்டிலும் கைது நடவடிக்கைகளுக்கு எதிராகக் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய எதிர்ப்பு காட்டப்படவில்லை. கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்பாட்டம் பேரெழுச்சியாக அமையவில்லை. அடுத்த சில தினங்களில் நாடு பூராகவும் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களும் கவன ஈர்ப்பு போராட்டங்களாக சுருங்கிவிட்டன. இவைதவிர "பார் அசோசியேசன்" - அதாவது சட்டத்தரணிகள் அமைப்பு கைது செய்யப்படும் செயற்பாட்டாளர்களை பாதுகாப்பதற்காக ஒருங்கிணைந்த, அரசுக்கு சவாலாக அமையத்தக்க நடவடிக்கைகளில் இறங்கவில்லை என்பதும் இங்கே ஒரு காரணம்.

கொழும்பு மைய சட்டத்தரணிகள் அமைப்பு யு.என். பிக்கு ஆதரவானது என்ற ஒரு கருத்து உண்டு. தவிர அரகலயவோடு நின்றது பெருமளவுக்கு இளம் சட்டத்தரணிகள் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கோட்டபய அகற்றப்படும் வரையிலுமான போராட்டக் களத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களைப் பாதுகாப்பதில் சட்டத்தரணிகளின் சங்கம் பெரிய பங்களிப்பை நல்கியது. ஒருமுறை காலி வீதியில் போலீஸ் வாகனத் தொடரணியொன்று காணப்பட்டது. போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கத்தோடு அவ்வாறு அந்த வாகனத்தொடரணி நிறுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டது. அதற்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் ஆட்சேபணை தெரிவித்தது. பின்னர் அந்த வாகன பேரணி நீக்கிக் கொள்ளப்பட்டது. அப்படித்தான் படைத்தரப்பிடமிருந்து போராட்டக்காரர்களை பாதுகாப்பதற்காக சட்டத்தரணிகளும் மதகுருகளும் கைகளை கோர்த்தபடி மனிதச் சங்கிலி அமைத்து நின்ற காட்சிகளும் உண்டு. கோத்தாபய அகற்றப்படுவதற்கு முன்புவரை அரகலய செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம் சட்டத்தரணிகள் நூற்றுக்கணக்கில் நீதிமன்றங்களில் குவிந்தார்கள். சிலசமயங்களில் 300க்கும் குறையாத சட்டத்தரணிகள் அவ்வாறு திரண்டு நின்று செயற்பாட்டாளர்களை பாதுகாத்தார்கள்.

ஆனால் இதுவெல்லாம் கோத்தா அகற்றப்பட முன்னரான கதைகள். ரணில் வந்த பின்னரான கதைகள் வேறு. போராட்டத்தில் முன்னணியில் நின்ற மதகுரு அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளார். பல செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டத்தரணிகள் சங்கம் அவர்களை பாதுகாப்பதற்கு முன்னரைப் போல தீவிரமாக செயல்படுவதாகத் தெரியவில்லை. கைது செய்யப்படுகிறவர்கள் வெவ்வேறு நீதிமன்றங்களில் பரவலாக ஆஜர் செய்யப்படுவதனால் சட்டத்தரணிகள் ஒன்று திரள முடியவில்லை என்றும் ஒரு இளம் சட்டத்தரணி தெரிவித்தார்.

மேலும், கைது செய்யப்படுவோரில் தனிப்பட்ட மற்றும் பொதுச் சொத்துக்களை நாசம் செய்த குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களின் விடயத்தில் நீதிமன்றங்களில் வாதிடுவதற்கு சில இளம் சட்டத்தரணிகள் மட்டுமே தயாராக காணப்படுவதாகவும் ஒரு தகவல் உண்டு. அவை அரகலயவின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்படாத வன்முறைகள் என்று கருத்தும் ஒரு பகுதி சட்டத்தரணிகளும் உண்டு. அதாவது சட்ட மறுப்பை சட்டக்கண் கொண்டு பார்ப்பது. எதுவாயினும் கைது நடவடிக்கைகள் தொடரும் பின்னணியில் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயல்பாடுகள் போதாமல் உள்ளன என்பதே உண்மை.

சட்டத்தரணிகள் மட்டுமல்ல, எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மத்தியிலும் குறிப்பாக சஜித் அணியினர் மத்தியிலிருந்தும் மேற்படி கைது நடவடிக்கைகளுக்கு எதிராக வலிமையான எதிர்ப்புக் காட்டப்படவில்லை. இந்த விடயத்தில் எல்லா அரசியல்வாதிகளும் ஒரு வர்க்கமாக நின்று சிந்திக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களை அழித்த, வீடுகளை எரித்த நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்களை பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சிகளின் மத்தியிலும் பெரியளவு ஆர்வம் காட்டப்படவில்லை.

உள்நாட்டு சக்திகள் மட்டுமல்ல கொழும்பில் உள்ள மேற்கு நாட்டு தூதரகங்களும் இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவை பலவீனப்படுத்த விரும்பவில்லை என்றே தெரிகிறது. கோத்தாபய ஆட்சியில் இருந்தவரை படையினரின் நடவடிக்கைகளையும் போலீசாரின் நடவடிக்கைகளையும் கூர்மையான வார்த்தைகளால் விமர்சித்து வந்த தூதரகங்கள் இப்பொழுது அவ்வாறு ருவிற்றர் பதிவுகளை இடுவதில்லை என்றும் ஒப்பிடப்படுகிறது.

ஆகமொத்தம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அரகலயவுக்கு உள்நாட்டிலும் ஆதரவு குறைந்து வெளிநாட்டிலும் ஆதரவு குறைந்து ஏறக்குறைய தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நிலை தோன்றியிருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. சித்தாந்த அடித்தளம் இன்றி பொருத்தமான தலைமைத்துவம் இன்றி முன்னெடுக்கப்படும் எல்லாத் தன்னியல்பான மக்கள் எழுச்சிகளும் நீர்த்துப்போகக்கூடிய ஆபத்துக்கள் உண்டு. அதேசமயம் தெளிவான இலக்குகளை முன்வைத்து முறையான தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் போராட்டம் சில மாதங்களுக்கு முன் வெற்றி பெற்றது. இந்தியாவில் டெல்லியில் விவசாயிகளின் போராட்டம் வெற்றி பெற்றது.

இப்பொழுது அரகலய கூறுகிறது, ரணிலுக்கு எதிரான போராட்டம் விரைவில் வெடிக்கும் என்று. சரத் பொன்சேகாவும் அப்படித்தான். கூறியிருக்கிறார். அதற்கு அவர்கள் அரகலய 4.0 என்று பெயர் வைத்திருக்கிறார்கள். மஹிந்தவை அகற்றியது அரகலய 1.0 என்றும், பஸிலை அகற்றியது அரகலய 2.0 என்றும், கோட்டாவை அகற்றியது அரகலய 3.0 என்றும், இனி ரணிலை அகற்றுவதும் முறமையை மாற்றுவதும் அரகலய 4.0 என்றும் அவர்கள் அழைக்கிறார்கள். ஆனால் கடந்த மூன்றுமாத காலத்துக்கும் மேலான தென்னிலங்கை அரசியல் களத்தை தொகுத்து பார்த்தால், தெளிவான வேறுபாட்டை காணமுடிகிறது. கோத்தாவுக்கு முன் கோத்தாவுக்கு பின் என்பதே அது. கோத்தாவுக்கு பின்னரான அரகலய பெருமளவுக்கு தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. சோர்ந்து போய் காணப்படுகிறது.

அதாவது, அரகலயவின் கனிகளை ரணில் சுவிகரித்துவிட்டார் என்று பொருள். 69 லட்சம் வாக்குகளால் வெற்றி பெற்ற ராஜபக்சக்களை துரத்திய ஒரு போராட்டத்தை சுமார் 30,000 வாக்குகள் பெற்ற ஒருவர் முறியடிக்கப் போகிறாரா? கடந்த மூன்று மாதங்களாக ஒவ்வொரு ஒன்பதாம் திகதியும் தாமரை மொட்டு கட்சிக்கும் அக்கட்சியை ஆதரித்த ரணிலுக்கும் அச்சுறுத்தலான ஒரு நாளாக காணப்பட்டது. அடுத்த ஒன்பதாம் திகதி என்ன காத்திருக்கிறது?

### வீணாவின் கவிக்கணை

எழுதுகின்ற எழுத்தில்
பிழையிருக்கலாம்,
ஆனால் பொருள்
பிழைக்கக்கூடாது,
ஒருவரை விமர்சிப்பது
பிழையல்ல,
அதுவே அவர்
உயிரைக்குடிக்கும்
விஷமாக மாறக் கூடாது,
அடுத்தவரைத்திருத்தும்
அதிகாரம் எவருக்குமில்லை,
ஆனால் அடுத்தவருக்கு
எடுத்துக்காட்டாக
வாழ்ந்திட முடியும்,
ஒருவர் அறிந்தோ அறியாமலோ
செய்த குற்றத்தை குத்திக்காட்டி ,
அவர் பாவத்தில் நீங்கள்
பங்கெடுக்க வேண்டாம்,
அவர் செய்த செயல் பிழை
என்று அவர் நாணும் வேளையில்
அவரே திருந்திடுவார்,
தானாக திருந்திக்கொண்டாலே
தவிர, எவரையும் மாற்ற
எவராலும் முடியாது.



# தென்னிலங்கை நோக்கி திரும்பியுள்ள அரச பயங்கரவாதம்

- வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்

* ரணில்விக்ரமசிங்கவின் அக்ராஷன உரை "தகர்ந்து போகும் வாக்குறுதிகள்" என்பதை விரைவில் காலம் உணர்த்தும்.

* சூழ்நிலைகளின் கைதியான ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க ராஜபக்ஷக்களினதும் பொதுஜனபெரமுன கட்சியினதும் கடிவாளத்தை மீறி எவ்வளவு தூரம் பயணிக்க முடியும்?

தென்னிலங்கையின் அரசியல்வானில் கோலோச்சிய இளைஞர் யுவதிகளின் அரசியல் சாதனையை வெறும் நூறு நாட்களுடன் முடித்துவிட்டதாக தென்னிலங்கையின் அரசியல் சக்திகள் மார் தட்டிக்கொண்டிருக்கின்றனர். நூறு நாட்களுக்குள் தென்னிலங்கை அரசியல்வானில் பல சாதனைகளை இளைஞர் யுவதிகள் நிகழ்த்திக் காட்டியுள்ளனர். தென்னிலங்கை மக்களின் அரசியல் அபிலாஷைகளின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய இளைஞர் யுவதிகள் தென்னிலங்கை மக்களின் மீட்பராக போற்றப்பட்டனர். அதேவேளையில் ஆரப்பாட்டக்காரர்கள் என்றும் கிளர்ச்சியாளர்கள் என்றும் சித்தரிக்கப்பட்டனர்.

தென்னிலங்கை இளைஞர் யுவதிகள் மக்களுடன் இணைந்து ஈட்டிய அரசியல் வெற்றிகள் தென்னிலங்கை அரசியல்வாதிகளை கிலி கொள்ள வைத்தது. பிரதம மந்திரி ஜனாதிபதி என அடுத்தடுத்து பதவி விலகினர். குறிப்பாக ஜனாதிபதி நாட்டைவிட்டே தப்பியோட வேண்டிய நிலைக்கு ஆளானார். மொத்தத்தில் தமக்கு அரசியல் எதிர்காலமே இல்லை என்ற அளவுக்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் முடங்கிப் போயினர்.

போராட்டம் வெற்றி இலக்கை நோக்கி நகர்வதாக தென்னிலங்கை மக்களும் இளைஞர் யுவதிகளும் கணக்குப் போட்டுக் கொண்டிருந்த வேளை ராஜபக்ஷ குடும்பமும் அவர்கள் நார்ந்த அரசியல் அணியினரும் தமக்கான மீட்பரைத் தேடினர். இந்தப் பயணத்தில் தென்னிலங்கை அரசியலில் ஏற்படப் போகும் மாற்றத்தால் தமது அரசியல் எதிர்காலமே பறிபோய்விடும் என்ற அச்சத்தில் இருந்த அனைத்து சக்திகளும் ராஜபக்ஷ குடும்பத்துடன் கைகோர்த்துக் கொண்டனர். இவர்கள் தமது பயணத்தைத் தொடர இலகுவாக ராஜபக்ஷக்களுக்கு நாடாளு மன்றில் இருந்த பெரும்பான்மை பலமும் அரசியலமைப்பு ஏற்பாடுகளும் கைகொடுத்தன.

69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியை நாட்டைவிட்டு வெளியேற வைத்த இளைஞர் யுவதிகளும் தென்னிலங்கை மக்களும் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தாம் வழங்கிய மக்கள் ஆணை தமக்கெதிராகத் திருப்பப்படும் என எதிர் பார்க்கவில்லை. மக்கள் ஜனாதிபதியை நாட்டைவிட்டு அனுப்பிவிட்டதாக நினைத்துக் கொண்டிருந்த வேளை நாடாளு மன்ற உறுப்பினர்கள் மக்கள் தமக்கு வழங்கிய ஆணையை கைகளில் எடுத்து அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கமைவாக தமக்கான ஜனாதிபதியைத் தெரிவு செய்து கொண்டனர்.

69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியை மக்கள் வீட்டுக்கு அனுப்ப மக்கள் ஆணை மூலம் மக்களால் நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் தேர்தலில் தோற்று தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்த ஒருவரை ஜனாதிபதி ஆக்கியுள்ளனர்.

தென்னிலங்கை மக்களும் இளைஞர் யுவதிகளும் எதிர்பார்த்து நிற்கும் மாற்றம் என்பது கடந்த 74 வருடமாக அரசியல்வாதிகள் கட்டிக்காத்து வருகின்ற அரசியல் கட்டமைப்பையே தகர்த்துவிடுவதற்குச் சமன். இந்தக் கட்டமைப்பால் இன்றைய அரசியயல்வாதிகளே கூடுதலாக நன்மை பெற்ற சலுகை பெற்ற சமூகமாக மேலெழுந்துள்ளனர். குறிப்பாக ராஜபக்ஷக்களும் அவர்கள் சார்ந்த அணியினருமாகும். ஆரம்பத்தில் மாற்றத்தைக் கோரி நிற்போருடன் சமரசம் கண்டுவிடலாம் என்றே இந்தச் சக்திகள் எண்ணின. ஆனால் கட்டுமீறிப் போகவே இரும்புக் கரம் கொண்டு அடக்கக் கூடிய தமக்கான தலைவரைத் தேடிக் கொள்ள வேண்டிய கட்டா நிலைக்கு இந்தச் சக்திகள் தள்ளப்பட்டனர். இதன் விளைவே ராஜபக்ஷக்களுடன் கைகோர்த்துக் கொண்டு ரணில்விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்கியுள்ளனர். அதாவது "DO OR DIE" என்ற நிலையில் தமதும் தமது அரசியல் வாரிசுகளினதும் அரசியல் நலன்களைக் காப்பாற்ற இணைந்துள்ளனர்.

ஜனாதிபதியை தெரிவு செய்யும் போது இரகசிய வாக்கெடுப்பைக் கோரியவர்கள் அவசரகாலச் சட்டத்திற்கான வாக்கெடுப்பில் துணிந்து வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். அது மாத்திரமல்ல பதுங்கி இருந்தவர்கள் எல்லோரும் வெளியில் வரத் தொடங்கிவிட்டனர். ஜனாதிபதி தெரிவுடன் ஆர்ப்பாட்டம் ஊர்வலம் என நெஞ்சை நிமிர்த்தி சென்றவர்கள் தலைமறைவாக வாழத்தலைப்பட்டுள்ளனர். வெள்ளை வானும் படைத்தரப்பும் அவர்களை வலைபோட்டு தேடத் தொடங்கிவிட்டனர். பலர் நீதிமன்றில் நிறுத்தப்பட்டுள்ளனர். இன்னும் பலர் தேடப்படும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

மொத்தத்தில் தென்னிலங்கை மக்களின் மீட்பராக வலம் வந்தவர்கள் நூறு நாட்களுக்குள் கிளர்ச்சியாளராகவும் ஆர்ப்பாட்டக்காரர்களாகவும் சித்தரிக்கப்பட்டவர்கள் போராட்டம் நூறு நாட்களைக் கடப்பதற்குள் புதிய ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க அந்த இளைஞர் யுவதிகளுக்கு "குயளஉளைவ" என நாமம் சூட்டினார். தற்பொது தென்னிலங்கையில் மாற்றத்தைக் காணவிழைந்த இளைஞர் யுவதிகளும் தென்னிலங்கை மக்களும் "பயங்கரவாதிகளாக" சித்தரித்து அவசரகாலச் சட்டத்தின் கீழ் வேட்டையாடப்படுகின்றனர்.

ஆனால் தென்னிலங்கை இளைஞர் யுவதிகள் மக்கள் எதிர்பார்த்த நியாயமான மாற்றம் குறித்த கவலைகள் கரிசனைகள் பற்றி எவ்வித அக்கறையுமின்றி ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க உற்பட அனைத்து தென்னிலங்கை அரசியல் சக்திகளும் உள்ளனர்.

ஊழல் மோசடி நாட்டைக் கடிச்சுவராக்கியவர்களுக்கெதிராக எந்தவித நகர்வுகள் குறித்தும் இந்தச் சக்திகள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

மக்கள் எழுச்சி ஏன் எற்பட்டது என்பது குறித்து சிந்திக்காது மக்கள் எழுச்சிக்கு "பயங்கரவாத முத்திரை" குத்தி அதனை எவ்வாறு அடக்குவது என்பதிலேயே குறியாக இருக்கின்றனர்.

ரணில்விக்ரமசிங்க தம்மை ஜனாதிபதியாக்கிய சக்திகளின் விசுவாசியாக நலன்பேணுபவராக காட்டிக் கொள்வதில் காட்டும் அக்கறையானது அவரை இலங்கை வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயத்திற்குள்ளேயே தள்ளும். அவ்வேளையில் அவரால் காப்பாற்றப்பட்ட ராஜபக்ஷக்களும் அவரைத் தூக்கி வீசிவிட்டே செல்வர். இதுவே பொதுவான "அரசியல் தர்மமாக" உள்ளது.

ஏனெனில் ராஜபக்ஷக்களின் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு அப்பாற்பட்டவரே ரணில்விக்ரமசிங்க.

அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களை வேட்டையாடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவர்களை வலைவீசி பிடிக்க போலீசார் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் அரசாங்க எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் அந்த இடத்தை ஆக்கிரமித்திருந்தபோது அலரிமாளிகையில் இருந்து இரண்டு தொலைக்காட்சிப் பெட்டிகளைத் திருடிச் சென்றதாகக் கூறப்படும் சமையல்காரர் ஒருவர் ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து மின்சார இரும்பை அகற்றிய மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆனால் அரச கருவூலத்தில் இருந்து கோடிக்கணக்கான ரூபாய்களை திருடியவர்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பாக இருக்க மற்றவர்களை சிறிய குற்றங்களுக்காக கைது செய்து வருகிறார்கள்!

ஆனால் பிரச்சனை என்னவென்றால் பொருளாதாரத்தை சீரமைக்கவும் மக்களின் துன்பத்தை போக்கவும் IMF மற்றும் உலக வங்கியின் உதவிகளை பெறுவதற்கு அவசரமாக என்ன செய்ய வேண்டும் என்ற முக்கிய விடயங்கள் அரசாங்கத்தின் முன் பெரும் சவாலாக நிற்கின்றது. ஆனால் அரசாங்கம் 74 வருடகால இலங்கை அரசியலில் மாற்றத்தை கோரி நிற்கின்ற தென்னிலங்கை இளைஞர் யுவதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவாக களம் இறங்கியுள்ள மக்களையும் ("அரகலயா") அரசாங்கம் வேட்டையாடுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

போதுமான பெரிய பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பை அமைக்கும் வரை இந்த நாட்டிற்கு எந்த புதிய நிதியுதவியையும் வழங்கப்போவதில்லை என்று உலக வங்கி கூறியுள்ளது. துரதிர்ஷ்டவசமாக அரசாங்கம் தனது நடவடிக்கைகளை ஒன்றிணைக்க ஆர்வமாக இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக அது தனது அதிகாரத்தை பலப்படுத்துவதில் மும்முரமாக உள்ளது மற்றும் எதிர்ப்பாளர்களை பின் நின்று இயக்கியவர்கள் என இனங்காணப்படுவோரை அரசாங்கம் பழிவாங்குகிறது.

அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்களுடன் கலந்து கொண்ட திருடர்களுக்கு எதிராக துரித நடவடிக்கை எடுத்து தமது திறமையை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியிருக்கும் காவல்துறை 17.8 மில்லியன் ரூபாய் பணக் குவியலைப் பற்றி பொதுமக்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். ஜனாதிபதி மாளிகை மற்றும் பொருட்கள் என்பன அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

வேறு யாருடைய வீட்டிலும் இவ்வளவு பெரிய தொகை பணம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் அது எவ்வாறு சம்பாதித்தது என்பதை காவல்துறை தெரிவிக்க வேண்டும். அது யாருடைய பணம் அது ஜனாதிபதி மாளிகையில் என்ன செய்து கொண்டிருந்தது? என்பது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

அரசியல் மாற்றத்துக்காக களத்தில் இறங்கிச் செயற்பட்டவர்களில் சிலர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி மாளிகையில் காணப்படும் கைரேகைகள் போன்றவற்றின் மூலம் அந்த இடங்களை முற்றுகையிட்டிருந்த ஏனைய எதிர்ப்பாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்கப் பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பொதுப் பணத்தில் இருந்து திருடி பொதுமக்களின் பெயரில் பல்வேறு மோசடிகளை நடத்தி பொருளாதாரத்தை சீரழித்து அதன் மூலம் ஒட்டுமொத்த நாட்டையும் நெருக்கடிக்குள் தள்ளியவர்களைத் தொடர்ந்தும் அதிகாரத்தில் அமரவைத்துள்ளனர்.

மொத்தத்தில் இலங்கை அரசியலில் மாற்றத்தை நோக்கிய அலைக்குள் அள்ளுண்டு "பதுங்கியவர்கள்" பகிரங்கமாக நடமாடத் தொடங்க நெஞ்சை நிமிர்த்தி மாற்றத்தை நோக்கிப் பயணித்தவர்கள் பதுங்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அரச பயங்கரவாதம் அவர்களை வேட்டையாடத் தொடங்கிவிட்டது.

கடந்த காலத்தில் தமிழர்களை நோக்கி கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம் தற்போது சிங்கள மக்களை நோக்கி திரும்பியுள்ளது.

இது தென்னிலங்கையில் "மாற்றத்தை காணச் சகிக்காத" அரசியல் சக்திகளுக்கும் ஊழல்வாதிகளுக்கும் ஜனநாயக விரோத சக்திகளுக்கும் நாட தொடர்ந்தும் ஆறையாட திறந்துவிட வழிவகுத்துள்ளது.

இவ்வேளையில் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் அக்ராஷன உரையை நாடாளுமன்றத்தில் நிகழ்த்தியுள்ளார். அந்த உரை பல்வேறு செய்திகளைக் கூறுகின்றது. நம்பிக்கைகளைத் தருகின்றது. ஆனால் இவை அணைத்தும் "தகர்ந்து போகும் வாக்குறுதிகள்" என்பதை விரைவில் காலம் உணர்த்தும்.

சூழ்நிலைகளின் கைதியான ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க ராஜபக்ஷக்களினதும் பொதுஜனபெரமுன கட்சியினதும் கடிவாளத்தை மீறி எவ்வளவு தூரம் பயணிக்க முடியும் என்பது கேள்விக்குறியே.

Email : vathevaraj@gmail.com

- பிழைக்கு மன்னிப்பு கோருகின்றோம்.

*2020 பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி பெற்ற மொத்த வாக்குகள் 30875 ஆகும் இது கொழும்பு மாவட்டத்தில் ஐதேக பெற்ற வாக்ககளில் 2.61 சதவீதமாகும். ஐதேக ஒரு ஆசனத்தைக கூடப் பெறவில்லை என்பதால் விருப்பு வாக்குகள் எண்ணுவது தேவையற்றது என தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்தவாரக் கட்டுரையில் வெளியாகி இருந்த புள்ளிவிபரம் தவறானது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். பிழைக்கு வருந்துகின்றோம். மன்னிப்பு கோருகின்றோம் - வி.தேவராஜ்*

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# தொல்லியல் திணைக்களமா அல்லது தொல்லை தரும் திணைக்களமா?

யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்




போர் முடிந்து 13 ஆண்டுகளுக்கும் மேலானாலும், இன்னும் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழர் தாயகத்தில், அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வலிந்து அபகரிக்கப்பட்டு, இன்னும் அல்லல்படும் உரிமையாளர்களிடம் அளிக்கப்படாமல் உள்ளது. அதற்கு ஆயிரம் காரணங்கள் கூறப்படுகின்றன.

தொடர்ந்து காணி அபகரிப்பு மற்றும் வலிந்த சிங்கள குடியேற்றம் அதன் மூலம் குடிப்பரம்பலை மாற்றியமைப்பது ஆகியவற்றை முன்னெடுக்க அரசிடம் இருக்கும் "பிரம்மாஸ்திரம்" தொல்லியல் பூமி எனும் மந்திரச் சொல். தொல்லியல் பூமி எப்படி, எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது, அதற்கு வரலாற்று ரீதியாக அறிவியல் சான்றுகள் உள்ளனவா, அப்படியே இருந்தாலும் அவை தமிழர் கலாசாரத்துடன் தொடர்புடையதா, தமிழ் பௌத்தர்களின் எச்சங்கள் கொண்ட பகுதியாக இருக்குமோ என்று ஆயிரம் கேள்விகள்.

"தொல்லியல் கொள்ளை" இப்போது சர்வசாதாரணமாகிவிட்டது. வீடு கட்டும் இடங்களில் அரைவட்டக்கல், கால்வட்டக்கல், செங்கல், கூழாங்கல் என்று எதையாவது சொல்வது, தமிழர்களுக்கு மிகவும் பரிச்சயமான ஆனைமுகன் அமர்ந்திருக்கும் அரச மரத்தடி, முருகனின் வாகனமான மயில் சுற்றி திரியும் இடங்கள், சிவனின் வசிப்பிடங்களில் ஒன்றான மயான பூமி போன்ற இடங்களின் புதிய அடையாளம் தொல்லியல் பூமி. பழுத்த அரச மரத்தின் இலைகள் ஆடிக் காற்றில் உதிர்ந்து பரந்து பல இடங்களில் விழுந்தால் அதுவும் கூட தொல்லியல் பூமி என்று கருதப்படும் என்கிற அச்சம் இப்போது தமிழ் மக்கள் மனதில் பற்றிக்கொள்ள ஆரம்பித்துள்ளது. எனவே வடக்கு கிழக்குப் பகுதியில் தொல்லியல் இடங்கள் என்று கூறப்படுபவை அதிகரிப்பதில் ஆச்சரியம் இருக்க முடியாது.

50 ஆண்டுகளில் தமிழர்களின் பூர்வீக இடங்களை இரட்டிப்பாக ஆக்கிரமித்தமையினாலயே தொல்லியல் திணைக்களத்தை தமிழர்கள் தொல்லைத் திணைக்களமாக பார்க்கின்றனர்.

வடக்கு மாகாணத்தில் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் 1962ஆம் ஆண்டு 130 இடங்களை மட்டுமே உரிமை கோரிய தொல்பொருள் திணைக்களம் தற்போது 251 இடங்களை உரிமை கோருகின்றது.


கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் கருதப்படும் பிரதேசங்களை தொல்லியல் திணைக்களம் தமது ஆளுகைக்குள் கொண்டுவந்தாலும் அவை பௌத்த சின்னங்களாகவே பேணப்படுகின்றது என்பதே தமிழர்களின் நீண்டகால குற்றச் சாட்டாகவும் உள்ளது.

இந்தக் குற்றச் சாட்டுகளை மறுக்கும் திணைக்களம் தொன்மை சின்னங்களை பராமரிப்பது ஒன்றே திணைக்களத்தின் பிரதான பணி என்கின்றனர்.

இவ்வாறு 251 இடங்களை உரிமைகோரும் திணைக்களத்திடம் 144 இடங்களிற்கு இன்று வரை வர்த்தமானி அறிவித்தல்கூட கிடையாது.

இதனால் தமிழ் மக்களின் சந்தேகத்தில் ஒரு நியாயப்பாடு இருப்பதாகவே கருதப்படுகின்றது. இதேநேரம் 1962ஆம. ஆண்டு 130 இடங்களை உரிமை கோரிய திணைக்களத்திடம் 2021ஆம் ஆண்டில்கூட அந்த எண்ணிக்கையிலான இடங்களிற்குரியட வர்த்தமானி கிடையாது என்ற மிகப் பெரும் உண்மையும் உள்ளது.

கிழக்கு மாகாண தொல்லியல் செயலணிக்கு 14 பெரும்பான்மை இனத்தவர்களை நியமித்தபோதும் சிறுபான்மையினர் எவரையும் நியமிக்க எந்த நடவடிக்கையினையும் அரசு எடுக்கப்படவில்லை. கிழக்கு மாகாணம் அதிகளவுக்கு தமிழர்களைக் கொண்டதாக இருக்கின்ற போதிலும், இந்தச் செயலணிக்கு ஒரு தமிழர் நியமிக்கப்படவில்லை என்பதையிட்டு, தமிழ் அரசியல் கட்சிகள் கேள்வி எழுப்பியிருந்தன. இதேநேரம் கிழக்கு செயலணியில் கண்டிப்பாக ஓர் தமிழரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன் எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உறுதிமொழி



வழமையான உறுதிமொழியாகிவிட்டது. அதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தற்போது மௌனமாகிவிட்டார்.

தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளின் மூலம் குறிப்பிட்ட சில இடங்களிற்குள் செல்ல முடியாது ஒரு இனத்தவர்கள் அல்லது ஒரு மதத்தவர்கள் தடுக்கப்படுகின்றபோதும் இன்னுமோர் இனத்தவர்கள் மட்டும் எதையும் செய்யலாம் என்ற நிலமையும் தோற்றுவிக்கப்படுகின்றது என்ற கருத்து சிறுபான்மையினத்தவர்கள் மத்தியில் உருவாகியுள்ளது. இந்தப் பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள்தான் இதற்குக் காரணம். தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் தமிழ் மக்களுடைய இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் உள்ளது என தமிழ்க் கட்சிகள் குற்றச்சாட்டை முன்வைப்பதற்கும் பல காரணங்கள் உள்ளன. இதற்கு திருகோணமலையில் இடம்பெற்ற வழக்கு ஒன்றே நல்ல உதாரணம்.

வடக்கு மாகாணத்தில் 2020ஆம் ஆண்டு இறுதி வரையில் 251 தொல்லியல் சின்னங்களை உரிமை கோரும் தொல்லியல் திணைக்களம் அதில் 108 சின்னங்களிற்கு மட்டுமே வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கின்றது. எஞ்சிய 143 சின்னங்களிற்கும் வர்த்தமானி அறிவித்தல் கிடையாது. இதிலே யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த திணைக்களத்தின் கீழ் 109 இடங்கள் உள்ளதாக தற்போது கூறுகின்றபோதும் 57 இடங்களிற்கு மட்டுமே வர்த்தமானி அறிவித்தல் உள்ளது. எஞ்சிய 52 இடங்களிற்கும் வர்த்தமானி அறிவித்தல் கிடையாது. இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 21 இடங்கள் குறித்த திணைக்களத்தின் கீழ் உள்ளபோதும் அவற்றில் 8 இடங்களிற்கு மட்டுமே வர்த்தமானி அறிவித்தல் உள்ளது. எஞ்சிய 13 இடங்களிற்கும் வர்த்தமானி அறிவித்தல் இல்லை என்பதோடு இந்த 8 இடங்களிற்குமான வர்த்தமானி அறிவித்தல் கூட 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதியே வெளிவந்துள்ளது.



இதேபோன்றே வவுனியா மாவட்டத்தில் உள்ள 43 இடங்களில் 8 இடங்களிற்கும், மன்னார் மாவட்டத்தின் 25 இடங்களில் 14 இடங்களிற்கு மட்டுமே வர்த்தமானி வெளியாகியுள்ள அதே நேரம், முல்லைத்தீவு மாவட்டத்தின் 53 இடங்களில் 23 இடங்களிற்கே திணைக்களம் வசம் வர்த்தமானி அறிவித்தல் உள்ளது. இங்கே மற்றுமோர் முக்கிய அம்சமாக தமது சின்னம் எனக் கூறும் திணைக்களத்திடம் வடக்கில் 63 சின்னங்கள் குறித்து தேவையான ஆவணங்கள் திணைக்களத்திடம் இல்லை என்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 109 சின்னங்களில் 38 இடங்களிற்கும். கிளிநொச்சி மாவட்டத்திலே 4 இடங்களிற்கு இடத்தின் வரைபட அளவுகளோ அல்லது ஆவணங்கள் எவையும் இல்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொல்லியல் திணைக்களத்தின் சின்னங்களைப் பேணி வரலாற்றை பாதுகாப்பதே திணைக்களத்தின் முக்கிய பணியெனக் கூறினாலும், சில இடங்களின் வரலாற்றை திரிவுபடுத்துவதே இந்த திணைக்களம்தான் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவிப்பதனையும் ஏற்கவேண்டியுள்ளது.

அதற்கான உதாரணமாக நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை உதாரணம் காட்டுகின்றார். யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நெடுந்தீவில் வரலாற்றை பாதுகாக்க எனக் கூறி தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடம் எனக் குறிப்பிடும் தொல்லியல் திணைக்களம் வரலாற்றை திரிபுபடுத்துகின்றது என்பதுதான் பிரதானமான மறுக்க முடியாத குற்றச்சாட்டு.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டைக்கு மட்டும் இதுவரை 3 தடவைகள் தொல்லியல் திணைக்களம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளது. இடத்தின் வரலாற்றுத் தொன்மையை பாதுகாப்பதே தொல்லியல் திணைக்களத்தின் முக்கியமான பணியாக காணப்படுகின்றபோதும் தொல்லியல் திணைக்களமே வரலாற்றை மாற்றுகின்றது என்ற குற்றஞ்சாட்டு இங்கே உண்மையாகின்றது.

"வெடியரசன் கோட்டை" என்ற சரியான பெயருடன் 2007-02-23 அன்று வர்த்தமானி வெளியிடப்பட்ட திணைக்களம், பின்பு இதே இடத்தை 2011-12-30 அன்று "தூப" என்னும் பெயரில் வர்த்தமானி பிரசுரித்தனர். பின்பு 3வது தடவை 2020-11-28ல் இதே திணைக்களம் "துறவிகள் மடம்" என வர்த்தமானி அறிவித்தல் பிரசுரித்தது. அவ்வாறானால் இந்த திணைக்களம் வரலாற்றை பாதுகாக்கின்றதா அல்லது திரிவுபடுத்துகின்றதா என்று எழுப்பும் கேள்விக்கு விடை தேட முடியவில்லை.

மன்னார் மாவட்ட நீதிமன்றக் கட்டிடத் தொகுதி தமது திணைக்கள ஆளுகைப் பிரதேசத்திற்குள் வருவதனால் அதனை அகற்றித் தருமாறு திணைக்களம் கடந்த 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி மாவட்ட நிர்வாக அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தது.



தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், சுற்றுலா அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், பொலிசார் அடங்கிய குழுவினர் மன்னார் பகுதியில் உள்ள கோட்டை மற்றும். அதனைச் சூழவுள்ள பகுதிகளை சுற்றுலாப் பகுதியாக மாற்றுவது தொடர்பில் ஆராய்ந்ததோடு அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்தனர்.

இதன்போதே கருத்து தெரிவித்த தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், மன்னார் கோட்டை தொல்லியல் அடையாளமாக 1983ஆம் ஆண்டே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு விட்டது இவ்வாறு வர்த்தமானி வெளியிடப்படும் சமயம் கோட்டையில் இருந்து 400 மீற்றர் தூரம் வரையில் திணைக்களத்தின் ஆளுகைப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிவிக்கப்பட்ட பின்பு இப் பிரதேசத்தில் பல வீடுகளும் திணைக்களங்களும் அமைக்கப்பட்டுள்ளபோதும் தொல்லியல் திணைக்களத்திடம் எந்தவொரு அனுமதியும் பெறப்படவில்லை. எனவே இந்த 400 மீற்றர் பரப்பை தற்போது 3 வலயங்களாக பிரித்து பார்க்கின்றோம்.

அதாவது 70 மீற்றர் முதலாவது வலயமாகவும், 150 மீற்றர் வரையில் 2ஆம் வலயமாகவும் பிரிக்கப்பட்டோடு எஞ்சிய பகுதி 3ஆம் வலயமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் முதலாம் வலயத்திற்குள் வரும் கட்டுமானங்கள் அனைத்தையும் முழுமையாக அகற்றப்பட்டே ஆகவேண்டும். 2ஆம், 3ஆம் வலயங்கள் கோட்டைப் பக்கம் முதல்பக்கம் அகற்றித் தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது முதலாவது வலத்திற்குள் குறிப்பாக 40 மீற்றர் தூரத்திலேயே பொலிஸ் நிலையம் இருப்பதோடு முதலாவது வலயத்திற்குள் சிறைச்சாலை, பள்ளிவாசல் உட்பட 8 வீடுகளும் அகற்ற வேண்டும். எனத் தெரிவித்ததோடு இரண்டாம் வலயமும் அதன் அண்டிய பகுதியிலும் சுற்றுலாத் தளம் அமைந்த பகுதிகள் இவ்வாறே அகற்றப்பட வேண்டும். இதனால் வீடுகள் தப்பித்தாலும் நீதிமன்றக் கட்டிடமும் அகற்றப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர்.




இதன்போது அதிகாரிகள் செய்வதறியாது திகைத்துள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அதிக இடங்களை உரிமை கோரும் தொல்லியல் திணைக்களம் அது தொடர்பில் தமது சட்டத்தை மீறியதாக நீதிமன்றங்களை நாடிய போதும் தற்போது முதல் தடவையாக வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஓர் நீதிமன்றத்தினையும் உரிமை கோருகின்றனர்.

வரலாற்றை பாதுகாத்து ஆவணமாகவும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டிய முக்கிய திணைக்களம் தொல்லியல் திணைக்களம், இருந்தபோதும் இந்த திணைக்களத்தின் பணியோ தொல்லியல் திணைக்களம் என்றாலே ஓர் தொல்லையான திணைக்களம் என தமிழர்கள் கருதுகின்றனர்.

# Sri Lanka: A Crisis, Crackdown and Caution

- Siva Parameswaran, Senior International Journalist London



© Thilina Kaluthotage

As Sri Lanka continues to reel under severe socio-economic and political crisis, the new president Ranil Wickremasinghe's government has started to brutally crackdown on dissidents including dragging individuals from an airplane and a bus in an inhumane way leaving hundreds of bystanders stunned and shocked beyond words.

The government's unabated action against those who participated in the 'Aragalaya' protests - which resulted in forcing former President Gotabaya Rajapaksa to resign and flee the country - has come in for sharp criticism at home and abroad. Coupled with the parliament's approval of extending the draconian emergency law, anti-government activists, while fearing for lives, have vowed to continue their protests.

## Renewed Repression

Ever since the crackdown began on midnight of 21 July, the day Ranil Wickremesinghe was sworn in as president, the rounding up of people continues. In the wee hours of 22 July, the security forces attacked journalists including two from the BBC and at least six other local media persons along with several protestors. Three journalists from 'Xposure News were also attacked during the midnight operation to evict the protestors. Xposure News journalists Chaturanga Pradeep Kumara and Rasika Gunawardana were brutally beaten with a baton and dragged off and their phones, personal and press identity cards were seized by the police. After three hours, the phones were returned after deleting all the recordings and was then let off.

The first week of Wickremasinghe's presidency has been tumultuous becoming synonymous with repression as he declared a public emergency the very next day in office and regularised it with the Rajapaksa-backed ruling party's backing in parliament subsequently.

On July 25th, Colombo Magistrate's Court imposed travel bans on the General Secretary of Joint Health Workers Union Tampitiye Sugathananda Thero, Catholic Priest Fr. Amila Jeewantha Peiris, National Organiser of Youth for Change Lahiru Weerasekara, General Secretary of Ceylon Teachers Union Joseph Stalin, National Organiser of Socialist Students Union Rangana Lakmal Devapriya and National Organiser of Socialist Youth Union Eranga Gunasekara. On 26th July, a prominent activist involved in 'Gota Go Gama' protest campaign, Dhaniz Ali (31), a resident of Kurunegala in northwestern Sri Lanka, was pulled off a Dubai bound plane and arrested. He was later produced before Colombo Fort Magistrate and remanded until August 15.

## Student Abducted

In a resemblance of grabbling Ali from the plane Anthony Weranga Pushpika De Silva, an IUSF activist was dragged down from a bus by plainclothes men and whisked away in a jeep which had the number plate GC 0342, on 27 July. When contacted by Sri Lanka Human Rights Commission, the Colombo Crime Division confirmed that the student activist is in their custody who was later remanded until August 9, after being produced before Kaduwela Magistrate.

On July 28th, Colombo Fort Magistrate issued arrest warrants ordering the arrest of Tampitiye Sugathananda Thero and Lahiru Weerasekara, who still remain in hiding.


© Thilina Kaluthotage

On the same day, Ismat Maulavi (44), a Muslim resident of the small town of Beruwala on Sri Lanka's south-west coast was arrested in Maligawatta by Colombo Crime Division for taking part in a protest in front of police headquarters.

Fr. Amila Jeewantha Peiris, the Parish Priest and Administrator of the Risen Lord Church in Doloswala, which falls under Ratnapura Diocese in south-central Sri Lanka has been under threat of arrest for taking part in 100 day long protest campaign that occupied Galle Face Promenade in Colombo.

Fearing imminent arrest, Fr. Jeewantha Peris has filed a fundamental rights petition with country's Supreme Court on Tuesday (2), seeking an order preventing police and armed forces taking him into custody.

"I have been told that there is a travel ban against me and five others. There are police troops looking for me saying that I have to be arrested on sight" he told in a video statement sent exclusively to JDS.


"As a catholic priest, I had no option when I see people are suffering. My only option was to stand by them to find justice and peace for Sri Lanka", he added.

More arrests followed during the week.

## Rights Groups Raise Concerns

Human rights watch dog Amnesty International has expressed their grave concern about the heightened repression, stating, "Amnesty International strongly condemns the pre-dawn attack by security forces on peaceful protestors at Galle Face. It is shameful that the new government resorted to such violent tactics within hours of coming to power."

Meanwhile, condemning the attack by the security forces, the North East Coordinating Committee, a civil society body staged a protest on Friday (29) expressing their solidarity with the anti-government forces in the south.



© Shehan Gunasekara

While President Wickremesinghe had promised transparency, that's exactly lacking in the stifling the protest operation.

The continuing crackdown has also unsettled western financial institutions who have raised concerns about prevailing political instability. While Wickremasinghe government has expressed its' desperate desire for external support, international rating agency Fitch has warned about the political risks of funding the island nation.

"The government's parliamentary position appears strong, but public support for the government is weaker" the rating agency has pointed out.

"President Wickremasinghe was prime minister in the previous administration under President Gotabaya Rajapaksa, who was brought down by protests. Parliament and the government also remain dominated by politicians closely affiliated with the Rajapaksa family. This may increase the risk of further destabilizing protests if economic conditions do not improve and/or reforms generate public opposition", it further added.

'The accidental President' Wickremesinghe has initially been a vocal supporter of the 'Gota Go Gama' protests, which paved the way for him to reach the top executive post.

However, the continuing crackdown and brutality make the situation even harder for a President commented as 'a one-man member of the party in parliament' and who is fully dependent on the Rajapaksa and his party for running the country to convince the disgruntled masses that their democratic aspirations will be taken into genuine consideration.

© JDS

Note: This story by the author was first published by JDS and is republished with their permission

# Sri Lanka's Lion Brewery Participates in Toronto's Festival of Beer-2002 on July 23rd, 2022

# இலங்கையின் Lion Brewery பியர் தயாரிப்பு நிறுவனம் ரொறன்ரொ பியர் திருவிழா – 2022 இல் பங்குபற்றியது





கடந்த 23-07-2022 சனிக்கிழமையன்று கனடாவின் ரொறன்ரொ மாநகரில் 100 Prince Edward Island Crescent, Toronto என்னும் விலாசத்தில் அமைந்துள்ள BANDSHELL PARK மைதானத்தில் காலை முதல் மாலை வரை நடைபெற்ற ரொறன்ரோ பியர் திருவிழா - 2022 இல் இலங்கையின் Lion Brewery பியர் தயாரிப்பு நிறுவனம் ரொறன்ரொ பியர் திருவிழா - 2022 இல் பங்குபற்றியது. ஆயிரக்கணக்கான பியர் பிரியர்கள் Lion Brewery பியர் தயாரிப்பு நிறுவனத்தின் விற்பனைச் சாவடிக்கு வருகை தந்து இலங்கைத் தயாரிப்புக்களை விருப்பத்துடன் வாங்கி சுவைத்து மகிழ்ந்தனர்.

இங்கே காணப்படும் படங்களில் Lion Brewery பியர் தயாரிப்பு நிறுவனத்தின் விற்பனைச் சாவடியில் மக்கள் வரிசையில் சென்று பியர் மற்றும் ஸ்டவுட் பானங்களை வாங்கி அருந்துவதையும் இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த Lion Brewery பியர் தயாரிப்பு நிறுவனத்தின் வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர் - Business Development Manager - Mr. Charuka Senanayake மற்றும் கனடியப் பிரதிநிதி Fred Levon ஆகியோர் மகிழ்ச்சியுடன் நிற்பதையும் காணலாம்.

உலக செய்திகள் World News

# ஒசாமா பின்லேடன் குடும்பத்திடமிருந்து நிதியுதவி பெற்றாரா இளவரசர் சார்லஸ்? பரவிவரும் தகவல்



ஒசாமா பின்லேடன் குடும்பத்திடம் இருந்து இளவரசர் சார்லஸ் நிதியுதவி பெற்றதாக அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது. சர்வதேச பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், ஒசாமாவின் உறவினரும் சகோதரரான ஷபீக் பின்லேடனிடம் இருந்து 2013ஆம் ஆண்டு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த தொகை, பிரின்ஸ் ஆ.்.ப் வேல்ஸ் அறக்கட்டளைக்கு சென்றதால், தனிப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்தப்படவில்லை எனக்கூறப்படுகிறது.

பின்லேடன் குடும்பத்தினரிடம் இருந்து பெருந்தொகை நன்கொடையாக பெறுவது அரச குடும்பத்திற்கு சிக்கலை ஏற்படுத்தும் என அப்போது அரண்மனை அதிகாரிகள் தரப்பு எச்சரித்ததாக கூறப்படுகிறது. இந்த விவகாரம் தற்போது பேசுபொருளாகியுள்ள நிலையில், இதுவரை இளவரசர் சார்லஸ் தரப்பில் இருந்து எந்த ஒரு அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

சினிமா

# ஏ.ஆர்.ரகுமான் குரலில் வெளியானது "பொன்னி நதி" பாடல்!

விக்ரம், கார்த்தி, ஜெயம் ரவி, சரத்குமார், ஜெயம் ரவி, பிரகாஷ்ராஜ், பிரபு, விக்ரம் பிரபு, லால், ரகுமான், பார்த்திபன், ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, ஐஸ்வர்ய லக்ஷ்மி, ஷோபிதா உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடிப்பில் உருவாகி வரும் படம் "பொன்னியின் செல்வன்". ஆயிரம் ஆண்டுகளுக்கு சோழ இளவரசர் அருள்மொழிவர்மன், முதலாம் ராஜராஜ சோழனாக அரியணை ஏறுவதற்கு முன் நடந்த சம்பவங்களைக் கொண்டு கற்பனையாக எழுதப்பட்ட வரலாற்று நாவலான கல்கியின் "பொன்னியின் செல்வன்" கதையை மையமாகக் கொண்டு இப்படம் எடுக்கப்பட்டு வருகிறது.

இரண்டு பாகங்களாக உருவாகி வரும் இந்தப் படத்தின் முதல் பாகம் வருகிற செப்டம்பர் 30-ம் தேதி தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் உள்ளிட்ட 5 மொழிகளில் வெளியாகிறது. இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் இந்தப் படத்திற்கு இசையமைத்துள்ளார். இந்நிலையில், இந்தப் படத்தின் முதல் பாடலான "பொன்னி நதி" பாடல் இன்று வெளியிடப்பட்டது. எக்ஸ்பிரஸ் அவென்யூ வளாகத்தில் பிரமாண்டமாக நிகழ்ச்சியில் இந்த பாடல் வெளியானது.

வாணர் குலத்தைச் சேர்ந்த வல்லவரையன் வந்தியத் தேவன், ஆடி மாதம் 18 ஆம் தேதி ஆடிப்பெருக்கு கொண்டாடப்படும் வேளையில் சோழ தேசத்தின் வீர நாராயண ஏரிக்கரை மீது குதிரைப் பயணம் மேற்கொண்டு வருவான். இங்குதான் "பொன்னியின் செல்வன்" கதையே துவங்கும். சோழப் பேரரசின் மிகப்பெரிய வீர சரித்திரத்தில் பிற்காலத்தில் இடம்பெறப் போகிறோம் என்பது தெரியாமலேயே, வீர நாராயண ஏரியின் வசீகரத்தை கண்டுக்கொண்டே செல்வான். பிரமாண்டமாக பெருக்கெடுக்கும் காவிரியின் அழகு வந்தியத்தேவனை திக்கு முக்காடச் செய்யும்.



"வடவாறு பொங்கி வருது வந்து பாருங்கள், பள்ளியரே!

வெள்ளாறு விரைந்து வந்து வேடிக்கை பாருங்கள் தோழியரே!

காவேரி புரண்டு வருது காண வாருங்கள், பாங்கியரே!" என்ற நாட்டுப்புறப்பாடல் வந்தியத் தேவன் செவிகளில் விழும். இதனை நினைப்படுத்தும் விதமாகவே "பொன்னி நதி" பாடல் வெளியாகியுள்ளது. "பொன்னி நதி பாக்கணுமே பொழுதுக்குள்ள! கன்னிப்பெண்கள் காணணுமே காற்றைப்போல" என்ற வரிகளில் ஏ.ஆர். ரகுமான் குரலில் வெளியானது பாடல்.

# "ஆயிரம் கோயில்களை கட்டுவதை விட ஒருவரைப் படிக்க வைப்பது மேல்" – "விருமன்" நிகழ்வில் நடிகர் சூரி



"ஆயிரம் கோயில்கள் கட்டுவதை விட ஒருவரைப் படிக்க வைப்பது பல ஜென்மம் பேசும்" என்று "விருமன்" பட இசை மற்றும் ட்ரெய்லர் வெளியீட்டு விழாவில் சூரி பேசினார். மதுரையில் "விருமன்" பட இசை மற்றும் ட்ரெய்லர் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் நடிகர் சூர்யா, கார்த்திக், அதிதி சங்கர், இயக்குநர் பாரதிராஜா, யுவன்சங்கர் ராஜா, முத்தையா, சூரி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நடிகர் சூரி, "தேசிய விருதுபெற்ற சூர்யாவுக்கு வாழ்த்துகள். சினிமாவில் உங்களின் உழைப்புதான் உங்களை இந்த இடத்திற்கு கொண்டு வந்துள்ளது. நீங்கள் தயாரிக்கும் படங்களும், உங்கள் உழைப்பும் பல ஆண்டுகளுக்கு பேசப்படும். அதையெல்லாம் கடந்து, ஆயிரம் கோயில்கள் கட்டுவதை விட ஒருவரை படிக்க வைப்பது பல ஜென்மம் பேசும். அது மிகப் பெரிய விஷயம். அதை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதனால்தான் உங்களைச் சுற்றி இப்படியான பெரிய கூட்டம் இருந்துகொண்டே இருக்கிறது. எப்போதும் அவர்கள் இருப்பார்கள். படத்தில் குத்துக்கல்லு கதாபாத்திரத்தில் நடித்துள்ளேன். படம் வெற்றிபெற வாழ்த்துகள்" என்று பேசினார்.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்பந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



Join us for our Annual Picnic

DRIEBERG COLLEGE CHAVAKACHCHERI
ALUMNI ASSOCIATION – CANADA
21st Annual Picnic & Annual General Meeting

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர்
ஆசிரியர் சங்கம் - கனடா
21வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடலும் வருடாந்த பொதுக்கூட்டமும்

திகதி: ஞாயிறு ஆவணி 14, 2022- SundayAugust 14, 2022
நேரம்: 10.00 முதல், 7.00 வரை - 10.00 a.m. to 7.00 p.m.
இடம்: Milliken District PARK, Picnic Area "C"
5555 Steeles Ave E, (Middle Field & Steeles)
Toronto, ON M9L 1S7

பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சிநேகிதர்கள், யாவரும் குடும்பத்துடன் சமூகம் தந்து, 21வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடலில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். காலை, மதிய, உணவும், மாலைசிற்றுண்டியும் வழங்கப்படும். விளையாட்டு போட்டிகளும் இடம் பெறும்.

RSVP before August 10, 2022 Please Contact:
Gunam Hunt 905-472-0379; Mohan Devabalan 416-274-2169
Rajagopal Mathialagan 905-2945419; Vasuki Devadason 416-2661234
Reginald Thevaranjan416-4462965;Selvarasah Sinnadurai4163355948


SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
SINHA
-1881-
SINHA
LAGER
IMPORTED
alc./vol
330 ml
es / Bouteilles
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020


True Sound Live
வழங்கும்
இசைப்புயல்
AR RAHMAN
Live in Toronto
All Access Tour
August 28
Sunday 7pm
Scotiabank Arena
Toronto, Canada
www.ticketmaster.ca
FM 88.9
416-441-4100
east
FM 102.7
ATN
உதயன்


SULLIVAN AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
2022
POWERED BY
iConnect Mortgages
AUGUST 27TH & 28TH
தமிழர் தெரு விழா
MARKHAM RD.
(Between McNicoll Ave & Passmore Ave)
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
BRIMELL TOYOTA
Formula Honda
MORNINGSIDE NISSAN
POWERED BY
iConnect Mortgages
Dominion Lending Centres
HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
ZONE SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife Future Realty Inc.
NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
Pradon Silks
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING HOUSE
COMMUNITY PARTNER
Federation of Tamil Sangams of North America
SINCE 1988
SUPPORTED BY
TORONTO
Canada
ATN
ASIAN TELEVISION NETWORK
MEDIA SPONSORS
east FM 102.7
STARMETROLAND MEDIA
TAMILFEST.CA
TAMILFEST@CANADIANTAMILCONGRESS.CA
416.240.0078
@tamilfest





கோடை இசை மழை
இடம் பெறும்....
AUGUST 12,13,14 ம்
தேதிகளில்
உங்கள் விளம்பரங்கள்
வர்த்தக சாவடிகள்,
இடம்பெற
அழையுங்கள்....

வர்த்தக சாவடிகள்,
3 நாட்களுக்கு
($1000 முதல்)
முன்பதிவுகளுக்கு
முந்திக்கொள்ளுங்கள்
முற்பதிவுகள்
ஜூலை 31க்குப்பின்
ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது

முன்பதிவிற்கு : 416 5563219

நூல் வெளியீடு




"வானொலி வரலாற்றில்
இது ஓர் ஆவணப்திவு"

கோலாகல இசைமழையுடன்
ஓர் நூல் வெளியீடு....

திறந்த வெளியரங்கில் மாலை 5 மணிமுதல்
உலகத் தமிழர்களின் அன்பு அறிவிப்பாளர்
B.H.அப்துல் ஹமீத்
அவர்கள் எழுதிய
வானலைகளில் ஒரு வழிப்போக்கன்
(இது வானொலி வரலாற்றின் ஆவணப் பதிவு)
நூல் வெளியீடு.


S.K.ராஜன்

DATE : AUGUST-12
PLACE : MARKHAM MEADOW
8100 STEELS AVE


மதுமிதா

உங்கள் அபிமானத்துக்குரிய இந்திய -
கனேடியக் கலைஞர்கள்
வழங்கும்.....
ஆடலும் - பாடலும் இணைந்த
கலைவிருந்தும் உண்டு.
அழைப்பிதழ்
திரு / திருமதி......................................
அன்புடையீர்!
உலகெங்கும் வாழும் தமிழ் மக்களது அன்புக்குரிய
அறிவிப்பாளர்
திரு. B.H.அப்துல் ஹமீத் அவர்கள் எழுதிய
'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்'
எனும் வானொலி வரலாற்று
ஆவணப் பதிவு நூல் வெளீடு,
எதிர் வரும் ஆகஸ்டு 12 மாலை 5 மணிக்கு
ஆடல்-பாடல் கலைநிகழ்வுகளோடு
நடைபெறும் இந்நிகழ்வில்
கலந்து கொள்ளவருமாறு
உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

அனுமதி இலவசம்! தமிழோசை - சினி மீடியா!!

416 5563219

# புதிய சனாதிபதி கோட்டாவிடம் பாடம் கற்க வேண்டும்! -ஒஸ்டின் பெர்னாண்டோ

(சென்றவாரத் தொடர்ச்சி)

மவுனமான மற்றும் மவுனப்படுத்தப்பட்ட ஊடகங்கள்

தற்போதைய சனாதிபதி மற்றும் அவரது நடவடிக்கைகள் எவ்வளவு சர்ச்சைக்குரியதாக இருந்தாலும், அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் எப்போதும் புகழ்ந்து பேசுவது அனைவரும் அறிந்ததே. இராசபக்சக்கள் உள்ளும் புறமும் காணப்பட்ட அனைத்து எதிர்ப்பையும் சரிக்கட்டுவதில் சாணக்ய நீதியியில் சொல்லப்பட்ட சாம, பேத, தான மற்றும் தண்டம் என்ற நால்வகை உத்திகளுக்கு ஏற்ப வற்புறுத்தல், வாங்குதல், தண்டித்தல் மற்றும் சூழ்ச்சிகள் ஆகியவற்றைக் கையாண்டனர். அவர்கள் தனியார் ஊடகத்தை "சொந்தமாக", "பதிலி - உரிமை", "வேறு வழியில்லாத சூழ்நிலையில் அந்த நபரை வைத்து ஒருவரை ஏதாவது செய்யும்படி கட்டாயப்படுத்துவது" அல்லது "பேரழிவு" மூலம் கட்டுப்படுத்தினர்.



இத்தகைய கட்டுப்பாடுகள் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சட்டநிறைவேற்ற ஆட்சித்துறையின் கீழ் இருப்பதால், உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற முறையில், ஊடகங்கள் பெரும்பாலும் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிகின்றன. கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது லசந்த விக்கிரமதுங்க, போத்தல ஜயந்த, பிரதீப் எக்னேலிகொட, குகன் மற்றும் பலர், சிராசா, சியாத்த, லங்காநியூஸ் மீதான தாக்குதல்கள் காரணமாக ஊடகங்கள் மவுனம் காத்தன. யூலை 09 2022 அளவில் அனைத்தும் முடக்கப்பட்டன. இது புதிய சனாதிபதிக்கு பாடமாக அமைய வேண்டும்.

தம்மபதத்திலிருந்து கற்றல்

கோட்டாபய இராசபக்ச வெளியேறிய பிறகு, சுவையான மின்னணு ஊடகக் குறிப்புகளைக் கண்டேன். மாலைதீவு நாடாளுமன்றத்தின் சபாநாயகர் மொஹமட் நஷீதின் ஒன்றை மேற்கோள் காட்டுகிறேன். அது சொன்னது:

"சனாதிபதி கோட்டாபய இராசபக்ச சனாதிபதி பதவியில் இருந்து விலகிவிட்டார். இலங்கை இப்போது முன்னேற முடியும் என்று நம்புகிறேன். அவர் இன்னும் இலங்கையில் இருந்திருந்தால், தனது உயிரை இழக்க நேரிடும் என்ற அச்சத்தில் சனாதிபதி பதவி விலகியிருக்க மாட்டார் என்று நான் நம்புகிறேன்." (14-7-2022 அன்று காலை 07.36 மணிக்கு)



கோட்டாபய, போரின் போது எடுத்த கடுமையானநிலைப்பாடுகளை வெளிப்படையாகக் மேற்கோள் காட்டி வந்தார். அவரது தொனியும், அப்படிப் பேசுவதும் அச்சுறுத்தலாக இருந்தது. மேலும் அவர் கண்களில் சிமிட்டும் நரித்தனம் இருந்தது. அவர் மோதலின் வலிகளைப் பற்றி அலட்சியமாக இருந்தார். போராட்டங்களை இராணுவத்தால் நசுக்க முடியும் என்று நினைத்தார். அவர் விரும்பினால், இராணுவத்தை ஈடுபடுத்தி நெல்வயல்களைப் பயிரிடும் திறனை ஒருமுறை அவர் குறிப்பிட்டார்! ஆனால் மேற்கண்ட மேற்கோள் அவர் தப்பியோடுவதற்கு முன் அவரது பலவீனமான மனநிலையைக் காட்டுகிறது. மரண பயத்தில் இருந்த அவரை நான் குறை கூறவில்லை. தம்மபதம் கூறுவது இதுவே:

தம்மபாதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

சப்பே தசந்தி தண்தஸ்ஸா
சப்பே பயந்தி மச்சுனோ
அத்தானம் உபமம் கத்வா
ந ஹநேய ந கதயே
(தம்மபதம் – தண்ட வாகை – சரணம் 129)

தண்டனையைக் கண்டு அனைவரும் நடுங்குகிறார்கள் எல்லோரும் மரணத்திற்கு பயப்படுகிறார்கள். தன்னுடன் ஒப்பிட்டுப் பார்த்து, ஒருவரைக் கொல்லவோ, மற்றொருவரைக் கொல்லவோ கூடாது.

சப்பே தசந்தி தண்தஸ்ஸா
சப்பேசம் ஜீவிதம் பியாம்
அத்தானம் உபமம் கத்வா
ந ஹநேய ந கதயே
(தம்மபதம் – தண்ட வாகை – சரணம் 130)

தண்டனையைக் கண்டு அனைவரும் நடுங்குகிறார்கள் வாழ்க்கை அனைவருக்கும் பிரியமானது. தன்னுடன் ஒப்பிட்டுப் பார்த்து, ஒருவரைக் கொல்லவோ, மற்றொருவரைக் கொல்லவோ கூடாது.

இரண்டரை ஆயிரமாண்டுகளுக்கு முன்னர் புத்தர் பிரசங்கித்த நித்திய உண்மை இதுவே. இதனைக் கோட்டாபய நினைவில் வைத்திருந்தார், இன்று தெரிவு செய்யப்படும் புதிய சனாதிபதி இதனை மறந்துவிடக் கூடாது.



தச ராஜ தர்மம்

ஆட்சியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய தச ராஜ தர்மத்தைப் பற்றிப் பவுத்த இலக்கியங்கள் பேசுகின்றன. கோட்டாபய ஓரளவிற்கு அதைச் செய்தார் என்று நான் நினைக்கிறேன். தானத்தைக் கருத்தில் கொண்டால், அன்னதானம், நன்கொடைகள், கோயில்கள் போன்றவற்றில் நான் அவரைப் பார்த்திருக்கிறேன். ஆனால் தான கோட்பாடு என்பது இன்னும் பலவற்றைக் குறிக்கிறது— பொது நலனுக்காகவும் ஈகை செய்தல். உழவர்களின் நல்வாழ்வைப் பாதித்த உரத்தடை போன்ற சில சிக்கல்களை அவர் கையாண்டதில் இதன் எதிரொலி வெளிப்பட்டது.

மேலும் பரிச்சக தர்மமும் நினைவுக்கு வருகிறது. கோட்டாபாய கூட்டுக்குற்றச்சாட்டு பொதுமக்களின் செலவில் நண்பரின் நலனுக்காக சர்க்கரை மீதான வரியை இல்லாது ஆக்குவது கேள்விக்குரியது. சர்க்கரை வரி ஊழல் அஜ்ஜவா (நேர்மை) தரத்தை மீறியதாகக் கருதப்படலாம். இருப்பினும் அவர் தனிப்பட்ட முறையில் ஆதாயம் அடைந்தார் என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை. ஆனால், திறைச்சேரிக்கு ஏற்பட்ட இழப்பு 16 பில்லியன் ரூபாயை அறவிட வேண்டும் என்று கணக்காய்வாளர் பரிந்துரைத்தாலும் கோட்டாபய அது தொடர்பாக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இது அவர் மோசடி செய்தவருக்கு பக்க சார்பாக நடந்து கொண்டதைக் காட்டுகிறது. புதிய சனாதிபதியும் இதை ஒரு நல்ல பாடமாக நினைவில் வைத்து, ஏற்பட்ட இழப்புகளை மீட்டெடுக்க வேண்டும்.

கோட்டாபயவுக்கு மத்தவ குணம் இல்லை என்பது பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியிலும் நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். மத்தவ என்பது மென்மையான குணம், பிறரை அவதூறு செய்தல் அல்லது அதனைத் தவிர்த்தல், (எ.கா. மத்திய வங்கி ஆளுநர் டபிள்யூ.டி. இலக்ஷ்மண் மற்றும் அவரது குழுவினர், வீடியோ கிளிப்பில் இருந்து பார்க்கும்போது, 'வாய்மொழியாக திட்டப்பட்டனர்.) ஒரு இளைய நிர்வாகி கூட, "பொதுவெளியில் பாராட்டுங்கள், தனித்தனியாக கண்டியுங்கள்!" என்று சொல்லியிருப்பார். ஒருவேளை, அவர் சனாதிபதி இரணசிங்க பிரேமதாசவைப் பின்பற்றியிருக்கலாம். தன்னைப் பதவி நீக்கம் செய்வதற்கான முயற்சி விலக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீளக் கூடியபோது அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றினர். அப்போது தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக அவர் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தனர். 2018 ஆம் ஆண்டு தோல்வியடைந்த அரசியலமைப்பு சதியின் பின்னர் இரணில் விக்ரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமித்ததன் பின்னர் (திருமதி மைத்திரி விக்கிரமசிங்க முன்னிலையில்) கடுமையான வார்த்தைத் தாக்குதலை சனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டிருந்தார்.

மற்றொன்று அக்கோதா (கோபமில்லாத) குணம், அதிலிருந்து விடுபட்டு அமைதியாக இருப்பது. கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது பன்னாட்டு ஊடகங்களுடன் உரையாடியபோது, "லசந்த யார்?" மற்றும் "நான் அவரைத் தூக்கிலிடுவேன்" (சரத் பொன்சேகாவைக் குறிப்பிட்டு) என்றார். ஒரு இராணுவ வீரர் என்ற நிலையில், அவர் பேசும் ஒவ்வொரு சொல்லும் துப்பாக்கித் தோட்டா போன்றது, திரும்ப வராது என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும். புதிய சனாதிபதிக்கும் இது ஒரு பாடம்.



அவிஹிம்ச குணம் கோட்டாபயவுக்கு அந்நியமானது என்பது அவர் மீதான மோசமான குற்றச்சாட்டுகளில் இருந்து தெளிவாகியுள்ளது. இரசாயன உரத் தடை, கடன் மறுசீரமைப்பு மற்றும் விடயங்களைப் பிரதிநிதித்துவம் செய்வது குறித்து வேளாண்மை வல்லுநர்கள் மற்றும் பொருளாதார வல்லுநர்களின் பிரதிநிதித்துவத்திலிருந்து பார்க்கக்கூடிய சாந்தி தரம், மற்றும் அவிரோதனா அல்லது நேர்மையான தரம், மற்றவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் பாகுபாட்டைத் தவிர்ப்பது ஆகியவையும் அவருக்கு இல்லை. முறையே பன்னாட்டு நாணய நிதியம் (**IMF**). தனிப்பட்ட தப்பெண்ணம் மற்றும் ஆணவத்தைப் பொறுத்தவரை, இந்தியாவில் இலங்கைத் தூதராக இருந்த எனது தனிப்பட்ட அனுபவம் எனக்கு உண்டு, ஆனால் நான் அவரை மன்னித்துவிட்டதால் விரிவாகக் கூறுவதைத் தவிர்க்கிறேன். அவரைவிட நான் முதிர்ச்சியடைந்தவன்!

தனது உயிரை இழக்க நேரிடும் என்று பயம் அவரிடம் இருந்தது வெளிப்படை. யாருக்குத்தான் பயம் இல்லை? சனாதிபதி மாளிகையைச் சுற்றி வளைத்துத் துப்பாக்கிச் சூடு நடத்தலாமா என வினவியபோது, தான் உண்மையான ஆபத்தில் இருந்த போதிலும், துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டாம் என்று உத்தரவிட்டதாக ஊடகச் செய்திகள் கூறுகின்றன. அவரது நடத்தை பாராட்டப்பட வேண்டும். உயிரை பணயம் வைத்தும் கூட, வருங்கால சனாதிபதிகளுக்கும், இராணுவத்துக்கும் பாடம் புகட்டியுள்ளார்.

கோட்டாபயவை கேலி செய்கின்றனர்

கோட்டாபய கேலி செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அண்மையில் கோத்தபாய பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் **Frederica Jansz** (முன்னாள் சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியை) நகைச்சுவையாக கோட்டாபய சியாட்டிலில் **(Seattle)** ஒரு கோப்பை காப்பிக்கு அழைத்தார். அங்குதான் கோட்டாபய அவர்கள் விடுத்த அச்சுறுத்தலுக்குப் பயந்து அவர் **(Jansz)** ஓடித்தப்பினார். இத்தகைய கேலிக்கூத்துகளை கோட்டாபய புறக்கணித்திருக்கலாம் என நான் கருதுகிறேன். ஆனால் வரவிருக்கும் சனாதிபதிகளுக்கு சொல்லப்படும் பாடம் என்னவென்றால், வாழ்க்கை மிகவும் மதிப்புமிக்கது, மரணம் மிகவும் வெறுக்கத்தக்கது என்பதாகும், மேலும் அவர்கள் இந்த நித்திய உண்மையை மதிக்க வேண்டும். குறிப்பாக வாழ்க்கை அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் நாள் விடியும் போது அவர்கள் அதை உணர்வார்கள். புதிய சனாதிபதி அவர்களே இது உங்களுக்குச் சமர்ப்பணம்.

சனாதிபதிகளுடனான எனது அனுபவத்தின் மூலம், இரண்டு சனாதிபதிகள் பொதுமக்களால் அதிகமாக கேலி செய்யப்பட்டதை நான் நினைவுகூர விரும்புகிறேன். சனாதிபதி பிரேமதாசவைப் பற்றிச் சில கட்டுக்கதைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் நல்வாய்ப்பாக அவை சமூக ஊடகங்களுக்கு முந்தைய நாட்கள். சமூக மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் விரிவாக்கத்துடன், சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவ்வாறான ஏளனங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. நிச்சயமாக, கனேடிய பிரதமர் மல்ரோனியைப் போல யாரும் அவர்களைப் பற்றிய பகிடிப் புத்தகங்களை வெளியிடாதது நல்லதாகப் போயிற்று. அந்தளவில் அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்!

வரவிருக்கும் சனாதிபதிகளுக்கு வழங்கக்கூடிய ஒரு செய்தி என்னவென்றால், அவர்கள் மக்களின் வேட்கைகளை நிறைவேற்றத் தவறினால், அவர்கள் கோட்டாபயவை அடிப்பார்கள். இராணுவம், தடியடி, நீர்ப் பீரங்கி, கண்ணீர்ப் புகை குண்டுகள் அல்லது தோட்டாக்கள் நிறுத்தப்படாது அல்லது கைப்பற்றப்படாது. "மக்கள் போராட்டங்கள்" அல்லது "அறகலயாக்கள்" இவற்றைக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டால், கடைசியாக அவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற ஓட வேண்டியிருக்கும் - சில சமயங்களில் நாடோடிகளாக, ஒரு நகரத்திலிருந்து மற்றொன்றுக்கு பாய வேண்டி நேரிடும். அப்பொழுதும் விசா இல்லாததால். அவர்கள் வாழ விரும்பும் இடத்திலிருந்து நிராகரிக்கப்படுவார்கள். கோட்டாபயவிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய இறுதிப் பாடம் இதுதான்.

இன்று புதிய சனாதிபதியாக பதவியேற்கும் நபருக்கு வாழ்த்துக்கள்!

(ஆங்கில மூலம் **https://www.colombotelegraph.com/index.php/the-new-president-must-learn-from-gota/** )
தமிழாக்கம் கனடா நக்கீரன்.

முற்றும்.

# இலங்கையில் சீன "கண்காணிப்பு கப்பல்": தமிழர்கள் கடும் எதிர்ப்பு



யுவான் வோங் 5 என்ற சீனாவின் கண்காணிப்பு கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகைத் தரவிருப்பது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், இலங்கையின் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் கப்பல் வருகைக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த கப்பலின் வருகையானது இலங்கையின் நட்பு நாடான இந்தியாவை அதிக கண்காணிப்பை மேற்கொள்ளத் தூண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்துகின்ற எந்த செயற்பாட்டையும் தமிழர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் டெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கின்றார்.

இலங்கை பொருளாதார ரீதியாக நலிவடைந்து மக்களுடைய அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இராஜதந்திர நடவடிக்கையாக இலங்கை அரசாங்கம் தீர்மானம் மேற்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், "இந்தியாவினுடைய புலனாய்வு அறிக்கையின் படி சீனாவினுடைய உளவு கப்பல் வருகை என்பது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பாரிய ஒரு இடைவெளியை கொண்டு வரும் என நாங்கள் நினைக்கிறோம்." என அவர் கூறியுள்ளார்.

"எங்களைப் பொறுத்தமட்டில் இந்தியாவுக்கு பாதுகாப்பு பிரச்சினை வருமாக இருந்தால் அதனை அனுமதிக்க முடியாது என்பதில் எமது மக்கள் உறுதியாக உள்ளார்கள்".

சீனாவின் உளவு பார்க்கும் கப்பல் வருகையை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும், இல்லையெனில் இந்திய - இலங்கை நட்புறவில் விரிசல் விழும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில், சீனாவின் யுவான் வோங் 5 கப்பல், ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகைத் தருகின்றமையானது, வலயத்திற்குள் மீண்டும் அமைதியின்மையை தோற்றுவிக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ட்விட்டர் பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்தியா தனது பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிலாஷைகளை பாதிக்கும் எந்தவொரு விடயத்தையும் மிக கவனமாக கண்காணித்து வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பாக்சி, கடந்த வாரம் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த கப்பல் தொடர்பில் இந்தியா தேவையற்ற கவலையை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக இந்திய சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், சீன கப்பலின் இலங்கை விஜயம் குறித்து வெளியாகியுள்ள கரிசனைகளை இலங்கை நிராகரித்துள்ளது.

கப்பலின் இலங்கை விஜயம் குறித்து அமைச்சரவை ஆராய்ந்ததுள்ளதாக தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன அந்த கப்பலை நங்கூரமிட அனுமதி வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

"நாங்கள் முன்னொருபோதும் இல்லாத பொருளாதாரநெருக்கடியை எதிர்கொண்டுள்ள இந்த தருணத்தில் இந்தியாவும் சீனாவும் எங்களுக்கு உதவியுள்ளன".

அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இந்த விவகாரத்திற்கு இராஜதந்திர தீர்வு காணப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக, அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# சர்வகட்சி அரசு: ஜனாதிபதியுடன் கூட்டமைப்பு சந்திப்பு

சர்வகட்சி அரசு ஒன்றை அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதன்கிழமை (03) அன்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சர்வகட்சி அரசு தொடர்பான தமது கட்சியின் கருத்துக்களை ஜனாதிபதியிடம் விரிவாக முன்வைத்தனர்.

அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள 22வது அரசமைப்புத் திருத்தம் மற்றும் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால வரவு செலவுத் திட்டம் தொடர்பிலும் ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிற்கு விளக்கமளித்தார்.

குமார வெல்கம தலைமையிலான புதிய இலங்கை சுதந்திரக் கட்சி மற்றும் அத்துரலியே ரதன தேரர் உள்ளிட்ட விஜய தரணி தேசிய சபையும் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியது.

ஜனாதிபதியினால் இன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.


சர்வகட்சி அரசை அமைப்பதற்கான ஆளும் அரசுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான பேச்சு நேற்று ஆரம்பமாகிய நிலையில் இன்று இரண்டாம் கட்ட பேச்சு நடைபெற்றது.



இந்த கலந்துரையாடலில் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் கலந்துகொண்டார்.

# அரச நிலத்தை தனியாருக்கு வழங்க முற்படும் வடக்கு ஆளுநர்

**- எமது யாழ்ப்பாணச் செய்தியாளர்**



ஆளுநர் செயலகம்
வட. மாகாணம்
பழைய பூங்கா, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்

GOVERNOR'S SECRETARIAT
NORTHERN PROVINCE
Old Park, Chundikuli,
Jaffna

G/NPC/A9/Land/Req/Project

2022.07.20

நீண்ட காலக்குத்தகை – United Fuel Mart Pvt. Ltd

United Fuel Mart (Pvt) Ltd

Email: npgovernor@gmail.com

Web: www.np.gov.lk

கிளிநொச்சி மாவட்டத்துல் பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் எரிபொருள் களஞ்சியம் இருந்த இடத்தை தனியாருக்கு வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராயா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

1960ஆம் ஆண்டு 18 ஆண்டுகளிற்கு குத்தகை அடிப்படையில் மாவட்டச் செயலகத்தினால் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் எரிபொருள் களஞ்சியத்திற்காக வழங்கப்பட்டு பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் களஞ்சியமாக விழங்கிய விழங்கியது.

இவ்வாறு இயங்கிய பெற்றோலிய களஞ்சியம் 1990ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமாகும் வரையில் செயல்பட்டு போரின் காரணமாக கைவிடப்பட்ட நிலத்தை அபகரித்து தனியார் ஒருவர் எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றை எவரது அனுமதியும் இன்று அமைத்துள்ளார்.

அவ்வாறு எரிபொருள் விற்பனை நிலையம் அமைத்துள்ள பகுதி தமக்குரியது எனவே அதனை தமக்கு வழங்க ஆவண செய்யுமாறு 2014ஆம் ஆண்டு முதல் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் கோரிக்கை விடுத்து வருகின்றமையால் இந்தக் காணி தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இந்த நிலத்தை அடாத்தாகப் பிடித்து எரிபொருள் விற்பனை நிலையம் அமைத்துள்ள தனியார் நிறுவனத்திற்கு வழங்க முடியாது என்ற தீர்மானமும் உள்ளது.

இருந்தபோதும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவரும் ஆளுநருமான ஜீவன் தியாகராயா அந்த நிலத்தை தனியாருக்கு வழங்குமாறு மாவட்ட அரச அதிபரான ரூபவதி கேதீஸ்வரனிற்கு பரிந்துரைத்தாலும் மற்றுமோர் இணைத்தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்த நிலத்தை தனியாருக்கு வழங்க எதிர்ப்பு தெரிவிப்பதனால் மாவட்ட நிர்வாகம் அடுத்த கட்டத்திற்கு நகர முடியாமல் தடுமாறுகின்றது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கருத்துரைக்கும்போது,

மகிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் அவரோடு ஒட்டியிருந்த அவரது நாடாளுமன்ற உறுப்பினரின் சித்தப்பாவிற்கு வழங்கவே தற்போதைய ஆளுநரும் துடிக்கின்றார். பதவியில் நியமித்த விசுவாசமாகவே காணப்படுகின்றது. இந்த அரசியில்வாதிகளின் பகட்டு அபிவிருத்திக்கு இது நல்ல உதாரணம். இன்று அந்த நிறுவனம் அமைத்துள்ள எரிபொருள் விற்பனை நிலையம் 10 கோடி ரூபா என்றால் அபகரித்து வைத்துள்ள நிலம் 30 கோடி ரூபா பெறுமதியானது.

இது அரச காணி எந்த அனுமதியில் யாரது சிபார்சில் அடாத்தாக அபகரித்து கட்டப்பட்டது என்பதனை விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க துப்பில்லாத ஆளுநர் அதிகாரிகளை பழிவாங்கவும், நிர்வகத்தை சீர் கெடுக்கவுமே வடக்கில் நியமிக்கப்பட்டாரா என்ற சந்தேகம் எழுகின்றது.

இந்த நிலத்தின் எதிர்த்திசையில் மக்களின் பயன்பாட்டில் இருந்த நூலகத்தை இராணுவம் பிடித்துள்ளது. இதனை அடாவடி அரசியல்வாதிகள் பிடித்துள்ளனர் இதுதான் தமிழ் மக்களின் அவலம் என்றார்.

# தேசிய ரீதியாக மீனவர்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்திற்கு மன்னார் மாவட்டம் பூரண ஒத்துழைப்பு வழங்கும்:

இலங்கை செய்திகள் Sri Lanka News

## மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம்



மீனவர்களின் அச்ச நிலையை போக்க கூடியவாறு கடற்றொழில் அமைச்சரின் பதிலில் திருப்தி இல்லையெனில் தேசிய ரீதியாக போராட்டத்தை முன்னெடுக்க உடன்பாடு கண்டிருக்கும் முல்லைத்தீவு மீனவர்களுடைய போராட்டத்திற்கு மன்னார் மாவட்டமும் முழு பங்களிப்பை செய்யும் என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் புதன்கிழமை (3) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்களை அழைத்து செவ்வாய்கிழமை (2) மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பாகவும் மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வது தொடர்பாக நாங்கள் ஒரு கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டு இருந்தோம்.

இதில் மீனவ கூட்டுறவு சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், போன்றவற்றின் தலைவர், செயலாளர் கலந்து கொண்டார்கள்.

தேவன்பிட்டி தொடக்க மறிச்சிக்கட்டி வரை தலைமன்னார் தொடக்கம் மன்னார் வரையான பெரும் பாலான மீனவ சங்கங்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அவர்களுடைய பல கருத்துக்கள் இங்கு பரிமாற பட்டிருந்தன. இலங்கையில் தற்போது கொலன்னாவையில் வழங்கப்பட்டு வருகின்ற வர்த்தக நடவடிக்கைக்கான எரிபொருள் 464 ரூபா பெருமதியிலிருந்து எரிபொருளை மீனவர்கள் பெற்றுக் கொள்வதாயின் அதற்கு உரிய ஏற்பாட்டை செய்து தருவதாக மாவட்டச் செயலாளர் கூறியதற்கு இணங்க இந்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் அதனைப் பெற்றுக் கொள்ள பெரும்பாலான மீனவ கூட்டுறவு சங்கங்கள் கருத்தை முன் வைத்திருந்தாலும் அவ்வாறான எரிபொருளை எதிர்காலத்தில் அரசனது இந்த விலையை நிர்ணயித்து மீனவர்களுக்கு வழங்க முன் வரும் என்ற அச்சத்தையும் எமக்கு ஏற்படுத்தி உள்ளது என்று மீனவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு அப்பால் கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய ரீதியில் உள்ள மீனவர் பிரச்சினைகள் குறிப்பாக எரிபொருள் பிரச்சினையை எவ்வாறு கையாள வேண்டும் என்று கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் உடனடியாக கடற்றொழில் அமைச்சருக்கு தெரியப் படுத்தப் பட்டு அவருடைய ஊடக வெளியீடாக பத்தாயிரம் மெட்ரிக் டொன் மண்ணெண்ணெய் சி.எஸ்.சி என்னும் எரிபொருள் நிரப்பு நிலைய மூடாக மீனவர்களுக்கு வழங்கும் திட்டம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்த பத்தாயிரம் மெட்ரிக் டொன் எரிபொருளை இலங்கை முழுவதும் உள்ள மீனவர்களுக்கு வழங்க முடியுமா? என்ற கேள்வி இருக்கிறது.

இந்த பத்தாயிரம் மெட்ரிக் டொன் மண்ணெண்ணெய் வந்ததன் பிறகு தொடர்ச்சியாக இந்த நடவடிக்கை நடைபெறுமா? என்ற கேள்வியும் இருக்கிறது.

எனவே மீனவர்களின் அச்ச நிலையை போக்க கூடியவாறு கடற்றொழில் அமைச்சரின் பதிலில் திருப்தி இல்லையெனில் தேசிய ரீதியாக போராட்டத்தை முன்னெடுக்க உடன்பாடு கண்டிருக்கும் அவர்களுடைய போராட்டத்திற்கு மன்னார் மாவட்டமும் முழு பங்களிப்பை செய்யும்.

இந்த விடயத்தையும் நேற்றைய கூட்டத்தில் மீனவர்களுக்கு தெளிவாக விளங்கப்படுத்தி இருந்தோம்.

பெரும்பாலான மீனவர்கள் தற்போது மீன்பிடி சீசனாக இருக்கின்றபடியால் எப்படியாவது எங்களுக்கு எரிபொருட்களை தந்தாக வேண்டும். வெளிச்சந்தையில் நாங்கள் ஆயிரம் ரூபாய்க்கு மேல் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்கின்றோம். இவ்வாறு 464 ரூபாய்க்கு நாங்கள் மண்ணெண்ணெய்யை கொள்வனவு செய்வது எமக்கு பொருத்தமான விடயம் தான் என்று பெரும்பாலான மீனவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே இதனையும் நாங்கள் கருத்தில் கொண்டு மாவட்டச் செயலாளர் இடம் இது தொடர்பாக கலந்துரையாடிய போது ஒன்று போராட்டத்தை முன்னெடுத்து தான் இந்த பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதாயின் அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அல்லது மாவட்டத்தில் இருக்கும் மீனவர்களின் எரிபொருள் பிரச்சனையை நிறைவு செய்ய மாவட்டச் செயலாளர் அவர்கள் பொருத்தமான நடவடிக்கையை மீனவர்களுக்கு பெற்று தருவதாயின் அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று தெளிவாக கூறியிருக்கின்றோம்.

இருந்தாலும் மீன்பிடி அமைச்சரிடம் மன்னார் மாவட்டம் தொடர்பாக நாங்கள் கோரிக்கை முன்வைக்கின்றோம். நீங்கள் கடந்த காலத்தில் வந்த எரிபொருளை குறிப்பாக யாழ் மாவட்ட தீவகங்களுக்கு பெற்று கொடுத்தீர்கள்.

தற்போது வரும் பத்தாயிரம் மெட்ரிக் டொன் மண்ணெண்ணையை எவ்வாறு பங்கிட போகின்றீர்கள். மாவட்டத்திற்கா? அல்லது மாகாணத்திற்கா? அல்லது தேசிய அளவிலான அனைத்து மீனவ சங்கங்களுக்கும் என்ற பதில் உங்களிடம் இருந்து வரவில்லை.

பத்தாயிரம் மெட்ரிக் தொன் உடன் நின்று விடுமா அல்லது தொடர்ச்சியாக இந்த மீனவர்களுக்கு எரிபொருள் வழங்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறதா? என்று பதிலையும் உங்களிடமிருந்து எதிர் பார்க்கிறோம்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்ட மக்களுக்கு மாத்திரமின்றி வடபகுதி மக்களுக்கு இந்திய அரசினதும், இந்திய மக்களினதும் ஆதரவு பெருவாரியாக எமக்கு கிடைத்துள்ளது.

இலங்கையை ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால் சீன உதவியை விட இந்திய உதவிகளே எமக்கு அதிகம் கிடைத்துள்ளது. இடர் காலத்தில் அவர்களால் வழங்கப்பட்ட கோடிக்கணக்கான பெறுமதியான உதவிளை நாங்கள் பெற்றுள்ளோம்.

இலங்கைத்தமிழர்களுக்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் இந்தியாவே குரல் கொடுத்து வருகின்றது. தமிழக மக்கள் எமக்கான நீதியை பெற்றுத்தர இன்று வரை போராடி வருகின்றனர்.

இடைக்கிடையே மீனவர்கள் தொடர்பாக எமக்கும் அவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டாலும், ஒட்டுமொத்தமாக தமிழர்கள், தமிழ் பேசும் மக்கள் என்று பார்க்கின்ற போது நாங்கள் இந்தியாவிற்கு துரோகத்தை செய்து விடக் கூடாது.

சீனா தேவைக்கு மாத்திரம் ஒரு நாட்டை பயன்படுத்துகின்றது.தமது பணத்தை வழங்கி அதனூடாக ஒரு நாட்டை எவ்வாறு அடிமைப்படுத்தி ஆட்சி செய்யலாம் என்ற சிந்தனையே சீனாவிற்கு உள்ளது.

ஆனால் இந்தியா விற்கு அவ்வாறான ஒரு தேவை இல்லை.

தேவை அறிந்து உதவி செய்யக்கூடிய அல்லது உணர்வு ரீதியாக உதவி செய்யக்கூடிய வல்லமை இந்த மக்களிடம் உள்ளது.

எனவே இந்தியாவுக்கு இலங்கை அரசு துரோகத்தை செய்து விடக்கூடாது. எமது நாட்டிற்குள் வந்து இன்னும் ஒரு நாடு உளவு பார்ப்பதை ஏற்றுக் கொள்ளவும் முடியாது. என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# துணுக்காய் பாலிநகர் மகா வித்தியாலயத்தில் நவீன கற்றல் கற்பித்தலுக்கான பிரவேச நிகழ்வு



முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்திற்குறபட்ட பாலிநகர் மகா வித்தியாலயத்தில் நவீன கற்றல் கற்பித்தலுக்கான பிரவேச நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

பாலிநகர் மக வித்தியாலயத்தின் அதிபர் திரு. ஸ்ரீ கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அதிதிகள் வரவேற்பு நிகழ்வும், நவீன கற்றல் கற்பித்தலுக்கான திறப்புவிழாவும் இடம்பெற்றிருந்தன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மாகாண செயலாளர் வரதீஸ்வரன், மாகாண கல்வி பணிப்பாளர் திரு. உதயகுமார், துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் மாலினி முகுந்தன், மற்றும் கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.



நிகழ்வில் அயர் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

**- ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

# பேசாலை மன்.:.புனித பற்றிமா மகா வித்தியாலய மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு



பேசாலை மன்.:.புனித பற்றிமா மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு வியாழக்கிழமை (4) காலை பாடசாலை அதிபர் எஸ்.கே.பிகிராடோ தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

குறித்த சின்னம் சூட்டும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பேசாலை பங்குத்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்து கொண்டார்.


மேலும் உதவி பங்குத்தந்தை, பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட 80 மாணவத்தலைவர்களுக்கு வருகை தந்த விருந்தினர்களினால் சின்னம் சூட்டப்பட்ட மை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**









20

## இசையால் வசமாகி...

என்னை ஸ்காபரோ கிறேஸ் (Scarborough Grace) வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள். அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து எல்லாவிதமான



பரிசோதனைகளையும் செய்தார்கள்.

மூன்று நாட்களுக்குள் வீடு செல்ல அனுமதித்தார்கள். மறுநாள் சண்ணிபுருக் (Sunnybrook) வைத்தியசாலையின் இதய சிகிச்சைப் பிரிவில் அதற்கென உள்ள பகுதியில் இதயமே உன்வேகம் எவ்வளவுக்கு இருந்தது என்று ICD யின் பதிவில் பார்க்கப்பட்டதில் ஒரு நிமிடத்துக்கு 220க்கு அது சென்றிருந்தது.

இதயமே, நீ இனிமேலாவது ஒழுங்காக இயங்குவாயா...???

வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் (FETNA) நிகழ்ச்சிக்குப் போவதற்கு 13 நாட்களே இருந்தன. விமானப் பயணம் செய்ய முடியுமா என்பதையும் மருத்துவ நிபுணரிடம் கேட்டு தெரிந்து கொண்டோம். குறிப்பிட்டபடி அங்கு சென்றோம்.

என் துணைவியாரும் அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்த மகளும் இணைந்து பாஞ்சாலி சபதம், கட்டை விரல் - (ஏகலைவன் கதை) எனும் இரண்டு நாட்டிய நாடகங்களை அந்த நிகழ்ச்சியில் செய்து மிகுந்த பாராட்டுதல்களைப் பெற்றனர்.

அந்தப் பாராட்டுதல்களில் ஒரு பகுதி இதயமே உனக்கும் உரியதுதான்.

இதயமே, நீ தாளம் தப்பத் தொடங்கிய பின்னர் ஒலிவாங்கிக்கு முன்னின்று பாடுவதில் உள்ளூர எனக்கொரு பயம்.

மீண்டும் முன்னர் நிகழ்ந்தது போல பிரச்சினைகள் உண்டாகுமா?

இப்போது பல கேள்விகள்.

இதில் அடிப்படையான கேள்வி ஒரு மனிசனுக்கு பாட்டு முக்கியமா அல்லது உயிர் முக்கியமா?

ஏதோ ஒரு ஆசையிலை அப்பிடியும் இப்பிடியுமாய் கொஞ்சப் பாட்டுக்களை பாடியாச்சு.

இனி, பேசாமல் விட்டிட்டு வேறை வேலையளை பார்க்க வேண்டியதுதானே...

எத்தினை பேர் கேட்கப் போகினம்?

அல்லாட்டில் இருக்கிற வானொலியள் தொலைக்காட்சியள் என்ன...

உதுகளைத் தேடி எடுத்துப் போடப் போகினமே...

சரி பாட்டுக்கு ஏதும் சன்மானம் எண்டாலும் கிடைக்குதா...

அதுவும் இல்லை.

சரி. அதுதான் போகட்டும். ஒவ்வொருமுறை பாட்டு செய்யேக்கையும் செலவுதானே.

இருக்கிற கொஞ்சக் காசையும் செலவழிக்கிறது.

சினிமாக்காரர் மாதிரி ஏதேனும் வருமானம் எண்டாலும் கிடைக்குதா? இல்லைத்தானே.

முகநூலிலை கொஞ்சப் பேர் லைக் (Like) போட்டிட்டு அல்லாட்டில் தம்ஸ் அப் (Thumbs Up) காட்டிப் போட்டு விட்டிடுவினம். அவ்வளவுதான். சும்மா விடுங்கோ..

இதை ஆர் சொன்னது? இதயமே...

ஏதோ நீதான் முனுமுனுக்கிறமாதிரிக் கேட்குது.

இதிலையும் உண்மை இருக்குத்தான்.

ஆனால் ஆசை விடுகுதில்லையே.

கலைகளிலை ஈடுபடுகிற ஆக்கள் சும்மா இருக்கமாட்டினம் எண்டு சொல்லுறவை.

இசை என் ஆத்மாவோடு இணைந்தது.

என் பாடும் ஆற்றல் பரம்பரையாக நான் பெற்ற "முதுசொம்" என்றும் சொல்லலாம்.

அதை பாதுகாத்து அல்லது இன்னும் செழிப்பாக்கி என் சந்ததிக்கும் சமூகத்துக்கும் கையளிக்க வேண்டிய கடமையும் எனக்கு இருப்பதாகவே நான் உணர்கிறேன்.

இசை ஓர் உலகப் பொது மொழி.

இசை உணர்வுகளைப் பகிர்வது.

உறவை வளர்ப்பது.

வாழ்க்கை அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுவது.

இசை உயர்ந்த கருத்துக்களின் காவியாக இருக்கிறது.

பாடுவதாலும் பகிர்வதாலும் நான் மகிழ்வடைகிறேன்.

கேட்போருக்கு மகிழ்வை ஊட்டுகிறேன். எனக்கும் அவர்களுக்குமான பொதுமைகளில் அவர்களைச் சங்கமிக்கச் செய்கிறேன்.

புதியன படைப்பதற்கு இசை எனக்கு துணையாகிறது.

இப்படி இருக்கும் என்னிசையை நான் முற்றாக விட்டுவிடுதல் சாத்தியமில்லை. நோய்ப்பட்டுவிட்ட என்னிதயமே, உனக்கு ஒத்தடம் தருவதும் இசையல்லவா?

இதயமே,

எல்லாரையும் போல சும்மா திண்டு குடிச்சு வாழ்க்கையை முடிக்கிறதிலை என்ன இருக்கு?

*'தேடிச் சோறு நிதம் தின்று பல*
*சின்னஞ்சிறு கதைகள் பேசி மனம்*
*வாடித் துன்பம் மிகவுழன்று பிறர்*
*வாடப் பல செயல்கள் செய்து நரை*
*கூடி கிழப்பருவம் எய்தி கொடுங்*
*கூற்றுக்கு இரையெனப் பின் மாயும் சில*
*வேடிக்கை மனிதரைப்போல் நான்*
*வீழ்வேன் என்று நீ நினைத்தாயோ?'*

எங்கள் பாரதி -

அந்தப் பாரதி கேட்டதை இதயமே நான் உன்னிடம் இப்போது கேட்க வேண்டி இருக்கிறது.

எதற்கும் சந்தேகத்தைத் தெளிவுபடுத்தலாம் என்று நான் பரிசோதனைகளுக்காக சென்றபோது இதயச் சிகிச்சை நிபுணர்களிடம் கேட்டுப் பார்த்தேன்.

அவர்கள் ஒருவிதமாக என்னைப் பார்த்துவிட்டு - சிலவேளை இப்பிடி ஒரு கேள்வியை கேட்ட முதல் ஆள் அவர்களைப் பொறுத்தவரை நான் ஆகவும் இருக்கலாம்.

"பாடுறதுக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

நீங்க நல்லாய் பாடுங்கோ.

அது இதயத்துக்கும் நல்லது" என்று சொன்னார்கள்.

எனது இதய சிகிச்சை நிபுணர் ஒரு தமிழர் என்பதும் அவர் சங்கீதம் படித்தவர் என்பதும் கோவில்களில் பஜனை பாடுபவர் என்பதும் முன்பொரு தடவை குறிப்பிட்ட ஞாபகம்.

இதை அவர் மட்டும் சொல்லவில்லை. வேறு மருத்துவர்களும் சொன்னார்கள். ஆனால் எல்லா மருத்துவர்களும் ஒன்றை மட்டும் சொன்னார்கள்.

அது நான் பாடமுன்னர் பாடுவது பற்றிய ஒரு பதட்டம் (Tension) அல்லது பயம் அல்லது அதிக எதிர்பார்க்கை, அதீத அக்கறை, கவலை (Anxiety) போன்ற உணர்வுகள் இதயத் துடிப்பை அதிகரிக்கலாம் என்பதை சொன்னார்கள்.

இதுபற்றி என் குடும்பத்திலும் தெரியப்படுத்திய பின்னர் எப்ப நான் ஒரு கலை நிகழ்ச்சியில் பங்கெடுத்தாலும் "பயப்படாமல் இருங்கோ பதட்டப்படாமல் இருங்கோ" என்று என் துணைவியார் அறிவுறுத்தத் தொடங்கிவிடுவார்.

அதுவே எனக்கொரு பதட்டத்தினை கொண்டுவந்திடும்.

இதயமே, மதுரைக்கு வந்த சோதனையை விட இது எனக்கொரு பெரிய சோதனையாய் விட்டது.

எப்படியோ எனது இதய சிகிச்சை நிபுணர்கள் தந்த உற்சாகத்தின் பேரிலும் என்னிடமிருந்து விட்டகலாத ஆசை - நாட்டம் - ஆனந்தம் - ஈடுபாடு இவற்றின் பேரிலும் நான் மீண்டும் ஒலிவாங்கிகளுக்கு முன் பாடத் தொடங்கிவிட்டேன்.

வில்லிசைகள். மெல்லிசைகள், நாட்டிய நாடகங்கள், அரங்காடல்கள் என்ற விதமாக இவை தொடர்ந்தன.

மூன்றாண்டுகள் பெரிய பிரச்சினைகள் எதுவும் இன்றி நகர்ந்தன.

2011 ஆவணி 27.

என் துணைவியாரின் மாணவியர் கம்சாயினி, ஜிச்சாயினி ஆகிய இரு சகோதரிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் North York City Playhouse அரங்கில் இடம்பெற்றது.

துணைவியாரால் நடத்தப்படும் அரங்கேற்றங்களில் ஒரு குறு நாட்டிய நாடகம் இடம்பெறுவது பலரும் விரும்பியதால் அது வழமையாகியது. இதன் பிரதியை நான் எழுதுவதோடு பிரதம பாடகரோடு தேவை கருதி நானும் பாடுவதுண்டு. இராம - இராவண யுத்தம் நிகழ்ந்து சீதை சிறை மீட்கப்படுகிறாள்.



அதன் பிறகு சீதையின் கற்பிற்குக் களங்கம் ஏற்படவில்லை.

அவள் தூய்மையானவள்தான் என்பதை நிரூபிக்கும் கட்டம்.

தீ மூட்டப்படுகிறது...


## இணுவில் திருவூர் ஒன்றியம்-கனடா அறிவித்தல்

---

### வருடாந்த ஒன்றுகூடல் – 2022
### கனடா வாழ் இணுவில் மக்களின் வருடாந்த ஒன்றுகூடல்

**காலம்:** 07-08-2022 (ஞாயிற்றுக்கிழமை)
**இடம்:** மில்லீக்கன் பூங்கா -*C* பிரிவு
*(McCowan Road / Steels Ave East)* ஸ்காபுரோ
**நேரம்:** காலை 11.00 மணி முதல்

சகல வயதினருக்குமான களிப்பூட்டும் பல்வகை விளையாட்டுப் போட்டிகள் வழமைபோல இடம்பெறும்.
உண்டு களித்திடவும் எமது ஊர்உறவுகளைக் கண்டு களித்திடவும் குடும்பசகிதமாக வந்து இவ்வொன்றுகூடலைச் சிறப்பிக்குமாறு கனடா வாழ் இணுவில் மக்களை அன்போடு அழைக்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**

சாந்தி சர்வானந்தா: (416) 438-2463, (647) 200-2177
மு. கிருபாகரன்: (416) 430-0422, (416) 389-7399
ப. கஜஜெயன்: (416) 732-5898

## ஒன்று கூடல் (Picnic)

---

கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் குமரன் விளையாட்டுக்கழகம் (கனடா கிளை) நடாத்தும் ஒன்றுகூடல் (Picnic) எதிர்வரும் ஓகஸ்ட் ஆறாம் திகதி 2022ஆம் ஆண்டு சனிக்கிழமை Neilson Park இல் காலை 10 மணி முதல் மாலை 7 மணிவரை நடைபெற உள்ளதால் சகல கோண்டாவில் கிழக்கு மக்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

**தலைவர் - உமாகாந்**
**பொருளாளர் - பால கர்ணன் செயலாளர் - உதயன் (சுமள)**

CANADA KUMARAN SPORTS CLUB **(647) 928-7725**




# உயிருக்கு ஊசலாடும் `ஆசியாவின் அதிசயத்தின்` பொருளாதாரம்

பேராசிரியர் முருகேசு கணேசமூர்த்தி - பொருளாதார பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்

**ரோ**ம் நகரம் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கும் போது பிடில் வாசித்த நீரோ மன்னனைப்போல புதிதாகப் பதவிக்கு வந்த அரசு தலைவர் பிடுங்கவேண்டிய ஆணிகளைப் பிடுங்காமல் ஆர்ப்பாட்டக் காரர்களை பொறிவைத்தப் பிடிப்பதிலே அதி தீவிர ஆர்வம் காட்டுவது வெளிப்படையாகவே தெரிகிறது. அத்தோடு சிறிது காலம் தற்காலிகமாக மறந்து போயிருந்த புலிப்பூச்சாண்டி திரும்பி வந்திருக்கிறது. ஆர்ப்பாட்டக் காரர்களின் பின்னணியில் புலி ஆதரவு சக்திகள் இருந்து செயற்பட்டதாக புதிய கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆக, நாட்டின் பொருளாதாரம் சேணம் இழுக்கின்ற நிலையிலும் வழமைபோல சரத் வீரசேகர போன்ற இனவாதிகள் இனவாதத்தை தூண்டி அதில் குளிர் காயும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. ஆர்ப்பாட்டங்களின் போது அரச சொத்துகள் சேதமாக்கப்பட்டதால் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் கமராக்ககண்களின் முன்னிலையில் ஒலிவாங்கிகளைப் பிடித்திழுத்து சிதைத்த குற்றவாளிகள் கதிரைகளை உடைத்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்ட காவாலிகள் செங்கோலைப் பறித்தோடி அரச சொத்துகளைச் சிதைக்க முற்பட்டவர்கள் இன்னும் அதே பாராளுமன்றத்தில் தானே இருக்கிறார்கள். அவர்களுக்கு எதிராக அல்லவா தீவிர நடவடிக்கை முதலில் மேற்கொள்ள வேண்டும். பாராளுமன்றச் சிறப்புரிமை காவாலித்தனத்திற்கும் விலக்களிப்பும் பாதுகாப்பும் வழங்குமா? இதன் கருத்து அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்தவர்களை சும்மா விட்டுவிட வேண்டும் என்பதல்ல. நாட்டில் சட்டவாட்சி நடைமுறைப்படுத்தப் படுவதையும் சட்டததின் முன் அனைவரும் சமம் என்பதையும் பாராளுமன்றத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்பதாகும்.

மறுபுறம், இலங்கை ஆசியாவில் மட்டுமல்ல உலகிலேயே ஆச்சரியம் என்பதை அண்மையில் உலக நாடுகள் விழிபிதுங்கப்பார்த்தன. வேதாளத்தைத் திரும்பத்திரும்ப பிடித்து தோளில் போட்டுக்கொண்டு வந்த விக்கிரமாதித்தனைப்போல தொடர்ச்சியாக பல தேர்தல்களிலே மக்களால் தெளிவாக நிராகரிக்கப்பட்டு தோல்விகண்ட ஒருவர் சுதந்திரம் பெற்ற இலங்கையில் ஆட்சிப்பொறுப்பேற்ற பலம் வாய்ந்த ஒரு கட்சியைச் சிதறடித்து சின்னாபின்னமாக்கி படு தோல்வியடையச் செய்த பின்னரும் அதன் தலைமைப் பொறுப்பை தகுதிவாய்ந்த ஒருவருக்கு விட்டுத்தரும் மனநிலை இல்லாத ஒருவர் கடந்த பாராளுமன்றத்தேர்தலிலே தனது தொகுதி வாக்காளர்களாலே தூக்கி வீசப்பட்ட ஒருவர் அந்தக் கட்சி பெற்ற ஒரே ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினர் இடத்திற்கு வேறொருவரை நியமிக்காமல் தானே பின்கதவால் சென்று ராஜபக்ஷக்களின் நம்பிக்குரியவராக மாறி அவர்களது அவசரத் தேவையின் பொருட்டு பிரதமராகவும் நியமிக்கப்பட்டு சகுனி தாயக்கட்டைகளை உருட்டியது போல அரசியல் காய்களை நகர்த்தி நாட்டின் உயரிய கதிரையிலும் சென்று அமர முடியும் என்றால், சிலர் அதனை அன்னாரின் அதிர்ஷ்டம் என்கிறார்கள் வேறுசிலர் அவரது நரிமூளையின் பெருஞ்சாதனையாகவும் விடா முயற்சிக்குக் கிடைத்த பரிசாகவும் அதனை சித்தரிக்க விரும்புகின்றனர்.

ஆனால் 1831 ஆம் ஆண்டில் இலங்கையில் ஆரம்பித்த ஜனநாயக பாரம்பரியம் இன்னும் பத்து வருடங்களில் அதன் இருநூறு ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாட உள்ள நிலையில் இலங்கையில் நடைமுறையில் உள்ள ஜனநாயகம் முகிழ்ந்து முதிர்ச்சியடைவதற்குப் பதிலாக வெம்பி வெதுங்கி அழுகிப் போய் முடைநாற்றம் எடுக்கும் குட்டையாக மாறிவிட்டது என்பதற்கு இந்தச் சம்பவமே நல்ல சான்று.

சட்டரீதியில் அந்த நியமனம் செல்லுபடியானது தான் என்பதிலே மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால் அவருக்கு மக்களின் ஆணை கிடையாது என்றால் அது இலங்கையின் ஜனநாயகத்தில் உள்ள மாபெரும் ஓட்டை என்பதை விட வேறென்ன சொல்ல முடியும்? அவர் தான் சட்டப்படியும் அரசியலமைப்பின் படியும் நடப்பதாக உறுதியளிக்கிறார்.



ஆனால் தனக்கு மக்களின் ஆணை இல்லை என்பதை அவரது மனசாட்சி அறியாதா? அப்படிப்பட்ட ஒருவருக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கின்றனர் என்றால் தமது வாக்காளர்கள் வழங்கிய ஆணைக்கு மாறாகச் செயற்பட்டார்கள் என்று தானே பொருள்? இப்படி வேறு ஒரு நாட்டில் நடக்க வாய்ப்பில்லை என்பதால் இது உலக அதிசயம் தான்.

அம்மான் கதிரையில் அமர்ந்த உடனேயே வீசிய வீச்சில் வந்தது அவசரகாலச்சட்டம். ஆர்ப்பாட்டக் காரர்கள் ஆண் பெண் பேதமின்றி அடித்து உதைத்து வெளியே வீசப்பட்டார்கள். வீடு வீடாகத் தேடிப் போய்ப்பிடித்து உள்ளே தள்ளப்பட்டார்கள். ஒருவர் விமானத்தின் உள்ளே இருந்து இழுத்தவரப்பட்டார். இதற்கு முன்னரும் இருவேறு சந்தர்ப்பங்களில் ராஜபக்ஷக்கள் அவசரகாலச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஆனால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எழுந்த அழுத்தங்கள் காரணமாக உடனடியாகவே அவற்றை நீக்கிக் கொள்ள நேரிட்டது. ஆனால் அம்பியாக இருந்தவர் அந்நியனாக மாறி அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பாய்ந்த போது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் ஏன் அந்நியன் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாமல் போனது என்று பலர் புருவங்களை உயர்த்துகிறார்கள்.

உண்மையில் ஐக்கிய அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் இங்கிலாந்து உள்ளிட்ட மேற்குலகும், ஐ எம் எ்.ப், உலக வங்கி போன்றனவும் இலங்கையின் புதிய அடாவடித்தனங்களை உடனடியாகக் கண்டித்தன ட்வீட் செய்திகளையும் பகிர்ந்தன. வெளிநாட்டுத் தூதுவர்களையும் பிரதிநிதிகளையும் சந்திப்புக்கு அழைத்து கறாறான செய்தியொன்றும் வெளிப்படுத்தப்பட்டது. சமூக ஊடகங்களில் வெளிவரும் செய்திகளை நம்பி ட்வீட் பதிவளை வெளியிட வேண்டாமென்றும் அரசாங்கத்திடம் அதுபற்றி சரிபார்த்த பின்னர் கருத்து வெளியிட வேண்டும் என்றும் அறிவிக்கப்ட்டது.

நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்தில் விழுந்து மக்கள் அன்றாட வாழ்க்கையை வாழமுடியாமல் போராடிக்கொண்டிருக்கிறார்கள் அரச கஜானா வற்றிப் போய் விட்டது. பணத்தை அச்சடித்தே அரசாங்கத்தின் உயிர் ஓடுகிறது. டொலர் கையிருப்புகள் தீர்ந்து போய் நாடு துந்தனா அடிக்கிறது. மக்கள் மீது தாக்குதல்களை நடத்துவதை நிறுத்தி நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேசம் ரணிலுக்கு அறிவுறுத்தியது.



ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 2017இல் மீள வழங்கிய ஜி எஸ் பி+ சலுகைகளுக்கான நிபந்தனைகளை நினைவு படுத்தி அவற்றை இலங்கை தொடர்ந்தும் பின்பற்றும் என எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளது. 2009இல் யுத்த முடிவில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களையடுத்து ஐரோப்பிய ஒன்றியம் மேற்படி சலுகைகளை இடை நிறுத்தியது. இப்போதும் இலங்கை தான்தோன்றித்தனமாக செயற்பட்டால் அன்று ஏற்பட்ட நிலை மீண்டும் இடம் பெறலாம் என்ற மறைமுக எச்சரிக்கையாகவும் இதனைக் கருதலாம். இலங்கையின் ஏற்றுமதிகளில் சுமார் 32 சதவீதம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கும் செல்கின்றன. இங்கிலாந்து நீங்கலாக 21 சதவீதம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குச் செல்கிறது. ஜி எஸ் பி+ என்பது இலங்கைக்கு எவ்வளவு முக்கியம் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. ஐரோப்பிய ஒன்றியம் நினைத்தால் இலங்கைக்கு சிறந்த பாடம் புகட்ட முடியும். அதே போல இலங்கையின் ஏற்றுமதிகளில் 25 சதவீதம் செல்லும் ஐக்கிய அமெரிக்காவும் ஜி எஸ் பி சலுகைகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. ஆனால் யாருக்கும் கொடுத்த வாக்கை இலங்கை காப்பாற்றவில்லை.


அண்மையில் இந்தியாவின் மிகப்பிரபலமான ஒரு கல்விநிறுவன விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமெரிக்காவின் புகழ்பூத்த பெண் ராஜதந்திரிகளில் ஒருவரும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவராண்மையின் (USAID) தற்போதைய நிர்வாகியுமாகிய சமந்தா பவர் இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க ஆரம்பித்த உடனேயே அண்டைநாடாகிய இந்தியா துரிதமாகச் செயற்பட்டு, 3.5 பில்லியன் டொலர்கள் வழரையிலான நிதியுதவியைச் செய்து, இலங்கைப் பொருளாதாரம் மேலும் சரிவடைவதைத் தடுத்த நிறுத்த மேற்கோண்ட காலத்தின் பாற்பட்ட உதவியை சிலாகித்தப் பேசியதுடன், இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கு சீனாவிடமிருந்து பெற்ற உயர் வட்டியுடனான பெருத்த உட்பட்டுமானக்கடன்களை முக்கிய காரணமாகச் சுட்டிக்காட்டியிருந்தார். உடனடியாகவே சீன வெளிவிவகார அமைச்சு அதற்கு மறுப்பறிக்கை விட்டு அமெரிக்காவின் வட்டிவீதக்கொள்கைகளும் பொருளாதாரக் கொள்கைகளுமே இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணம் என்று பழியைத்திருப்பி விட முயன்றிருந்தது.

ஆகவே புதிதாக, புதிய மொந்தையில் அதே பழைய புளித்துப்போன கள் ஊற்றப்பட்டு பரிமாற எற்பாடுகள் நடக்கின்றன. தனது பதவிக்காலம் முடியும் வரை பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழி பென்ஷன் கிடைக்காமல் போய்விடுமோ என்று பயந்த உறுப்பினர்களுக்கு ஆறுதல் தரும். ஆர்பாட்டக்காரர்கள் மீது ஆரம்பத்திலேயே அந்நியன் பாய்ச்சல் நடத்தப்பட்டபோது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவான இலங்கையின் பிரபலமான பிக்கு ஒருவர் கோட்டாவின் காலத்தில் கூட இப்படி நடக்கவில்லையே என்று அங்கலாய்த்தார். அவரச கால சட்டத்தை அறிமுகப்படுத்தி ஆர்ப்பாட்டக் காரர்களை தனித்தனியே பிடித்து உள்ளே போட்டுவிட்டால் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்திவிடலாம் என்று ஆட்சியாளர்கள் நினைப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அவ்வாறு ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்திவிட்டால் சுமுகமாக அதிகாரத்தடன் ஆளலாம் என்று கருதப்படுகிறது. ஆனால் மேற்குலகம் தனிமனித சுதந்திரம் மனித உரிமைகள் நல்லாட்சி ஊழல் ஒழிப்பு என்பவற்றையெல்லாம் உதவிக்கான நிபந்தனைகளாக முன்வைப்பது அரசாங்கத்தைக் கடுப்பேற்றி விட்டிருக்கிறது. எனவே தான் ஆர்ப்பாட்டங்கள் காரணமாகத்தான் ஐ எம் எ்.பின் உதவிகளும் கிடைக்காமல் காலதாமதமடைவதாக அவர்கள் மீது பழி திருப்பி விடப்படுகிறது.



புதிய ஆட்சியில் தேவையான உதவிகளைச் செய்ய உலக வங்கி உடனே செய்ய தயாராக இருப்பதாக ஊடகங்களில் செய்தி கசியவிடப்பட்டது.

கடந்த ஜூலை 24 ஆம் திகதி ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்ட உலக வங்கி ஊடககங்களிலே ஊதப்பட்டவை பொய்யென்றும் இலங்கை ஏற்றுக்கொள்ளத்தக்க பொருளாதாரக் கொள்கைச் சீர்திருத்தங்களை முன்வைக்காத வரையில் இலங்கைக்கு புதிய நிதி உதவிகள் எதையும் வழங்கும் திட்டம் எதுவும் இல்லை என அறிவித்தது. 28 அந் திகதி வெளியிட்ட இன்னொரு அறிக்கையில் இதே விடயம் மீள வலியுறத்தப்பட்டு ஏனைய அபிவிருத்திப்பங்களார்களுடன் இணைந்து செயற்படுவதாகவும் இலங்கைக்கு ஏற்கெனவே வாக்களிக்கப்படடுள்ள நிதிகளில் ஒரு பகுதியை மட்டுமே மருந்து, உணவு, எரிபொருள், பாடசாலை மதிய உணவு மற்றும் பாதிக்கப்படும் நிலையில் உள்ள மக்களுக்கான நிதிக் கொடுப்பனவுகளுக்காக திருப்பி விட்டிருப்பதாகவும் அந்த நிதிகள் முறையாக செலவிடப்படும் விதம் பற்றிக் கண்காணிக்கப் படுவதாகவும் கூறியது.



இவ்வாறு இலங்கைக்கு உதவக் கூடிய நட்புநாடுகளுடன் தேவையற்ற விதத்தில் முரண்பட்டுக்கொண்டு ஐ எம் எ்.ப், உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களை ஏமாற்ற முனைந்து ஆடுகளைத்தை இலங்கைக்கு எவ்விதத்திலும் சாதகமற்ற நிலைக்கு தள்ளிச்செல்கின்றனர். இப்போது சீன உதவிக்காக விஜயம் மேற்கொள்ள உள்ளதாகத் தெரிகிறது. அதேவேளை சீனாவின் கப்பல் ஒன்று எதிர்வரும் 11ஆம் திகதி வரவுள்ளதாகத் தெரிகிறது. இக்கப்பலின் வரவு தொடர்பாக இந்தியாக தனது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. ஆபத்பாந்தவனாக காலத்தின் போது உதவிய இந்தியாவின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் தரப்படுமா அல்லது கடன் மீளமைப்ப தொடர்பாக தயவு தேவைப்படும் சீனாவின் பக்கம் சாய்வார்களா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். எதிர்வரும் நாட்களில் அரசியல் களம் சூடுபிடிக்கலாம் இலங்கையின் பொருளாதாரம் மழையில் நனைந்த கோழியைப் போல மூலையில் குந்தியிருந்தும் நடுங்கலாம்.

ஆனால் ஒன்று மட்டும் உறுதியாத் தெரிகிறது. புதிய ஆட்சியில் பாலும் தேனும் பாயும், கேட்டவுடன் கற்பக விருட்சம் போல டொலர் மழை கொட்டும் என்பதெல்லாம் அவ்வளவு எளிதாக நடக்கக் கூடியதல்ல.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1009



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் திருகோணமலை

இக்கோவிலுக்கு தமிழ் மக்களோடு சிங்கள மக்களும் சென்று வணங்குவர். சிங்கள பௌத்த மக்கள், புத்தபிரான், திருமாலை இலங்கையின் காவல் தெய்வமாக வைத்துள்ளார் என நம்புகின்றனர். இலங்கை முடிவடையாத யுத்தபூமியாக விளங்குவதற்கு, திருமாலோடு தொடர்புடைய ஒரு கதை கூறப்பட்டு வருகின்றது. ஆழ்வார்களுடைய பாசுரங்களிலே இலங்கையைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

"குடதிசை முடியைவைத்து குணதிசை பாதம்நீட்டி
வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை யரவணைத் துயிலு மாகண்டு
உடலெனக் குருகுமாலோ என்செய்கே னுலகத்தீரே"

"தென்திசை இலங்கை நோக்கி.." என்று பாடுவதற்கான காரணத்தைப் பலர் அறியமாட்டார்கள். இக்கதை இராமாயணத்தோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

வைணவக் கோவில்களிலே அருளாட்சி நிறைந்த கோவிலாகத் திருவரங்கம் விளங்குகின்றது. சைவர்களுக்குரிய சிறந்த திருத்தலமாகச் சிதம்பரம் விளங்குவதுபோல, திருவரங்கம் வைணவர்களுக்குரிய முக்கிய தலமாக விளங்குகின்றது. திருவரங்கத்தை, பெரிய கோயில், பூலோகவைகுண்டம் எனப் பலவாறாக அழைக்கும் மரபு காணப்படுகின்றது. தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கத் தொண்டில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர். ஒரு சந்தர்ப்பத்தில் அவர், "இச்சுவை தவிர யான் பொய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்.." எனத் திருவரங்கத் தொண்டைப்பற்றிப் பாடியுள்ளமை, திருவரங்கத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

திருவரங்கத்தில் திருமால் சயனக்கோலத்தில் இருப்பதைப்பாடும்போது, "தென்திசை இலங்கைநோக்கி.." என்ற வரிகள் சிந்தனையைத் தூண்டுவதாகக் காணப்படுகின்றது. புராணக் கதைகள், பக்தர்களின் நம்பிக்கைகள் என்பன இவ்வரிகளிடையே இழையோடுகின்றது. இலங்கையில் எழுந்தருளியிருக்கவேண்டிய திருமாலே, திருவரங்கத்திலே எழுந்தருளியிருக்கும் இறைவன் என்ற ஐதீகம் மக்களிடையே நிலைத்துள்ளது. அரங்கநாதன் பிரம்மதேவனால் பூசிக்கப்பட்ட மூர்த்தியென்றும், இஷ்வாகு என்பவனின் தவத்திற்கிரங்கிய பிரம்மா, அரங்கநாதரை இஷ்வாகுவிற்குக் கொடுத்தார். இஷ்வாகுமுதல் இராமபிரான்வரை இம்மூர்த்தியைப் பூசித்து வந்துள்ளனர்.

இராம இராவண யுத்தம் முடிந்து அயோத்தியிலே இராமருக்குப் பட்டாபிஷேகம் நடைபெற்றது. அந்த விழாவிலே இராவணனின் சகோதரனாகிய விபீஷணன் பங்கேற்றுள்ளான். அவ்வேளையிலே இராமர், பிரம்மதேவன் இஷ்வாகுவிற்கு அளித்த அரங்கநாதரை விபீஷணனுக்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். பட்டாபிஷேகம் நிறைவுபெற்று இலங்கை திரும்பிய விபீஷணன் தன்னுடன் அரங்கநாதர் சிலையையும் கொண்டு சென்றான். அச்சிலையைத் திருச்சிவரை கொண்டு வந்த விபீடணனால் அங்கிருந்து இலங்கைக்குக் கொண்டு செல்ல முடியவில்லை. காவிரியாற்றங்கரையிலேயே அச்சிலை நிலைகொண்டுவிட்டது. அரங்கநாதர்சிலை இலங்கைக்குக் கொண்டுசெல்லச் சந்தர்ப்பம் இல்லாமல்போன காலந்தொட்டு, இலங்கை யுத்தபூமியாகக் காணப்படுவதான ஒரு ஐதீகம் தமிழ், சிங்கள மக்களிடையே நிலவுகின்றது.

மனிதநேயத்தையும், சமாதானத்தையும் மறந்து, ஐதீகத்தில் நம்பிக்கைகொண்ட முன்னைநாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா அம்மையார் அவர்கள், சென்னையிலுள்ள பெரியவர் கணபதி ஸ்தபதியிடம், சயனநிலையிலுள்ள அரங்கநாதர் சிலையை உருவாக்கித்தருமாறு கோரியுள்ளார். அத்தோடு ஸ்ரீரங்கம் கோவிலைப்போன்று இலங்கையில் அமைக்க, 25 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டது. விபீஷணன் கொண்டுவந்ததாகக் கருதப்படும் அரங்கநாதரைவிட மூன்று அடி அதிக நீளமுள்ள 16 அடிகொண்ட சயனநிலையிலுள்ள அரங்கநாதரை கணபதி ஸ்தபதி அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். கோவில் அமைப்பதற்குரிய கோபுர சிற்பங்கள், பிரகாரசந்நிதிகள் யாவும் இவரால் பூர்த்தி செய்யப்பட்டவேளையில், இலங்கையில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டது. இக்காரணத்தினால் சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட அரங்கநாதர் கோவில் நிறுவும் முயற்சி தடைப்பட்டது. இலங்கையில் நிறுவப்படவிருந்த மூலவருக்குக் கண்திறக்க முடியாத நிலையில், அரங்கநாதர் இவரிடமே இருப்பதாக இவர் தெரிவித்துள்ளார். பிரதிஷ்டை செய்யும்பொழுதே கண்திறப்பது மரபு.

இலங்கை தொடர்ந்தும் யுத்தபூமியாகத் திகழ்வதைக் கண்ணுற்ற கணபதி ஸ்தபதி அவர்கள், அரங்கநாதர் ஆலயத்தை இலங்கையில் நிறுவுவதன்மூலம், யுத்தம் மறைந்து சமாதானபூமியாக இலங்கை விளங்கும் என்ற கருத்துடையவராகக் காணப்படுகின்றார். புத்தன்காட்டியஅன்புவழிகளை மறந்து, அனைத்து சமாதான முயற்சிகளையும் முடக்கியுள்ள அரசும், இந்துசமய அறநிலைத்துறையும் அக்கறைகொண்டால், இலங்கை சமாதானபூமியாக மலரும் என்பதில் ஆன்மீகவாதிகள் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

*வளரும்...*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# பரந்தூரில் வேளாண் நிலங்களை அழித்து புதிய விமான நிலையம் கட்டக்கூடாது: சீமான் கண்டனம்

"நீர்நிலையை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள தனியார் கட்டிடங்களை இடிப்பதற்குச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் தமிழ்நாடு அரசு, விமான நிலையம் அமைப்பதற்குத் தானே நீர்நிலைகளை அழிக்க முயல்வது எவ்வகையில் நியாயமாகும்?" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "காஞ்சிபுரம் மாவட்டம், பரந்தூரில் வேளாண் நிலங்களை அழித்து, புதிய விமான நிலையம் அமைக்க தமிழ்நாடு அரசு அளித்த பரிந்துரையை ஏற்று, இந்திய மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.அப்பகுதி மக்களின் கடும் எதிர்ப்பினையும் மீறி, 3000 ஏக்கர் விளைநிலங்களையும், 30க்கும் மேற்பட்ட நீர்நிலைகளையும், ஆயிரக்கணக்கான மக்கள் குடியிருப்புகளையும் அழித்து விமான நிலையம் அமைக்க முயல்வது வன்மையான கண்டனத்திற்குரியது.

அடுத்த 10 ஆண்டுகளுக்குப் பயன்படும் வகையில், பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தினை விரிவாக்கம் செய்யும் பணிகள் தற்போது வேகமாக நடந்து வரும் நிலையில், அவசர அவசரமாகப் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான தேவை என்ன வந்தது?




என்பதை இந்த நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் மக்களுக்கு விளக்க வேண்டும்.

உண்ண உணவு தரும் விளைநிலங்களையும், குடிப்பதற்கு நீர் தரும் நீர்நிலைகளையும், மக்கள் வாழும் வீடுகளையும் அழித்தொழித்து அதன்மீது ஓடுபாதைகளையும், தொழிற்சாலைகளையும், வணிக வளாகங்களையும் அமைப்பதை வளர்ச்சி என்று அரசே கூறுவதை எப்படி ஏற்க முடியும்?

நீர்நிலையை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள தனியார் கட்டிடங்களை இடிப்பதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் தமிழ்நாடு அரசு, விமான நிலையம் அமைப்பதற்குத் தானே நீர்நிலைகளை அழிக்க முயல்வது எவ்வகையில் நியாயமாகும்?மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ப சாலைகள், ரயில் பாதைகள், விமான நிலையங்கள் ஆகியவற்றை விரிவாக்கம் செய்வதோ, புதிதாக அமைப்பதோ அவசியம்தான் என்றாலும், அவை பயன்பாடு இல்லாத தரிசு நிலங்களில் மேற்கொள்ள வேண்டுமே தவிர விளைநிலங்களையும், வீட்டுமனைகளையும், நீர்நிலைகளையும் அழித்து உருவாக்கப்படுவதாக இருக்கக்கூடாது. கிராமப்புறங்களில் பாமர மக்களிடம் விளைநிலங்களையும், வீடுகளையும் வலிந்து அபகரிக்கும் அரசுகள், மாநகரங்களில் பெரும் செல்வந்தர்களின் வீடுகளையோ, பெருமுதலாளிகளின் சொத்துக்களையோ அழித்து, பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை எடுத்து அதன்மீது விமான நிலையங்களை அமைக்கும் துணிவிருக்கிறதா?

செயற்கையாக உருவாக்கப்பட்ட வணிக வளாகங்களை விட, உயிர்கள் வாழ உணவளிக்கும் விளைநிலங்கள் மதிப்பில் குறைந்தவை என்ற முடிவுக்கு அரசு வந்தது எப்படி? என்ற கேள்விக்கு ஆட்சியாளர்கள் என்ன பதில் கூறப்போகிறார்கள். ஆகவே, பரந்தூரில் வேளாண் நிலங்களை அழித்துப் புதிய விமான நிலையம் அமைக்கும் முடிவைக் கைவிட்டு, மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் விளைநிலங்களோ, நீர்நிலைகளோ, வீடுகளோ இல்லாத இடத்தில் அமைக்க வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# பெட்ரோல், டீசல் விலை விவகாரம் | தமிழக நிதியமைச்சரின் அறிக்கை வருத்தமளிக்கிறது : அண்ணாமலை



"மத்திய அரசு கடந்த 6 மாதத்தில், நவம்பர் 2021 முதல் மே 2022 வரையிலான இந்த 6 மாதத்தில் ரூ.14.50 பைசா பெட்ரோலுக்கு, 17 ரூபாய் டீசலுக்கு குறைத்திருக்கிறபோது, மாநில அரசு வெறும் 3 ரூபாயை குறைத்துவிட்டு, மத்திய அரசை எப்படி குறைகூறலாம் " என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை வினவியுள்ளார்.பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியது: " தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய மொத்த ஜிஎஸ்டி தொகை என்பது இன்றைய நிலவரப்படி பூஜ்யம். அனைத்து தொகையும் கொடுத்தாகிவிட்டது. மே மாதம் கடைசி வரை மொத்தமாக ஜிஎஸ்டி தொகை கொடுத்தாகிவிட்டது. .மத்திய நிதியமைச்சர் கூறியது ஒரே விசயம்தான், 5 சதவீத ஜிஎஸ்டியை ஏற்றியது நாங்கள் கிடையாது, ஜிஎஸ்டி கவுன்சில்தான், அதில் மாநிலத்தின் நிதியமைச்சரும் அங்கம் வகித்தார். மத்திய அரசு 5 சதவீதம் ஏற்றியுள்ளது, அதை காரணமாக வைத்து மாநில அரசு 20 சதவீதம் ஏற்றியுள்ளது. தயிர் 10 ரூபாயிலிருந்து 12 ரூபாய் ஏற்றியுள்ளதாக கூறி மத்திய நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் பல ஆதாரங்களைக் கூட தெரிவித்தார்.

இந்த பொய்யை மூடிமறைத்துவிட்டு தமிழக நிதியமைச்சர் இதுபோன்ற அறிக்கை வெளியிட்டிருப்பது வருத்தம் அளிக்கிறது.ஆடத் தெரியாதவனுக்கு மேடைக்கோணல் என்று கிராமங்களில் கூறுவது போல, சரியான முறையில் அரசை நிர்வாகிக்க தெரியாதவர், மேடையை கோணல் எனக்கூறுவது போல, நிதியமைச்சரின் அறிக்கை இருக்கிறது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மாநில அரசின் பொய்களை தோலுரித்துக் காட்டினார். குறிப்பாக திமுகவின் தேர்தல் அறிக்கை, திமுகவின் தேர்தல் அறிக்கை 2021ம் ஆண்டு மார்ச் மாதம் வெளியானது. அதில் பெட்ரோல்,டீசல் விலையை முறையே 5 ரூபாய், 4 ரூபாய் குறைப்போம், சிலிண்டர் விலையை 100 ரூபாய் குறைப்பதாக கூறியிருந்தனர்.

ஆனால், திமுக தேர்தல் அறிக்கை வெளியாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக 2021 பிப்ரவரியில் மத்திய அரசு பட்ஜெட் தாக்கல் செய்திருந்தது. அப்போதே தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவில் இருந்த டி.ஆர்.பாலு உள்ளிட்ட திமுகவினருக்கு தெரிந்திருக்கும். மத்திய அரசு தனது நிதிநிலை அறிக்கையில், எங்கேயுமே பெட்ரோல், டீசல் விலையை குறைப்பதாக கூறவில்லையென்று.இதன் அடிப்படையில் தான் திமுக தேர்தல் வாக்குறுதியில், பெட்ரோல், டீசல், சிலிண்டர் விலை குறைப்பதாக கூறினார்கள். இதில் மத்திய அரசின் நிர்பந்தம் எங்கேயும் கிடையாது. மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையிலும் எங்கேயுமே விலை குறைக்கப்படும் என்று கூறவில்லை. எனவே தேர்தல் வாக்குறுதிப்படி திமுகவால் விலையை குறைக்க முடியாதபோது மத்திய அரசை எப்படி குறைகூற முடியும்.

மத்திய அரசு கடந்த 6 மாதத்தில், நவம்பர் 2021 முதல் மே 2022 வரையிலான இந்த 6 மாதத்தில் ரூ.14.50 பைசா பெட்ரோலுக்கு, 17 ரூபாய் டீசலுக்கு குறைத்திருக்கிறபோது, மாநில அரசு வெறும் 3 ரூபாயை குறைத்துவிட்டு, மத்திய அரசை எப்படி குறை கூறலாம். தமிழகத்தைவிட புதுச்சேரி உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் பெட்ரோல் விலை குறைந்துள்ளது" என்று அவர் வினவினார்.

# பதஞ்சலி ஆராய்ச்சி நிறுவனத்தில் மருத்துவ மாநாடு; ஆரோக்கியம், செழிப்புடன் இருக்க இயற்கையான வாழ்வே சிறந்த வழி: பாபா ராம்தேவ் கருத்து



'பாரம்பரிய இந்திய மருத்துவத்தின் நவீனமயமாக்கல்: பொது சுகாதாரம், தொழில் துறையின் பார்வையில்' என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு ஹரித்வாரில் உள்ள பதஞ் சலி ஆராய்ச்சி நிறுவனத்தில் கடந்த 1ம் தேதி தொடங்கி நேற்று நிறைவடைந்தது.இதில், 2ம் நாள் நிகழ்ச்சியில் பதஞ்சலி ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந்தர் சுவாமி பாபா ராம்தேவ், நிறுவனத்தின் தலைவர் ஆச்சார்யா பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.விஞ்ஞானிகள், வல்லுநர்கள் மத்தியில் ராம்தேவ் பேசும்போது,

"இயற்கைதான் நமது கலாச்சாரத்தின் முகம். நாம் ஆரோக்கியத்துடனும், செழுமையுடனும் இருக்க, இயற்கையோடு இணைந்த வாழ்க்கையே சிறந்த வழி. ஆச்சார்யா பாலகிருஷ்ணன் ஏற்படுத்திய விழிப்புணர்வால், லட்சக்கணக்கான மக்கள் இன்று தங்கள் வீட்டு தோட்டத்தில் துளசி, கற்றாழை போன்ற மூலிகைகளை வளர்த்து வருகின்றனர்" என்றார்.ஆச்சார்யா பாலகிருஷ்ணன் பேசும்போது, ஆயுர்வேத துறையில் பதஞ்சலி நிறுவனத்தின் சிறந்த பங்களிப்பையும், உலகம் முழுவதிலும் ஆயுர்வேத மருத்துவத்துக்கு எந்த அளவுக்கு வரவேற்பு அதிகரித்து வருகிறது என்பதையும் விளக்கினார்.தொடர்ந்து, பல்வேறு வல்லுநர்கள் ஆயுர்வேத சிகிச்சையின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தனர்.

அமெரிக்காவை சேர்ந்த டாக்டர்யு.என். தாஸ், 2வது நாள் மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, மருந்து கண்டுபிடிப்பு மற்றும் மருந்துகளின் பரிசோதனை செயல்முறை பற்றி விரிவாக விளக்கினார். ஊட்டச்சத்து உணவும், உடற்பயிற்சியும் நமது வழக்கமான வாழ்க்கை முறையின் அங்கமாக மாற வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.இந்த நிகழ்ச்சியில், 21 நாடுகளை சேர்ந்த 50 நிறுவனங்கள் நேரடியாகவும், இணைய வழியிலும் பங்கேற்றுள்ளதாக மாநாட்டுஏற்பாட்டுக் குழு தலைவர் டாக்டர் வேதபிரிய ஆர்யா தெரிவித்தார்.

பதஞ்சலி ஆயுர்வேத கல்லூரியின் உதவி பேராசிரியர் ராஜேஷ்மிஸ்ரா, பனாரஸ் இந்து பல்கலைக்கழகப் பேராசிரியர் எச்.பி.சிங், டிஆர்டிஓ விஞ்ஞானி ரஞ்சித் சிங்,குவாஹாட்டி ஐஐடி பேராசிரியர்ராக்கி சதுர்வேதி, தமிழ்நாடுவேளாண்மை பல்கலைக்கழகத்தை சேர்ந்த டாக்டர் கே.ராஜாமணி ஆகியோர் உரையாற்றினர்.உரை நிகழ்ச்சி, போஸ்டர் வடிவமைப்பு போட்டிகளில் முதல்3 இடங்களை பிடித்த ஆராய்ச்சியாளர்கள், விஞ் ஞானிகள் கவுரவிக்கப்பட்டனர். குழு நடனம், பாடல் போன்ற கலாச்சார நிகழ்ச்சிகளும் நடந்தன.

# மகாஜனக்கல்லூரி நிறுவுனர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் – 2022





தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுனர் பாவலர் திரு. துரையப்பாபிள்ளை அவர்களின் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் சென்ற யூன் மாதம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வெள்ளிக்கிழமை சரியாக காலை ஒன்பது மணியளவில் கல்லூரி அதிபர் திரு. ம. மணிசேகரன் அவர்களுடன் பிரதம விருந்தினர் திரு. பொ. ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினர் திரு. வே. அரசகேசரி மற்றும் கௌரவ விருந்தினர் கனடாவில் இருந்து வருகை தந்திருந்த முன்னாள் உதைபந்தாட்ட வீரரும், கனடா பழைய மாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினருமான வி.ரி. மகாலிங்கம், செல்வி. வே. பத்மலோஜினி, திருமதி லோ. சுபேந்திரன், வைத்திய கலாநிதி த. பிரகாஷன் ஆகியோர் கல்லூரி வாசலில் இருந்து கல்லூரி பான்ட் குழுவினரால் சகல மரியாதைகளுடனும், கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டு அரங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து தேசியகீதம் தமிழில் பாடப்பட்டு, அதைத் தொடர்ந்து தமிழ் வாழ்த்துப் பாடல் ஆகியன இடம் பெற்றன. இதைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் பாவலர் துரையப்பாப்பிள்ளை அவர்களின் உருவப்படத்திற்கும், கனடாவில் இருந்து வருகை தந்த கௌரவ விருந்தினரான வி.ரி. மகாலிங்கம் முன்னாள் அதிபர் திரு. ஜயரத்தினம் அவர்களின் உருவப்படத்திற்கும் மலர்மாலை சூட்டி, மலர் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் அவர்களின் உரையைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. பிரதம விருந்தினர் திரு. பொ.ரவிச்சந்திரன் (வலயக் கல்விப் பணிப்பாளர்) அவர்களின் உரைையத் தொடர்ந்து சாதனை படைத்த மாணவ மாணவிகளுக்கான பரிசுகளும் விருதுகளும் விருந்தினர்களால் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி த. பிரகாஷன் நினைவுப் பேருரையாற்றினார். பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. சி. யசீதரனின் நன்றியுரையைத் தொடர்ந்து மாணவத் தலைவர்களால் கல்லூரிக்கீதம் இசைக்கப்பட்டு, விழா சிறப்பாக நிறைவுபெற்றது.

2019 ஆம் ஆண்டு கடைசியாக நடந்த பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கனடா பழைய மாணவர் சங்கத்தில் இருந்து கணக்காளரும், எழுத்தாளருமான குரு அரவிந்தன் நேரடியாகக் கலந்து கொண்டிருந்தார். அப்போது, அவர் மகாஜனக்கல்லூரி நிறுவுனர் பாவலர் திரு. துரையப்பாபிள்ளை அவர்களின் உருவப்படத்திற்கு மலர் மாலைசூடி, நினைவுதின நினைவுப்பேருரை ஆற்றி, மாணவ, மாணவிகளுக்குப் பரிசளித்ததும் குறிப்பிடத்தக்கது.

கோவிட்-19 காரணமாக பாடசாலை இயங்காததால், 2021 ஆம் ஆண்டு இணையவழியாக நினைவுப் பேருரை நடந்தது. கனடா பழைய மாணவர் சங்கத்திற்கு மதிப்பளித்து, மகாஜன அன்னையின் அரவணைப்பில் வளர்ந்து, புலம்பெயர்ந்து உலகெல்லாம் பரந்து வாழும் அதன் பழைய மாணவர்களைக் கௌரவிக்கும் மகாஜனக்கல்லூரி சமூகத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

# அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் எழுதிய "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" நூல் கனடாவைத் தொடர்ந்து பல நாடுகளிலும் வெளியிடப்பெறவுள்ளன

## கனடா உதயனுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் ஐபிசி புகழ் எஸ். கே. ராஜன் உற்சாகத்துடன் தெரிவிப்பு

**(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**

உலகெங்கும் உள்ள தமிழ் பேசும் மக்களால் அதிகளவில் விரும்பப்பெறும் அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் எழுதிய "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" எதிர்வரும் 12--8-2022 அன்று வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியிடப்பெறவுள்ளது. அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற வட அமெரிக்க தமிழர் சங்கங்களின் சம்மேளனம் நடத்திய "பெட்னா" விழாவில் முதற் தடவையாக வெளியிடப்பெற்ற இந்த நூல். கனடாவைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளிலும் வெளியிடப்பெறவுள்ளன. இந்த நூலை அனுபவித்து வாசிக்க அவரது அன்பு ரசிகர்கள் காத்திருக்கின்றார்கள் என்றே நான் நம்புகின்றேன்.



இவ்வாறு நேற்று வியாழக்கிழமையன்று கனடா உதயனுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் ஐபிசி புகழ் எஸ். கே. ராஜன் உற்சாகத்துடன் தெரிவித்தார். அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் அவர்கள் எழுதிய இந்த "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" என்னும் நூல் வெளியிடப்பெறும் நிகழ்வில் பிரதான தொகுப்பாளராக விளங்கவுள்ள எஸ். கே. ராஜன் அவர்கள் தற்போது லண்டனை தலைமையகமாகக் கொண்ட ஐபிசி தமிழ் தொலைக்காட்சியில் பணியாற்றி வருகின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நேர்காணலின் போது, அவரது கனடா வருகை தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் தொடர்ந்து கூறியதாவது-

தனது இலங்கை வானொலியின் ஆரம்பம் எப்படி அமைந்தது என்பது முதல் வானொலியின் ஆளுமையாளர்கள், அவர்களின் ஒலிபரப்புத் துறைக்கான அர்ப்பணிப்புகள் இந்த நூலில் பதிவாகி இருக்கின்றன. இலங்கை ஒலிபரப்புத்துறை சார்ந்து நாம் அறிந்திராத பல தகவல்கள் இந்த நூலில் உள்ளடங்கியிருக்கின்றன. மேலும்.
ஒலிபரப்புத்துறையில் ஈடுபட்டுள்ள இன்றைய இளைய தலைமுறையினருக்கு மாத்திரமல்ல நாளைய புதிய தலைமுறைக்கும் உகந்த ஒரு நூல். "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" என்றே நான் கூறுவேன் என்றார் எஸ். கே. ராஜன்

சரி! எதிர்வரும் 12-08-2022 அன்று வெள்ளிக்கிழமையன்று அந்த நூல் வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொள்வோம் என்ற வார்த்தைகளைப் அவருடன் பகிர்ந்து கொண்டு. "யாழ்ப்பாணத்தில் ஒரு விளம்பர ஒலிபரப்பாளராக தங்கள் பயணத்தை ஆரம்பித்து தொடர்ந்து இலங்கைத் தீவை மாத்திரமல்ல தமிழ்நாட்டு தமிழர்களையும் வானலைகள் ஊடாக இணைத்துக் கொள்ளும் "இலங்கை வானொலியோடு தங்களை இணைத்துக் கொண்டீர்கள். இந்த ஒலிபரப்புத் துறை பயணம் பற்றி சொல்லுங்களே" என்றோம்

"பாடசாலையில் மாணவனாக இருக்கும் பொழுதே ஒலிவாங்கியுடனான உறவாடல் ஏற்பட்டது. கலை விழாக்கள் ஆலயத்திரு விழாக்கள் என்பனவற்றில் ஒலி வாங்கியில் அறிவிப்புக்களை மேற்கொண்டு ஆரம்பித்த பயணம் இன்று வானொலிக்கலைஞனாக வலம் வரவைத்துள்ளது.
வட இலங்கையில் வாகன விளம்பர ஒலிபரப்பின் முன்னோடியான சி.சு.புனிதலிங்கன் அவர்களின் 'மக்கள் குரல்' விளம்பர சேவையில் விளம்பர அறிவிப்புப் பணி தொடங்கியது. யாழ்.நவீன சந்தையில் ஆரம்பத்தில் 'மணிக்குரல்' விளம்பரசேவை ஒலிபரப்பாகியதை அடுத்து 'மக்கள் குரல்' விளம்பரசேவை இயங்கியது. அதனை அடுத்து 'விக்ரர் அன்ட் சன்' விளம்பரசேவை ஒலிபரப்பானது.
'விக்ரர் அன்ட் சன்' விளம்பரசேவையில் நானும், மணிக்குரல் மேஜர் சண்ணும் பணியாற்றினோம். அதிலிருந்து யாழ் பேரூந்து நிலையத்தில் பெஸ்ரோன் ஒலிபரப்பு சேவையை (1978)ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் நானும், மணிக்குரல் மேஜர் சண்ணும் பணியாற்றினோம்.
பின்னர் பெஸ்ரோன் ஒலிபரப்பு சேவையில் பல அறிவிப்பாளர்களுக்குக் களமமைத்துக் கொடுத்தேன். 1982 வரை பெஸ்ரோன் ஒலிபரப்பில் பணியாற்றிய பின்னர், இலங்கை வானொலியை நோக்கிய பயணம்.
இதனால் 1982 தொடக்கம் , கொழும்பில் வாழ்க்கை தொடர்ந்தது.
1983 டிசம்பரில் இலங்கை வானொலியில் பணியாற்ற. வாய்ப்புகள் கிடைத்தன.
1983 ஜூலை கலவரம், கொழும்பு வாழ்க்கையில் வெறுப்பை ஏற்படுத்திய நிலையில் 1984ம் ஆண்டில் புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் புகலிடம் பெற்றேன்.
பிரான்ஸில் 1988ஆம் ஆண்டு 'தமிழமுதம்' என வாரத்தில் ஒரு மணி நேரம் வானொலி ஒலிபரப்பை நடத்தி வந்தேன்.
1997ஆம் ஆண்டு லண்டனில் நாடகப் பேராசான் ஏ.சி.தாசீசியஸ் அவர்கள் ஐபிசி தமிழ் வானொலியை ஆரம்பிக்கும் பொழுது அடியேனுக்கும் அழைப்பு விடுத்து ஐபிசி தமிழ் வானொலியில் இணைத்துக்கொண்டார்.
இப்பொழுது ஐரோப்பாவில் வானொலிக்கலைப்பயணம் எனது வெள்ளி விழாவையும் தாண்டிச்செல்கிறது" என்று மிகுந்த தெளிவுடன் எம்மிடம் தெரிவித்தார் எஸ். கே. ராஜன்.

"வானொலிக்கலை தங்களை ஈர்த்ததற்கு என்னென்ன விடயங்கள் அல்லது எந்த தனி நபர்கள் காரணமாக இருந்தார்கள்" என்று அவரிடம் அடுத்த கேள்வியாகக் கேட்டோம்

---

நான் இலங்கை வானொலியில் பணியாற்றத் தொடங்கிய நாட்களிலும் அதற்கு முன்னரும் வானொலி அறிவிப்பாளர்களின் குரல்கள் தான் என்னை வானொலியின் பக்கம் ஈர்த்ததன.
எஸ்.பி.மயில்வாகனன், எஸ்.கே.பரராஜசிங்கம்,
ராஜகுரு சேனாதிபதி கனகரட்ணம், பி.எச். அப்துல் ஹமீத், ராஜேஸ்வரி சண்முகம், நடராஜசிவம், ஜோக்கிம் பெர்னாண்டோ, விமல் சொக்கநாதன், சரா இம்மானுவேல், கே.எஸ்.ராஜா,கோகிலா சிவராஜா, புவனலோஜனி போன்ற பல அறிவிப்பாளர்களின் குரல்களும்,
வி.ஏ. கபூர், எஸ்.புண்ணியமூர்த்தி, சுந்தரலிங்கம், சற்சொரூபவதிநாதன், வி.பி.தியாகராஜா, என்.சிவராஜா, நடேச சர்மா, சில்வஸ்ரர் பாலசுப்ரமணியம், வி.என்.மதி அழகன்
போன்ற செய்தி வாசிப்பாளர்களின் குரல்களும் வானொலிக்கலை ஈடுபாட்டுக்குத் தூண்டுதலாக அமைந்தன. என்று கூறுவதில் நான் எப்பொழுதும் மகிழ்ச்சியடைவேன்"" என்றார்

வானொலி துறையில் வெறுமனே செய்திகள் மாத்திரம் அடங்குவதில்லை தானே? பொதுவாக தமிழ் வானொலிகளில் கலை-இலக்கியத் தொடர்பான விடயங்களும் இடம்பெறுகின்றன தானே? அவ்வாறு தாங்கள் பணியாற்றிய காலத்தில் தமிழ்ப் படைப்பாளிகள் மற்றும் கவிஞர்கள் ஆகியோரோடு எவ்வாறான தொடர்பைப் பேணி வந்தீர்கள்" என்ற அடுத்த கேள்வியை நாம் முன்வைத்தோம்.

ஈழத்துக் எழுத்தாளர்கள் கவிஞர்கள் மற்றும் கலைஞர்களுடன் எனது தொடர்பாடல் மிக நீண்டது. வானொலி, மேடை, திரைப்படம், தொலைக்காட்சிக் கலைஞர்கள் என வலம் வருவோருடன் தொடர்பு பட்டிருக்கிறேன்.
நான் சார்ந்துள்ள துறை கலைஞர்களைக் கொண்டது என்பதால் கலைப்பெருமகன் ஏ.ரகுநாதன் போன்ற மூத்தவர்கள் முதல் இன்றைய இளைய தலைமுறையினர் வரை கலைஞர்கள் தொடர்பு நிறைவாகவே உள்ளது. இலக்கியத்துறை சார்ந்தவர்களும் அவ்வாறே. முதுபெரும் எழுத்தாளர் எஸ்.அகஸ்தியர் முதல் இன்றைய இளைய தலைமுறையினர் வரை தொடர்புகள் நீண்டு செல்கின்றன" என முகத்தில் புன்னதை தவழ பதிலைப் பகிர்ந்து கொண்டார் எஸ். கே. ராஜன்.

"தற்பொழுது தாங்கள் மேற்கொண்டுள்ள கனடாவிற்கான விஜயத்தில் எவ்வாறான நிகழ்ச்சிகளில் தாங்கள் பங்கெடுக்க உள்ளீர்கள்" என அவரிடம் வினாவினோம்
"அதற்கு பதிலளிக்கையில் எஸ. கே ராஜன் அவர்கள் பின்வருமாறு தனது பதிலைப் பகிர்ந்து கொண்டார்.
"தமிழோசை-சினி மீடியா சிறிகாந்தா அவர்களின் அழைப்பு. அவர் நடத்தும் கோடைக்கொண்டாட்டம் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்திருக்கிறேன்.
உங்களுக்கு- உதயன் பத்திரிகைக்கு ஒரு விசேடமான தகவலைக் கூறுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். .
என்னை முதன் முதலில் கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்து முயற்சித்தவர் நண்பர் சிறிகாந்தா.தான்.
2020ல் கனடாவுக்கு வருகைதந்த பொழுதிலும், கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்வது சிறிகாந்தா அவர்களின் இந்த நிகழ்ச்சியிலே தான் என்பது குறிப்பிடத்தக்கது. அதை நாம் பெருமையுடன் பகிர்ந்து கொள்கின்றேன்"

நன்றி எஸ். கே. ராஜன் அவர்களே இறுதியாக தங்களிடம் ஒரு கேள்வியை முன்வைக்கின்றோம். அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அவர்களுடனான தொடர்பு தங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது? என்று கேள்வியோடு அவரைப் பார்க்கின்றோம்.

"எனது முதல் மரியாதைக்குரிய மூத்த ஒலிபரப்பாளர், அன்புச் சகோதரர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்களுடனான தொடர்பு அல்ல உறவு நான்கு தசாப்தங்களுக்கு மேலானது. ஒலிபரப்புக்கலையின் பல்கலைக் கழகம். அங்கே நான் ஒரு மாணவனாக ஒலிபரப்புக் கலை நுணுக்கங்களை தொடர்ந்து கற்று வருகிறேன்.
அவரை முதன் முதலில் கலை நிகழ்ச்சி நடத்த பரிஸ் நகருக்கு 1988ஆம் ஆண்டு அழைத்தேன். அடுத்தடுத்த ஆண்டுகளில் கலைக்குழுவாகவே ஐரோப்பிய நாடுகளுக்கான பயணங்கள் அமைந்தன.
31.07.2004ல் லண்டன் மாநகரில் அவருக்கு ஒரு பாராட்டு விழாவை மிகப் பிரமாண்டமாக நடத்துவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.
நாடகர் ஏடகர் ஊடகர் ஏ.சி.தாசீசியஸ் அவர்கள் தலைமையில் பாராட்டுவிழா நடைபெற்றது.
இவ்வாறு எமது கலைப்பயணம் தொடர்கிறது"
இறுதியாக எஸ். கே. ராஜன் அவர்களுக்கு வாழ்த்துக்களைக் கூறி அவரை வழியனுப்பி வைத்தோம்.

# பொதுநலவாய விளையாட்டுக்கள் (Commonwealth Games)

**பொ**துநலவாய நாடுகள் என்பது, இருபதாம் நூற்றாண்டின் நடுவில், இரண்டாம் உலகப்போரின் பின்னர் பிரித்தானியாவின் பல குடியேற்ற நாடுகளுக்கு தன்னாட்சி வழங்கப்பட்டது. இந்நாடுகள் அனைவற்றையும் தன் பிணைப்பில் வைத்திருக்க பிரித்தானியா விரும்பியது. இத்தேவையை நிறைவு செய்ய பொதுநலவாயம் எனும் அமைப்பை உருவாக்கியது. 56 உறுப்பினர் நாடுகளைக் கொண்ட பன்னாட்டிடை அமைப்பே பொதுநலவாய நாடுகளாகும்.

பொதுநலவாய விளையாட்டுக்கள் (Commonwealth Games) என்பவை ஒரு பன்னாட்டு, பல-விளையாட்டுப் போட்டிகள் கொண்ட நிகழ்வாகும். ஒவ்வொரு நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் அவை பொதுநலவாய நாடுகளின் உயர் மட்ட விளையாட்டு வீரர்களுக்கான போட்டிகளாகும்.

பொதுநலவாய விளையாட்டுக்களில் பங்கேற்கும் வீரர்களின் எண்ணிக்கை வழக்கமாக ஏறத்தாழ 5,000 மாக இருக்கும். பொதுநலவாய விளையாட்டுக்களின் கூட்டமைப்பு (CGF) இந்த விளையாட்டுக்களை இயக்கவும் கட்டுப்படுத்தவும் பொறுப்பான நிறுவனமாகும்.

அத்தகைய முதல் போட்டி நிகழ்வாக, பிரித்தானியப் பேரரசு விளையாட்டுக்கள் என அறியப்பட்டு, கனடாவின் ஒண்டாரியோ மாகாணத்தின், ஹாமில்டனில் 1930 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. 1954 ஆம் ஆண்டில் இப்பெயரானது பிரித்தானியப் பேரரசு மற்றும் பொதுநலவாய விளையாட்டுக்கள் என்றிருந்து. பின்னர் 1970 ஆம் ஆண்டு பிரித்தானிய பொதுநலவாய விளையாட்டுக்கள் என மாற்றப்பட்டது. தற்போதைய பெயரான பொதுநலவாய விளையாட்டுக்கள் என்பது 1978 ஆம் ஆண்டு முதல் அதிகாரபூர்வமாக்கப்பட்டது.



பல ஒலிம்பிக் விளையாட்டுக்களைப் போல, இந்த விளையாட்டுப் போட்டிகள் பொதுநலவாய நாடுகளின் சில முக்கிய விளையாட்டுக்களை உள்ளடக்கியுள்ளது: அவை லான் பவல்ஸ், ரக்பி செவன்ஸ் மற்றும் நெட்பால் போன்றவையாகும்.

தற்போது பொதுநலவாய நாடுகள் அமைப்பில் 56 உறுப்பினர்கள் உள்ளனர் மற்றும் 71 அணிகள் விளையாட்டுகளில் பங்கேற்கின்றனர். ஐக்கிய ராச்சியத்தின் நான்கு அங்கங்களான - இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்து ஆகியவை (ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஐக்கிய இராச்சியம் ஒரே அணியை அனுப்புவது போலல்லாமல்) பொதுநலவாய விளையாட்டுக்களுக்கு தனித்தனியான அணிகளை அனுப்புகின்றன.



மேலும் பிரிட்டன் சார்நிலைப்பகுதிகள் - குயெர்ன்சி, யேர்சி, மற்றும் மாண் தீவு - மற்றும் பல பிரித்தானிய கடல்கடந்த மண்டலங்கள் தனித்தனியான அணிகளை அனுப்புகின்றன. ஆஸ்திரேலியாவின் கடல்கடந்த பிரதேசமான நார்.'. போக் தீவு அதன் தனி அணியை அனுப்புகிறது. நியூசிலாந்தின் இரு சுதந்திர கூட்டமைப்புக்களான குக் தீவுகள் மற்றும் நியுவே ஆகியவையும் அவ்வாறே செய்கின்றன.

## திறப்பு விழா மரபுகள்

1930 முதல் 1950 ஆம் ஆண்டு வரை நாடுகளின் அணி வகுப்பில் பிரித்தானிய ஒன்றியக் கொடியை ஏந்திச் செல்லும் ஒருவர் மட்டுமே முன் செல்வார். அது பிரித்தானியப் பேரரசில் பிரிட்டனின் முதன்மையான இடத்தை அடையாளப்படுத்தியது.

1958 ஆம் ஆண்டிலிருந்து பக்கிங்காம் அரண்மனையிலிருந்து துவக்க விழா நடைபெறும் இடம் வரை தடகள வீரர்கள் கோல் ஒன்றினை ஏந்திச் செல்லும் தொடர் ஓட்டம் ஒன்று இருந்துள்ளது. இந்தக் கோலினுள்ளே தடகள வீரர்களுக்கான ராணியின் வாழ்த்துச் செய்தி இருந்தது. கோலினை கடைசியாக ஏந்திச் செல்பவர் வழக்கமாக போட்டியினை நடத்தும் நாட்டின் பிரபல விளையாட்டு நபராக இருப்பார்.

அனைத்து இதர நாடுகளும் ஆங்கில எழுத்துமுறை வரிசைப்படி அணி வகுக்கும். முந்தைய விளையாட்டுக்களை நடத்திய நாட்டின் தடகளவீரர்கள் அணி வகுப்பில் முதலாவதாக நடந்து செல்வர். தற்போதைய விளையாட்டினை நடத்தும் நாடு கடைசியாக நடந்து செல்லும். 2006 ஆம் ஆண்டில் புவியியல் பகுதிப்படி ஆங்கில எழுத்துமுறை வரிசையில் நாடுகள் அணி வகுத்தன.

பதக்கம் அணிவிக்கும் நிகழ்ச்சிக்கான மேடையில் இருக்கும் கம்பங்களில் மூன்று நாடுகளின் கொடிகள் பறக்கும்: முந்தைய போட்டியினை நடத்திய நாடு தற்போதைய போட்டியினை நடத்தும் நாடு மற்றும் அடுத்தப் போட்டியினை நடத்தும் நாடு ஆகியவை இதிலடங்கும்.

ஒலிம்பிக் போட்டிகளை விடத் துவக்க விழாவில் படைத்துறை மிக அதிகமாக செயலாற்றும். இது பழையப் பேரரசின் பிரித்தானிய இராணுவ மரபுகளைக் கௌரவப்படுத்தும் விதமானதாகும்.

## பொதுநலவாய விளையாட்டுக்கள் 2022
(2022 Commonwhealth Games)

2022 பொதுநலவாய விளையாட்டுக்கள் (2022 Common-whealth Games) அல்லது பொதுவாக பர்மிங்காம் 2022 (Birmingham 2022) என்பது 2022 துரடல 28 முதல் 2022 யுரபரளவ 8 வரை இங்கிலாந்து பர்மிங்காம் நகரில் பொதுநலவாய நாடுகளுக்கிடையே திட்டமிட்டவாறே தற்போது சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனை நடத்துவதற்கான ஏல முடிவு 2017 December 21 இல் பர்மிங்காம் நகரில் அறிவிக்கப்பட்டது.

**- இரா சஹானா**

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்.எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்.எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS C R PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# தமிழினத்திற்கு இரண்டகம் செய்யும் பிபிசி
# இந்துத்துவ பிரச்சார களமாக உருவாகும் இலண்டன் தமிழோசை



நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஆக.02:

ஆங்கிலேயர் வருகைக்கு முன் இந்தியா முழுவதும் மொகலாய சாம்ராஜியம் பரவி இருந்தது. அதற்கு முந்தைய பண்டைய காலத்து வேத இந்தியாவில் இந்து ராஜியம் இருந்தது என்பதைப் போன்ற ஒரு பொய்யான கட்டமைப்பைக் கொண்ட ஒரு செய்திக் கட்டுரையை, ஆகஸ்ட் முதல் நாளான நேற்று லண்டன் பிபிசி உலக செய்தி ஒலிபரப்புக் கழகத்தின் தமிழ்ப் பிரிவான தமிழோசை வெளியிட்டுள்ளது.

அண்மைக் காலமாக, லண்டன் தமிழோசை இந்து தீவிரவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ். என்னும் ராஷ்டிரிய சுயசேவை சங்கத்தின் பிரச்சார களமாக விளங்குகிறது.

1925 செப்டம்பர் 25-இல் தோற்றுவிக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். இயக்கம், இன்னும் மூன்று ஆண்டுகளில் தன்னுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறது. அதற்கு ஏதுவாக, 2024-இல் நடைபெற உள்ள இந்திய பொதுத் தேர்தலில் மோடி தலைமையிலான ஆட்சியை எப்பாடு பட்டாவது தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்று அதீத முயற்சியில் ஆர்.எஸ்.எஸ். ஈடுபட்டு வருகிறது.

ஆர்.எஸ்.எஸ்.-இந்து மகா சபை என்னும் தீவிரவாத அமைப்புகளின் பெயரக் குழந்தையான பாஜக, இப்பொழுது இந்தியாவில் வாழும் பிற இனங்களின் மொழி, பண்பாட்டு, வரலாற்றுக் கூறுகளை அழிக்கவும் அல்லது திரிக்கவும் முற்படுவதன் வெளிப்பாடுதான் "ஒரே இந்தியா-ஒரே மொழி-ஒரேக் கலாச்சாரம்" என்னும் கொள்கை.

இந்திய துணைக் கண்டத்தில் மூன்று இனங்கள் வீர மரபுக்கு உரியவை. சீக்கியர்கள், வங்காளியர், தமிழர்கள் ஆகிய இனங்கள்தான் அவை.

இந்த மூன்று இனங்களிலும் தமிழர்கள் மட்டுமே பாரம்பரிய மரபுக் கூற்றையும் தொன்மையான இன அடையாளத்தையும் கொண்டுள்ளனர். இவற்றைவிட, தொல்மொழியான தமிழை பாதுகாப்புக் கவசமாக தமிழர்கள் கொண்டிருப்பது-தான், ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கு பெரும் மருட்டலாக உள்ளது.

இருந்தாலும், தமிழர்களின் பொருளாதார கட்டமைப்பு, தொழில்-வர்த்தக மேம்பாடு, கல்வி வளர்ச்சி நிலை, பாரம்பரிய சித்த மருத்துவம் உள்ளிட்ட மருத்துவ மேன்மை, தொன்மைமிகு வரலாற்றுப் பெருமை என ஒன்றுவிடாமல் அனைத்தையும் சிதைக்கவும் மறைக்கவும் திரிக்கவும் முற்பட்டு வருகின்றனர்.

இந்த அடிப்படையில்தான், தமிழர்களின் தொல்வரலாற்றுக்கு கட்டியம் கூறும் குமரிக் கண்ட வரலாற்றை மறைக்கும் வகையில் அது வெறும் நம்பிக்கை மட்டுமே என்ற அடிப்படையில் அ.விக்னேஷ் என்பவர் எழுதிய ஒரு நீண்ட கட்டுரையை 2021 பிப்ரவரி 11-இல் தமிழோசை வெளியிட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து பற்பல செய்திகள் தமிழியத்திற்கு மாறுபட்டு வெளிவந்தவண்ணமாக இருந்தாலும், இப்பொழுது இந்தியாவின் தொன்மையே வேத காலம்தான் என்றும் அப்பொழுது இந்து சாம்ராஜியம் என்ற ஒன்று இருந்ததாகவும் ஒரு பொய்யான கருத்தை அப்பட்டமான வெளியிட்டிருக்கிறது தமிழோசை.

இந்தச் செய்தியை எழுதியவர் பிபிசி செய்தியாளர், ஜுபைர் அஹ்மத் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த, ஜுபைர் அஹ்மத் என்ற பெயரே ஐயத்திற்கு இடமாக இருக்கிறது.

உண்மையில் இந்தியா என்று கட்டமைக்கப்பட்ட நிலப்பகுதி, ஓர் ஆழமான ஆன்மிக பூமிதான். அதில் ஐயமில்லை.

உலக மதங்களில் கிறித்துவம், இஸ்லாம் ஆகிய இரண்டைத் தவிர பிற அனைத்து சமயங்களும் இந்திய மண்ணில்தான் தோன்றின. ஆனால், அப்பொழுது இந்தியா என்ற ஒரு நாடே இல்லை என்பதுதான் உண்மையிலும் உண்மை.

பல்வேறு இனங்கள், பல்வேறு மொழிகளைப் பேசி, பல்வித பண்பாட்டு-சமயக் கூறுகளுடன் வட்டார அளவிலும் குறுநில மன்னராட்சி, பெருநில மாமன்னராட்சி என்ற வகையிலும் தனித்தனித்த வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தனர்.

தமிழர்களைப் பொறுத்தவரை, சக்தி வடிவத்தை வழிபடும் கொற்றவை வணக்க முறைதான் முதன்மையானது. அதுதான் மாரியம்மன் தெய்வம், பத்ரகாளி அன்னை என்றெல்லாம் பலவாறாக பின்னாளில் உருவெடுத்தது. இப்பொழுது, இந்து சமயத்தில் இடம்பெற்றுள்ள ஆறு சமயக் கொள்கைகளில் ஒன்றான சாக்தம் எனப்படும் சக்தி வழிபாட்டிற்கு இதுதான் அடிப்படை.

ஆதித் தமிழர்களின் கொற்றவை வழிபாடுதான், முதல் முதலாக கட்டமைக்கப்பட்ட முறையான இறைவணக்க முறை என்றாலும் அதற்கு முன்னம், அவரவரும் மனம்போன போக்கில் இயற்கையின் பல்வேறு வெளிப்பாடான பொழுது புலரும்-மறையும் வேளைகளில் தோன்றும் செஞ்சூரியன், முழுநிலவு நாளில் தோன்றும் பெருநிலவு, கடுங்காற்று, பெருமழை, இடி-மின்னல், மலர் மணம், வானத்தேத் திரளும் கருமேகக் கூட்டம், கொடிய விலங்குகள், சலசலக்கும் அருவி உள்ளிட்ட அனைத்து வடிவங்களுடன் பகல்பொழுதில் தன்னுடன் இணைந்துவரும் சொந்த நிழலையும்கூட ஒருவித பயம்-மிரட்சியுடன் வணங்கி வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவை யாவும் இமய மலை அடிவாரப் பகுதியில் இருக்கும் கைபர் கணவாய் வழியாக பார்ப்பனர் என்னும் பிராமணர்கள் நுழைந்தபின் மெல்லமெல்ல மாறத் தொடங்கின.

இந்த மண்ணின் பாரம்பரிய பழஞ்சமயங்களான பௌத்தத்தையும் சமணத்தையும் அழித்தவர்கள் அவர்கள்தான். இப்பொழுது, இந்து சமயம் என்ற பெயரில் சைவ நெறிக்கும் பெருந்திரை போட்டிருப்பதும் இதேப் பார்ப்பனர்கள்தான். பரிகாரமும் வேள்வியும் இல்லாவிடில் அவர்களின் சோற்றுத் தட்டு, வெற்றுத் தட்டாகிவிடும்.

நாடோடிக் கூட்டமாக அலைந்து திரிந்த பிராமணர்களுக்கு உருவ வழிபாட்டு முறை தெரியாது ஆலயக் கட்டமைப்பிலும் நம்பிக்கை இல்லை; அவர்களுக்கு ஆலயமும் கட்டத் தெரியாது அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் வேள்வி என்னும் யாகம்தான். அந்த யாகத்தில் தாங்கள் வளர்க்கும் மாடு, குதிரை உள்ளிட்ட விலங்குகளை வாட்டி உண்பது அவர்களின் பண்பு.

வறண்ட நிலங்களில் சுற்றித் திரிந்த இவர்கள் இந்தியாவில் நுழைந்தபின் செழுமையான நிலம், ஓரிடத்தில் மக்கள் கூடிவாழும் போக்கு, உயர்ந்த மாளிகை, உயர்கோபுரங்களைக் கொண்ட ஆலயம் போன்றவற்றைக் கண்டு வியந்து, இந்த மண்ணிலேயே நிலைகொள்ளத் தலைப்பட்டனர்.

அதற்காக அவர்கள் கையில் ஏந்திய அயுதம் தர்ப்பப் புல் சிவப்புத் தோலும் அவர்களுக்கு கைகொடுத்தது. ஒன்றாக வாழ்ந்த மக்களிடத்தில் சாதிய ஏற்றத் தாழ்வை உருவாக்கி, ஒருவன் தாழ்ந்தவனாகவும் ஏழையாகவும் இருப்பதற்கு பிறவிப் பயன் என்னும் கரும வினைதான் காரணம் என்று கற்பித்து, அத்துடன் சொர்க்கம், நகரத்தைக் கட்டமைத்து, அதிக பரிகாரம் செய்தால் அடுத்தப் பிறவியில் நன்மை விளையும் சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என்றெல்லம் நம்பவைத்து மெல்ல மெல்ல தங்களை மேநிலைப்பட்டவர்-களாகவும் உயர்சாதிக்காரர்களாகவும் பூசனை செய்வதற்கென்றே இறைவனால் படைக்கப்பட்டதாகவும் கற்பிதம் செய்தனர்.

மன்னர்கள்கூட, இவர்களை குறிசொல்லும் ராஜகுருவாக ஏற்றுக் கொண்டு அரண்மனையில் உயரிடம் வழங்கிவிட்ட நிலையில், பொதுமக்களின் நிலையைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

பிராமணர்களின் நான்மறைகளில் ஒன்றான ரிக் வேதத்தின் 153-ஆவது பாடலில் பிரம்மனின் முகத்தில் பிறந்தவர்கள் பார்ப்பனர்கள், தோளில் பிறந்தவர்கள் சத்திரியர்கள் (மன்னர் பரம்பரையினர்), தொடையில் பிறந்தவர்கள் வைசியர்கள் (வணிகத் தொழிலினர்), பாதத்தில் பிறந்தவர்கள் சூத்திரர்கள் (விவசாயி, வண்ணார், நாவிதர், துப்புறவு தொழிலாளி உள்ளிட்டவர்கள்) என்றும் மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளிட்ட பஞ்சமர் என்னும் தீண்டத்தாகாதவர்களுக்கு பிரம்மாவின் உடலில் இடமே இல்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் காலத்திலேயே நிலைத்துவிட்டது இந்த பிராமண மேலாண்மை. மற்ற இனத்தில் சிந்தனையாளர்கள் தோன்றினால், அவர்களுக்கு பித்துபிடித்துவிட்டது என்று கதைகட்டி அவர்களைக் கொளுத்தச் சொல்லி இருக்கின்றனர்.

பாண்டிய மண்ணில் திருக்குறள் நூலுக்கு அரங்கேற்றம் செய்யவிடாமல் தடுத்த இவர்கள், கம்பர் இயற்றிய இராமாயணத்தையும் அரங்கேற்றம் காணாமல் தடுத்ததால், கம்பர் ஊர் ஊராக அலைந்தார். சிவனெறிப் பாடல்கள் பதிக்கப்பட்ட திருமுறை ஓலைச் சுவடிகளையே அதுவும் பரம்பொருளர் சிவபெருமான் அம்பலத்தாடும் சிதம்பர சன்னிதானத்திலேயே தமிழையும் சைவத்தையும் ஒருசேர அழிக்க முற்பட்ட தமிழ் விரோதியர் இந்த பார்ப்பனர்கள்.

இவ்வாறாக பார்ப்பனிய மேலாதிக்கம் நிலைப்பட்டுவிட்ட நிலையில், 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டம் பேரள-வில் வெடித்தது. அனைவரும் தம் உடல்-பொருள்-ஆவி என அனைத்தையும் ஈகம் செய்து விடுதலைப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்த வேளையில், பார்ப்பனர்கள் மட்டும் விடுதலை பெறும் இந்தியாவை தங்களின் ஆதிக்கம் மிக்க இந்து-இந்தியாவாக உருவாக்குவது என்பதைப் பற்றி திட்டமிட்டனர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் இந்துத்துவத்தை கலந்துவிட்டவர்கள் பாலகங்காதர திலகர் உள்ளிட்ட மராட்டிய சித்பவன பார்ப்பனர்கள்தான். மராட்டிய சாம்ராஜியத்தில் சிப்பாய்களாக இருந்ததால் இவர்களுக்கு கொஞ்சம் வீர மரபும் உண்டு.

ஆங்கிலேயர் ஆட்சியில் பெண் தொழிலாளர்கள் மற்றும் இயந்திரங்களை இயக்குபவர்களுக்கான பாதுகாப்பில் முன்னுரிமை கொடுக்கவும் எட்டு மணி நேர வேலை என்பதை வரையறுக்கவும் சிறார் தொழிலாளர்களை மட்டுப் படுத்தவும் சட்டம் இயற்ற முன்வந்தபோது, "ஆங்கிலேய ஆட்சியினர் இந்தியாவில் உருவாகும் சுதேசி முதலாளிகளை ஒடுக்கப்பார்க்கின்றனர்" என்று அறிவித்து அதற்கு எதிர்ப்பும் தெரிவித்தவர் இந்தத் திலகர்.

விடுதலைக்கு முன், ஆங்கிலேயர் உருவாக்கிய மாநில சட்டமன்றங்களில், தங்களுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று பிற சாதியினரும் கோரிக்கை வைத்தபொழுது, விவசாயி என்ன சட்டமன்றத்தை உழப் போகிறாரா? வணிகன் என்ன தராசு-படிக்கல்லுடன் சட்டமன்றத்திற்கு வரப் போகிறானா? என்றெல்லாம் கொக்கரித்துவிட்டு, அரசியலை எங்களிடம் விட்டுவிடுங்கள்; நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று பேசியவர் திலகர்.

பிளேக் என்னும் நோய் பேரளவில் பரவி, பல்லாயிரக் கணக்கான மக்கள் வாந்தி-பேதியால் கொத்துக் கொத்தாக மடிந்தபோது, அதை பெருநோய்க் காலமாக அறிவித்து, பிளேக் நோய்க்கான கிருமி எலிகள் மூலமாகத்தான் பரவுகின்றன என்பதைக் கண்டறிந்து எலிகளை அழிக்க முற்பட்ட பொழுது, எலிகள் பிள்ளையாரின் வாகனம் என்பதால் அவற்றைக் கொல்லக் கூடாதென்று போராட்டமே நடத்தியவர் திலகர்.

இப்படிப்பட்ட திலகர்தான் விநாயகர் சதுர்த்தி விழாவை முதல் முதலில் பேரளவில் அறிமுகப்படுத்தினார்.

மலேசியாவில், ஹரி ராயா என்ற பெயரில் கொண்டாடப்படும் நோன்புத் திருநாள், தமிழகம்-இந்தியா-இலங்கையில் எல்லாம் ரம்ஜான் பண்டிகை என்ற பெயரில் கொண்டாடப்படும்.

அது இஸ்லாமியத் திருநாளாக இருந்தாலும் சமய நல்லிணக்க விழா என்று சொல்லும் அளவிற்கு சைவ, வைணவ சமயங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட அனைத்து சமயத்தினரும் ஒருங்கிணைந்து கொண்டாடிய சமய விழாவாக ரம்ஜான் விளங்கியது.

அதைக் கெடுத்தவர் திலகர். இந்துக்கள் யாவரும் ரம்ஜான் பண்டிகையில் பங்கேற்கக் கூடாதென்று தடைவிதித்தவர் இவர்தான்.

அந்த நேரத்தில் ஏறக்குறைய இந்து சமயம் கட்டமைக்கப்பட்டுவிட்டது.

(தொடர்ச்சி 31 பக்கம்)

# ஜீவன் முக்தி 589

## உங்கள் வாழ்க்கையே மரப்பாச்சி பொம்மை விளையாட்டுதான்

உகங்களுடைய உறவுகள் எல்லாமே ஒவ்வொரு பாத்திரங்கள்தான். ஒரு நடிப்புதான். நன்கு புரிந்துகொள்ளுங்கள் மொத்தமுமே Psycho drama அதில்தான் பிறப்பெடுக்கிறீர்கள்.

யாரோ ஒருவர் அப்பா யாரோ ஒருவர் அம்மா யாரோ ஒருவர் அக்கா யாரோ ஒருவர் தம்பி யாரோ ஒருவர் தங்கச்சி என்று வைத்து விளையாடுகி-றோம்.

சின்ன வயதில் குழந்தைகள் மரப்பாச்சி பொம்மை வைத்து விளையாடுவதைப் பார்த்திருக்கிறீர்களா?

ஒரு நான்கு மரப்பாச்சி பொம்மை வைத்து விளையாடுவார்கள். அந்த விளையாட்டு இந்தக் காலத்திலெல்லாம் இல்லாமல் போய் விட்டது. இந்தக் காலத்தில் எல்லாம் வீடியோ கேம்தான் குழந்தைகள் விளையாடும் விளையாட்டில் உறவு என்ற பெயரில் ஒரு நான்கு மரப்பாச்சி பொம்மையை வைத்தும் விளையாடிக் கொண்டிருப்பார்கள். ஒன்றிற்கு வெள்ளைத் துணியை சுற்றி 'இது அப்பா' என்று வைத்து விடுவார்கள்.

இன்னொன்றிற்குக் கலர் துணியைச் சுற்றி 'இது அம்மா' என்று வைத்துவிடுவார்கள். இன்னொரு பொம்மைக்குப் பேண்ட் மாதிரி போட்டுவிட்டு. 'இது அண்ணன் என்று வைத்துவிடுவார்கள். இன்னொரு பொம்மைக்குச் சட்டை போட்டு விட்டு 'இது தங்கச்சி' என்று வைத்து விடுவார்கள்.

இப்படிக் குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்தால் மிக சந்தோஷமாக இருக்கும். மிக ஆழ்ந்து பார்த்தீர்கள் என்றால் அப்பா பொம்மையை எடுத்துக்கொண்டு "அப்பா வேலைக்குப் போகி-றார்..." என்று கார் சத்தம் மாதிரியே சத்தம் போட்டுக்கொண்டு அப்பாவை வேலைக்கு எடுத்துகொண்டு போய் உட்கார வைப்பார்கள்.

"அம்மா சமைக்கிறார்கள்..." என்று சமையல் செய்கிற மாதிரி சத்தம் எல்லாமே கொடுப்பார்கள்.

"அண்ணன் பள்ளிக்குப் போறார்..." என்று சைக்கிள் மிதித்துக்கொண்டே அந்த அண்ணன் பொம்மையைப் பள்ளிக்கு எடுத்துக்கொண்டு போய் உட்கார வைப்பார்கள். அதன்பிறகு "பாடம் படிக்கிறார் ' போன்று சத்தம் எல்லாம் கொடுப்பார்கள்.

"A for Apple, B for Brinjal," என்று சொல்லித் தருவார்கள்.

"தங்கச்சி பள்ளிக்குப் போகமாட்டேன் என்று சொல்லி அழுகிறாள் ' என்று சொல்லி என்ன செய்வார்கள். "*ஆ!..." என்று தங்கை மாதிரி அழ ஆரம்பித்து விடுவார்கள்.

அதாவது எல்லா உறவுகளின் மாதிரியையும் இந்த மரப்பாச்சி பொம்மையை வைத்தே விளையா-டிப் பார்ப்பார்கள். ஏதாவது ஒரு பொம்மை இந்தக் குழந்தை இழுத்த இழுப்பிற்கு வரவில்லை என்றால் "இது கெட்ட பொம்மை" என்று தூக்கிப் போட்டு விடுவார்கள். "இது ஆய் பொம்மை ஒழுங்காக விளையாட்டுக்கு வரமாட்டேன் என்கிறது" என்று ஒதுக்கி வைத்துவிடுவார்கள்.

ஆழ்ந்து பாருங்கள் இந்த மொத்த வாழ்க்கையும் பாருங்கள் நம்முடைய வாழ்க்கையும் இவ்வளவுதான். வேறு ஒன்றுமே கிடையாது.

யார் யார் எப்படி எப்படி எந்தெந்த மாதிரியில் விளையாட வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதன்படி விளையாடினீர்கள் என்றால் அவர்கள் எல்லாம் உறவுகள்.

அந்தப் பாத்திரம் போன்று அவர்கள் ஒழுங்காக விளையாடவில்லை என்றால் அந்த உறவையே "இது ஆய் பொம்மை கெட்ட பொம்மை" என்று தூக்கிப் போட்டுவிடுவோம்.

உங்களின் மொத்த வாழ்க்கையுமே இவ்வளவுதான் வேறு ஒன்றும் கிடையாது.

இப்படித்தான் எல்லாரும் விளையாடிக்கொண்டே இருப்போம். ஒரு குறிப்பிட்ட இடத்தை நம்முடையது என்று வேலி போடுகிே-றாம். அந்த வேலியை அகலமாக்குவதற்கு முயற்சி செய்துகொண்டே இருப்போம்.

இப்போது ஐம்பது ஏக்கர் நிலம் வைத்திருந்து அதைச் சுற்றி வேலி போட்டிருந்தால் என்ன யோசிப்போம் "அடடா! இன்றும் ஒரு மூன்று அடி வேலியைத் தள்ளிப் போட்டிருக்கலாமே" என்று யோசிப்போம்.

ஐம்பது ஏக்கர் என்பதால்தான் அப்படி யோசிக்கிறோம் என்று நினைக்காதீர்கள். ஒரு ஆயிரம் ஏக்கர் இருந்தாலும் என்ன செய்வீர்கள்? "ஒரு அடி வேலியைத்தள்ளி போட்டால்தான் என்ன" என்று யோசிப்பீர்கள்.

அந்த எல்லைக்குள்ளிருந்து வேலியை அகலமாக்குவது நம்முடைய ஜீவாதார சக்தியோடு தொடர்புடையது.


வாழ்க்கையும் இவ்வளவுதான். வேலி-களை அகலமாக்குவது போன்று உறவுகளை ஆழமாக்குவது.

ஆழமாக்குவது என்றால் என்ன?

உங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக் கொண்டுவருவது. மேலும் மேலும் பல்வேறு உறவுகளை உங்கள் கட்டுப்பாட்டிற்குள் எடுத்து வருவது அசைகிறபொருட்களை உங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் என்று சொல்கிறோம்.

அசையாத பொருட்களை உங்களின் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொண்டு வருவதை "Possesion" என்று சொல்கிறோம்.

*(தொடரும்...)*




*(30 பக்கத் தொடர்ச்சி)*

# தமிழினத்திற்கு இரண்டகம் செய்யும் பிபிசி

## இந்துத்துவ பிரச்சார களமாக உருவாகும் இலண்டன் தமிழோசை

இந்தியாவை ஆண்டுகொண்டிருந்த ஆங்கிலேயர்கள் தொடர்ந்து எதிர்-கொண்ட ஒரு சிக்கல், மக்கள் தொகைக் கணக்கெடுப்புதான். கிறித்துவர்-களையும் இஸ்லாமியர்களையும் கணக்கெடுத்துவிட்ட நிலையில், மற்றவர்களை எப்படி கணக்கிடுவது? சமய அடிப்படையில் என்றால் சைவ சமயத்தினர் எத்தனை பேர்? வைணவர் எண்ணிக்கை என்ன?சமணம், பௌத்தம், பார்சியினர் ஆகியத் தரப்பினரை யெல்லாம் எப்படி கணக்கிடுவது என்ற குழப்பத்தில் நீண்டகாலம் தவித்துக் கொண்டிருந்தனர்.

பிரிட்டீஷ் அரண்மனையில் இருந்து அரசியும் இதுகுறித்து அதிருப்தியை வெளிப்படுத்தியதால், அடிமை இந்தியாவின் ஆட்சியாளர்கள் கைபிசைந்து நின்றனர்.

இதேநேரத்தில், இந்திய தேசிய காங்கிரஸ் விடுதலைப் போராட்ட களத்தில் தீவிரவாத பிரிவிற்கு தலைமை ஏற்றிருந்த திலகர் போன்ற பார்ப்பனர்கள் தங்களுக்கே அதிக வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்த வண்ணம் இருந்தனர்.

இதற்காக சைவம், வைணவம், சாக்தம், கணபதியம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறு சமயக் கொள்கைகளை உள்ளடக்கி இந்து சமயம் என்பதைக் கட்டமைத்து, இவர்கள் யாரை யெல்லாம் கீழ்ச் சாதியினர் என்று ஒதுக்கி வைத்தார்களோ அவர்களை யெல்லாம் கணக்கில் சேர்த்து "பாருங்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்களைவிட இந்துக்கள்தான் அதிகம்; அதனால் எங்களுக்கே அரசாங்க வேலைகளில் அதிக முன்னுரிமை அளிக்க வேண்டும்" என்று திலகர் ஆங்கில ஆட்சியாளர்களிடம் தொடர்ச்சியாக குரலெழுப்பி வந்தனர்.

இவ்வாறு 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டமைக்கப்பட்டதுதான் இந்து சமயம். இதைக் கண்ட ஆங்கில நிருவாகிகளுக்கு, இது ஒரு வகையில் வசதியாக அமைந்துவிட்டது. பிரிட்டிஷ் இந்தியாவில், யாரெல்லாம் இஸ்லாமியர் இல்லையோ; எவரெல்லாம் கிறிஸ்துவர் இல்லையோ மற்ற அனைவரும் இந்துக்கள் என்று குத்து மதிப்பாக அறிவித்துவிட்டனர்.

சீக்கிய சமயம் உள்ளிட்ட பிற சமயங்களை யெல்லாம் கணக்கில் கொள்ளவில்லை.

அதைப்போல, பிரிட்டிஷ் நீதி நிருவாக அமைப்பில் இருப்பதைப் போல இந்தி-யாவிலும் ஒரு பொது சிவில் சட்டத்தை இயற்றுவதற்கான அடிப்படையை அவர்கள் தேடிக் கொண்டிருந்தபோது, மனு சாத்திரத்தைக் கொடுத்தவர்-களும் இந்த சித்பவன பார்ப்பனர்கள்தான். இங்கிலாந்தின் Privy Council-கிளைதான் இந்திய உச்சநீதிமன்றமாக அப்போது செயல்பட்டது.

ஆக, மனு சாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தியாவில் முதல் முதலாக பொது இந்து சிவில் சட்டம் வரையப்பட்டது. இதைச் செய்தவர்கள் ஆங்கிலேயர்கள்.

இவ்வாறு, பிராமணர்கள் கட்டமைத்த வேதங்கள், நிகண்டுகள், இராமாயண- மகாபாரத புனை காவியங்கள் உட்பட எந்த இடத்திலும் இந்து மதம் பற்றி சொல்லப்படவில்லை. 19-ஆம் நூற்றாண்டில் புத்தம் புதிதாகக் கட்டமைக்கப் பட்டததுதான் இந்து சமயம்.

வரலாறு நெடுகிலும் இந்து என்ற சொல், சமய இலக்கியங்களில் இல்லவே இல்லை; ஆனாலும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியை மட்டும் குறிக்க இந்தச் சொல் பயன்பட்டுள்ளது; மாறாக, மத அடிப்படையில் அல்ல.

எகிப்து நாகரிகத்திற்கு முந்தைய கிரேக்கக் கல்வெட்டுகளில் மட்டும் அரிதாகக் காணப்படும் ஹிந்துஷ் என்னும் சொல், எப்படி அரேபியர்கள் இந்தப் பகுதிக்கு வந்தபொழுது சிந்து நதியின் அடுத்தக் கரையை ஒட்டியுள்ள நிலப் பகுதியை "அல்-சிந்த்" என்றும் "அல்-ஹிந்த்" என்றும் அழைத்தார்களோ அதைப்போல இடத்தின் அடையாளமாகத்தான் ஹிந்துஷ் என்று கிரேக்க மொழி கல்வெட்டில் காணப்படுகிறது.

காஞ்சி சங்கராச்சாரியார்கூட, "நல்ல வேளையாக ஆங்கிலேயன் நமக்கு இந்து என்று பெயர் வைத்தான்; அதனால் தப்பித்தோம் இல்லாவிடில் நாமெல்லாம் சைவர் என்றும் வைணவர் என்றும் இன்னும் பிற மத அடையாளங்களுடன் பிரிந்து நிற்போம்" என்று அவர் வெளியிட்ட பருவ இதழிலேயேக் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட உண்மை சம்பவங்கள், அண்மைய நிகழ்ச்சிகளாக நம் கண் முன்னே தெரியும் வேளையில், பண்டைய வேத கால இந்தியா என ஒரு தேசக் கட்டமைப்பு இருந்ததாகவும் அதில் இந்து ராஷ்டிரம் என்னும் அரசக் கட்டமைப்பு இருந்ததாகவும் சொல்வது அப்பட்டமான கட்டுக்கதை; பொய்மூட்டையின் மொத்த வடிவம். ஒரு வகையில், இது தமிழ்த் துரோகம்.

இந்திய துணைக் கண்டத்தில் செழித்திருந்த நாகரிகம் திராவிட நாகரிகம்தான் என்பதை மொகஞ்சதாரோ, ஹாரப்பா நாகரிக அடையாளங்கள் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன; அந்த நாகரிகம் தமிழர்களால் உருவாக்கப்பட்டது என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது; அத்துடன், நிகழ் காலத்தில் தமிழகத்தில் கீழடி, ஆதிச்சபுரம் உள்ளிட்ட ஏராளமான இடங்களில் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சி முடிவுகளும் இந்த நிலத்தின் பூர்வ குடியினர் தமிழர்கள்தான் என்பதை உலகுக்கு அடித்துச் சொல்கின்றன.

இவை அத்தனையையும் மூடி மறைக்கப்பார்க்கும் இன்றைய இந்தியாவின் பாஜக அரசு, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் திட்டத்தை நடைமுறைப்படுத்துப் பார்க்கிறது.

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் முக்கொள்கை என்பது, இந்து ராஜியம்-பிராமணர் ஆதிக்கம்-சமஸ்கிருத மேலாண்மை என்பவைதான். இந்த ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தலைமைப் பொறுப்பிற்கு திலகர் வழிவந்த சித்பவன பிராமணர்கள்தான் வர முடியும்.

இவ்வாறு பார்ப்பன மேலாதிக்கக் கட்டமைப்பிற்கு அடித்தளமிட்ட திலகரின் நினைவு நாளான ஆகஸ்ட் முதல் நாளில், லண்டன் தமிழோசை திட்டமிட்டே இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. இதற்கு முன்னம், மொகஞ்சதாரோ-ஹரப்பா நாகரிகம் தமிழர்களுடையதுதானா என்று கேள்வி எழுப்பும் கட்டுரையையும் தமிழோசை வெளியிட்டது.

உலகளாவிய பொதுநோக்கையும் உண்மைத் தகவலையும் அடிப்படையாகக் கொண்டு விளங்க வேண்டிய பன்னாட்டு செய்தி நிறுவனமான லண்டன் தமிழோசையின் தமிழ் விரோதப் போக்கை நாளைய உலகம் தெளிவாக வரையறை செய்யும்.

வாழ்க தமிழ்! வெல்க தமிழர்.!!

**நக்கீரன் 013-244 36 24**

# இவ்வார ராசிபலன்

## 05-08-2022 வெள்ளி தொடக்கம் 11-08-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** உற்சாகம் அதிகரிக்கும் வாரம். தீய எண்ணங்கள் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கிட்டும். பூர்வீகச் சொத்து சேரும். தொல்லைகள் விலகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். அரசுப்பணியில் மாற்றம் வரும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். வீண் வம்பு விலகும். நிர்வாக ஆதரவு உண்டு. உறவினரால் நன்மை உண்டு. அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். வெற்றி கிட்டும். விவசாயம் கை கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத் தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். மனைவியால் ஆறுதல் உண்டு. மகிழ்ச்சியான செய்தி வரும். நிர்வாக பொறுப்பு கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை தீரும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல் வாங்கலில் நன்மை உண்டாகும். உறவினர்களின் தொல்லை நேரும். பிள்ளைகளால் பெருமை சேரும். வியாபார வளர்ச்சி உண்டு. ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அமையும். தனவரவு பெருகும். எதிரிகள் உதிரியாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மை தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஏரிக்கரை பகவதி, அதிர்ஷ்ட எண்: *7,9,2,3*
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,R




**ரிஷபம்:** சாதனை நிகழ்த்தும் வாரம். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். மாற்றங்கள் ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய வாய்ப்பு கூடும். பிரார்த்தனைகள் நிறைவேறும். ஆபரணப் பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலைத் தொடரும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். நன்மதிப்பு வரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். பெரிய திருப்பம் ஏற்படும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் கூடும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். உறவினரால் செலவு உண்டு. வளம் பெருகும். சாதனைகள் ஓங்கும். சந்தோஷம் அதிகரிக்கும். வாய்ப்புக்கள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். கடன் பிரச்சனை தீரும். கர்மவினைகள் அகலும். உறவால் பணவிரயம் கூடும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். மனவேதனை குறையும். வாழ்வு நிலை உயரும். லாபம் திருப்தி தரும். போட்டிகள் மறையும். பொருளாதாரம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: *4,8,9,1*
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,E




**மிதுனம்:** சாதனைகள் படைக்கும் போதனையான வாரம். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவேற்பு கூடும். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். தாய் நலனில் அக்கறை தேவை. சுபக்காரியச் செய்தி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன்பிறந்தவரால் உதவி உண்டு. முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். ஏற்றமான தருணம். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை உருவாகும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழிலில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத்திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். மங்களச் செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். நட்புக்கள் பெருகும். நன்மைகள் அதிகமாகும். முன் கோபத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவுகளால் பாதகம் உண்டு. சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்வி சலுகைகள் கிட்டும். புகழ் கூடும். பெருமைகள் தேடி வரும். அரசு வகை ஆதாயம் கிட்டும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். ஆபரணம் வாங்குவீர்கள். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத்துறையில் வெற்றி கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *4,3,2,1*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,T




**கடகம்:** கன்னியமான புண்ணியம் சேரும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். வீடு, மனை யோகம் உண்டு. உடன் பிறப்புகளால் உதவி உண்டு. வெறுப்புகள் ஒழியும். பொறுப்புகள் கூடும். விரக்திகள் மாறும். வியாபார வளர்ச்சி உண்டு. வீண் செலவுகள் உண்டு. விருந்தினர் வருகை உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். கால்நடைகளால் லாபம் உண்டு. கடின உழைப்பு தேவைப்படும். கடன் சுமை அதிகமாகும். காரியம் கைகூடும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணம் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். கமிஷன் தொழில் திருப்தி தரும். பயணத்தால் அனுகூலமுண்டு. கலை ஈடுபாடு அதிகரிக்கும். எடுத்த காரியம் தடைப்படும். எதிலும் கவனம் தேவை. அடுத்த நபரால் தொல்லை உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். தொழில் போட்டி மறையும். கனவுத்தொல்லை உண்டு. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். திடீர் பயணம் ஏற்படும். குடும்ப ஒற்றுமை குறையும். உடல் உபாதை கூடும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உறவினர் வருகைத் தொல்லை தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். நோய் நொடிகள் அகலும். வீண் வம்பு விலகும். விபரீத எண்ணம் விலகும். வழக்குகள் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** துன்பங்களை துரத்தியடிக்கும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். வியாபாரத்தால் நன்மை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். மருத்துவச் செலவு ஏற்படும். மனோபயம் நீங்கும். குதூகலம் அதிகமாகும். குளிர்பான தொழில் கவனம் தேவை. அமைதியாக இருப்பது நல்லது. பூர்வீகச் சொத்து சேரும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். திடீர் பயணம் உண்டு. இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். காதல் எண்ணம் ஈடேறும். வாழ்வில் வசந்தம் உண்டு. மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை வில்லங்கம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். பெண்களில் கௌரவம் உயரும். பல்வலி வந்து போகும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். செல்வாக்கு உயரும். உறவினர் பகை ஏற்படும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். வாகன மாற்றம் ஏற்படும். நூதன முயற்சி தடைப்படும். மாற்றுத்தொழில் உருவாகும். வேற்று இன நட்பு கிட்டும். விவேகம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். பெண்களால் பெருமை சேரும். குடும்ப உறவு பலப்படும். உத்தியோக உன்னதம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *2,5,4,9*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,L




**கன்னி:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். ஆதாயம் பெருகும். காரியத்தடை அகலும். அலுவலக பணி அனுகூலம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய்வழி உறவு லாபம் தரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் கூடும். மன அமைதி குறையும். பொருள் சேர்க்கை உண்டு. பொறாமைகள் விலகும். பொறுப்புக்கள் கூடும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமைகள் விலகும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. கலை ஆர்வம் பெருகும். உடல் சோர்வு உண்டாகும். விபரீத போக்கு மாறும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். பாராட்டுக்கள் கூடும். வேலை பளு கூடும். புது முயற்சி பலன் அளிக்கும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலன் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பூமியால் லாபம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். வீண் விரயம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உணவு பிரியம் கூடும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. நண்பரால் செலவு உண்டு. முடிவுகள் சாதகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: *9,5,2,1*
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,X




**துலாம்:** விரக்திகள் மறையும் வாரம். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகை உண்டு. கல்விச் செலவு உண்டு. காரியம் இழுபறியாகும். பொருளாதார உயர்வு ஏற்படும். உஷ்ணம் அதிகரிக்கும். நெருக்கடிகள் குறையும். கண்ணாடிப் பொருள் சேதம் ஏற்படும். கட்டிடத் தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். இன்னல்கள் அகலும். எதிர்பார்ப்புகள் குறையும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத் தேடி வரும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானத் தடை உண்டு. பணியாட்களால் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சஞ்சலம் மறையும். திறமைகள் அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். தன்னம்பிக்கை கூடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் பயணம் உண்டு. மனச்சுமை குறையும். நினைவாற்றல் பெருகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். பக்குவமான பேச்சு அவசியம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். பயணம் தடைப்படும். திடீர் செலவு ஏற்படும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: *3,5,4,1*
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J




**விருச்சிகம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி மறையும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். புதிய தொழில் அமையும். ஆடம்பர சுகங்கள் கூடும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. மருத்துவச் செலவு உண்டு. மறைமுக தொல்லை நீங்கும். தீர்த்த யாத்திரை உண்டு. திருப்புமுனை ஏற்படும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். காரியத்தடை அகலும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கட்டிடத் தொழில் லாபம் தரும். இன்றைய பிரார்த்தனை நன்மையை கூட்டும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. விவசாய விளைச்சல் அதிகரிக்கும். புத்திரரால் பூரிப்பு உண்டு. நலமே விளையும் அற்புதமான வாரம். நல்லவர் நட்பு உருவாகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் கூடும். குதூகலம் கூடும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குடும்ப ஒற்றுமை கூடும். முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்புக்கள் விலகும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ட எண்: *3,5,9,2*
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Q

(தொடர்ச்சி 33 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(32 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** புதிய பொறுப்பு வரும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். திறமைகள் அதிகமாகும். பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் கூடும். பெற்றோர் நலம் கவனம் தேவை. விவாதம் தவிர்ப்பது நல்லது. செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். புதியப்பொருள் சேரும். பொறாமைகள் விலகும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பணம் புரளும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோக ஏற்றம் உண்டு. சோதனைகள் நீங்கும். சாதனைகள் ஓங்கும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். தன வரவுகள் பெருகும். பொருள் வரவு உண்டு. மனநிறைவு ஏற்படும். கடன் பிரச்சனை தீரும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. வளம் பெருகும். உடல்நலம் கவனம் தேவை. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். போட்டிகள் வெற்றி தரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். மங்களகரமான வாரம். மன அமைதி கெடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப கௌரவம் ஓங்கும். வெற்றி நிலை தொடரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Q



**மகரம்:** ஆரோக்கியத்தில் திருப்தி தரும் வாரம். ஆபரண பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கூடும். வியாபாரத்தில் எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். பதவியில் உயர்வு வரும். புகழ் கூடும். புதிய வாய்ப்பு கிட்டும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிகள் சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். தெய்வப் பணியில் ஈடுபாடுகள் அதிகரிக்கும். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை பெருமை தரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டுக் கிட்டும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமை குறையும். வியாபார மந்தநிலை அகலும். கடன் உதவி கிட்டும். தொழிலில் மாற்றம் ஏற்படும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். திருப்தி ஏற்படும். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்ப்பேச்சில் கவனம் வேண்டும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. சொத்துக்கள் சேர்க்கையுண்டு. பெண்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். தீய எண்ணங்கள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,I



**கும்பம்:** பொறுப்பும், சிறப்பும் சேரும் வாரம். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடனால் பிரச்சனை வரும். காரிய அனுகூலம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். எதிலும் நிதானம் தேவை. எடுத்த காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து உயரும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். செயல் திறமை வெளிப்படும். கடின உழைப்பு தேவைப்படும். கால்நடைகளால் லாபம் தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வீண் செலவுகள் ஏற்படும். விரக்திகள் மறையும். வீடு, மனை ஆசை பூர்த்தியாகும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆரோக்கியம் கூடும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கண்ணியம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். தொழில் போட்டிகள் மறையும். ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து தடைப்படும். சந்தோஷம் கூடும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச் சலுகைகள் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். எதிர்பாராத நன்மை கிட்டும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். உத்தியோகம் திருப்தி தரும். பணி மாற்றம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,L



**மீனம்:** நவகிரஹம் அனுகிரஹம் கிடைக்கும் வாரம். நலம் விளையும் காலம். நன்மைகள் அதிகமாகும். நட்புக்கள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் கூடும். கலைத்தொழில் கவனம் தேவை. கால்நடைகளால் சிரமம் உண்டு. உள்ளம் மகிழும். முக்கிய எண்ணம் நிறைவேறும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். பொருளாதாரம் உயரும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். கல்வியில் கவனம் குறையும். எதிர்ப்புக்கள் விலகும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். உறவால் பணவிரயம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் குறையும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பங்குச்சந்தை மாற்றம் தரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். சொத்துக்கள் சேரும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். முதலீடுகளை தவிர்க்கவும். குடும்ப மனநிறைவு தரும். காதலில் பிரிவு ஏற்படும். கடமையில் தடங்கல் ஏற்படும். புதிய வாகனம் வாங்குவீர்கள். பாராட்டுக்கள் தேடி வரும். ஸ்டே'னரி தொழில் திருப்பம் தரும். புதிய முயற்சிகள் பலன் அளிக்கும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. வெகுமதிகள் சேரும். உடல்நலனில் அக்கறை தேவை. அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். பணிவு அவசியம். பணவரவு உண்டு. தந்தை நலம் கூடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 9,6,3,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,V

# சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் கனடா நடத்தும், விபுலாநந்த அடிகளாரின் 75 ஆவது நினைவு தினம்

கனடாவில் இயங்கிவரும் சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் நடத்தும், விபுலாநந்த அடிகளாரின் 75 ஆவது நினைவு தினம் பற்றிய அறிவித்தலை இங்கு பார்க்கவும். அடிகளாரின் உயர்ந்து சேவைகளைக் கொண்டாடவும் அவரை நினைவு கூர்ந்து அவர் புகழை உச்சரிக்கவும் அனைவரும் வருகை தரவும்.

Kumarakuru Kanapathipillai M.A - (647) 224-8871




## ஏமாற்றம்!

ஏமாற்றம்! அது ஏனோ
என் வாழ்வுடன் என்றும்
பின்னி பிணையப்பட்டது!

கைக் குழந்தையாய்! பசியுடன்
அம்மாவிடம் தாவிச் சென்றால்!
காய்ந்த மார்பகங்கள்!
முதல் ஏமாற்றம்!

நிலாவில் நித்தம் வடை
சுடும் பாட்டி! ஒருநாள்
கூட எனக்கு கொடுக்காதது
பெருத்த ஏமாற்றம்!

மாத கணக்கில் நச்சரித்து
மாமா வாங்கி கொடுத்த
பொம்மை! விளக்கு எரியாதது
மிகுந்த ஏமாற்றம்!

பள்ளிக்காலம்! முதல் காதலி
பேச முற்பட்ட போது! அவள்
தலையை திருப்பிக் கொண்டது
இன்றும் ஏமாற்றம்!

மருத்துவம் என்னும் பெருங்கனவு!
அரை மதிப்பெண்ணால் வெறும்
பகற் கனவாய் போனது!
என்றும் ஏமாற்றம்!

ஆறு இலக்க சம்பளம்!
ஆறு நிமிட தாமதம்! நேர்காணலுக்கு!
பறி போனது வேலை!
ஆற்ற முடியா ஏமாற்றம்!

நீண்ட கருங்குழல் மீது காதல்!
முதலிரவு அறையில் என்னவள்
தூக்கியெறிந்த சவுரி முடி!
மீளமுடியா ஏமாற்றம்!

ஆசையாய் வாங்கி வந்த கம்மல்!
பிடிக்கவில்லை! அன்பு மகளின்
முகம் சுளிப்பு!
கனத்த ஏமாற்றம்!

இப்படி சின்னச்சின்ன ஏமாற்றங்கள்!
எதிர்பார்ப்பின் எதிரொலிகள்! ஆனால்
எதிர்பார்ப்பு இல்லா வாழ்கை! வண்ணங்கள்
இல்லா ஓவியம் போல!

ஆதலால் எதிர்பார்ப்போம்!
ஏமாறுவோம்! ஆனால்
சோர்ந்து விடாமல் அதை
ஜீரணிக்க கற்றுக்கொள்ளவோம்!

# அன்பின் தொனி - 657

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**விக்கிரக ஆராதனையில் விழுந்துபோன ஜனம்**

## 10. ஆதாயத்திற்காக "தியனாளின்" சிறிய கோவில்களைச் செய்வித்தார்கள்

பவுல் மக்கெதோனியா அகாயா என்னும் நாடுகளில் சுற்றிநடந்து, எருசலேமுக்குப்போகும்படி ஆவியில் நிருணயம் பண்ணிக்கொண்டு: நான் அங்கே போனபின்பு ரோமாபுரியையும் பார்க்கவேண்டியதென்று சொல்லி, தனக்கு உதவி செய்தவர்களில் இரண்டுபேராகிய தீமோத்தேயுவையும் ஏரஸ்துவையும் மக்கெதோனியாவுக்கு அனுப்பிவிட்டு, தான் பின்னுஞ் சிலகாலம் ஆசியாவிலே தங்கினான். அக்காலத்திலே இந்த மார்கத்தைக் குறித்துப் பெரிய கலகம் உண்டாயிற்று. எப்படியென்றால், தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் தியானாளின் கோவிலைப்போல் வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்து, தொளிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்துக்கொண்டிருந்தான். இவர்களையும் இப்படிப்பட்ட தொழில்செய்கிற மற்ற வேலையாட்களையும் அவன் கூடிவரச்செய்து: மனுஷர்களே, இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள். இப்படியிருக்க, கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல் என்பவன் சொல்லி, எபேசுவிலேமாத்திரமல்ல, கொஞ் சங்குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக்கொண்டான் என்று நீங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறீர்கள். இதனால் நம்முடைய தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக் கிறதுமல்லாமல், மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப் போகிறதற்கும், ஆசியா முழுமையும் பூச்சக்கரமும் சேவிக்கிற அவளுடைய மகத்துவம் அழிந்துபோகிறதற்கும் ஏதுவாயிருக்கிறது என்றான். அவர்கள் இதைக் கேட்டு, கோபத்தால் நிறைந்து: எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று சத்தமிட்டார்கள். பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைந்தது. பவுலுக்கு வழித்துணையாய்வந்த மக்கெதோனியராகிய காயுவையும் அரிஸ்தர்க் குவையும் அவர்கள் இழுத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அரங்கசாலைக்குப் பாய்ந்தோடினார்கள். பவுல் கூட்டத்துக்குள்ளே போகமனதாயிருந்தபோது, சீஷர்கள் அவனைப்போகவிடவில்லை. ஆசியாநாட்டுத் தலைவரில் அவனுக்குச் சிநேகிதராயிருந்த சிலரும் அவனிடத்திற்கு ஆள் அனுப்பி, அரங்கசாலைக்குள் போகவேண்டாம் என்று எச்சரித் தார்கள். கூட்டத்தில் அமளியுண்டாகி, சிலர் இப்படியும் சிலர் அப்படியுமாகப் பேசினார்கள், தாங்கள் கூடிவந்த காரணம் இன்னதென்று அநேகருக்குத் தெரியாதிருந்தது. அப்பொழுது யூதர்கள் அலெக்சந்தர் என்பவனை முன்னிற்கத் தள்ளுகையில், கூட்டத்திலே சிலர் அவனை முன்னே இழுத்துவிட்டார்கள். அலெக்சந்தர் கையமாத்தி, ஜனங்களுக்கு உத்தரவு சொல்லமனதாயிருந்தான். அவன் யூதனென்று அவர்கள் அறிந்தபோது, எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டுமணி நேரமளவும் எல்லாரும் ஏகமாய்ச் சத்தமிட்டுக்கொண்டிருந்தார்கள். பட்டணத்துச் சம்பிரதியானவன் ஜனங்களை அமர்த்தி: எபேசியரே, எபேசியருடைய பட்டணம் மகா தேவியாகிய தியானாளுக்கும் வானத்திலிருந்து விழுந்த சிலைக்கும் கோவிற்பரிசாரகியாயிருக்கிறதை அறியாதவன் உண்டோ? இது எதிர் பேசப்படாத காரியமாகையால், நீங்கள் ஒன்றும் பதறிச்செய்யாமல் அமர்ந்திருக்கவேண்டும். இந்த மனுஷரை இங்கே கொண்டுவந்தீர்கள், இவர்கள் கோவிற்கொள்ளைக்காரருமல்ல, உங்கள் தேவியைத் தூஷிக்கிறவர்களுமல்ல. தெமேத் திரியுக்கும் அவனைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கும் ஒருவன்மேல் ஒருகாரியம் உண்டாயிருந்தால், நியாயம் விசாரிக் கிற நாட்களுண்டு, தேசாதிபதிகளும் இருக்கிறார்கள், ஒருவர்பேரிலொருவர் வழக்காடிக்கொள்ளட்டும். நீங்கள் வேறெ யாதொரு காரியத்தைக்குறித்து விசாரிக்கவேண்டியதானால், அது நியாயசங்கத்திலே தீர்க்கப்படும். இன்றைக்கு உண்டான கலகத்தைக்குறித்து நான் உத்தரவுசொல்லுகிறதற்கு ஏதுவில்லாதபடியால், இந்தக் கலகத்தைக்குறித்து நாங்கள் விசாரிக்கப்படும்போது, குற்றவாளிகளாகிறதற்கு ஏதுவாயிருப்போமே என்று சொல்லி, பின்பு கூட்டத்தை அனுப்பிவிட்டான். - **அப்போஸ்தலர் 19: 21-41**

## 11. அறியப்படாததேவனுக்கு ஆராதனை

அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கையில், அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து, ஜெபஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ள வர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணைபண்ணினான். அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம்பண்ணினார்கள். சிலர்: இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள். சிலர்: இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள். அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக்கொண்டுபோய்: நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்ன தென்று நாங்கள் அறியலாமா? நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப்பண்ணுகிறாய், அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்றார்கள். அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை. அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று: அத்தேனரே, எந்த வி'யத்திலும் நீங் கள் மிகுந்த தேவதாப பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆரா தனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாததேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன், நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத் தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறது மில்லை.

- **அப்போஸ்தலர் 17: 16-25**

*தொடரும்...*




# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com






Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca


26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS "Fly with Confidence"
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1374 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 5, 2022

# அப்துல் ஹமீட் எழுதிய "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" நூல் கனடாவைத் தொடர்ந்து பல நாடுகளிலும் வெளியிடப்பெறவுள்ளது

## கனடா உதயனுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் ஐபிசி புகழ் எஸ். கே. ராஜன் தெரிவிப்பு



(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

உலகெங்கும் உள்ள தமிழ் பேசும் மக்களால் அதிகளவில் விரும்பப்பெறும் அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் எழுதிய "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" எதிர்வரும் 12--8-2022 அன்று வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியிடப்பெறவுள்ளது. அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற வட அமெரிக்க தமிழர் சங்கங்களின் சம்மேளனம் நடத்திய "பெட்னா" விழாவில் முதற் தடவையாக வெளியிடப்பெற்ற இந்த நூல். கனடாவைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளிலும் வெளியிடப்பெறவுள்ளது. இந்த நூலை அனுபவித்து வாசிக்க அவரது அன்பு ரசிகர்கள் காத்திருக்கின்றார்கள் என்றே நான் நம்புகின்றேன்.

(உள்ளே விபரமான செய்தி 28ம் பக்கத்தில்)

# சுமந்திரன் தமிழர்களின் சமகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஒரு புற்று நோய் என்கிறார் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கச் செயலாளர்



சுமந்திரன் தமிழர்களின் சமகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஒரு புற்று நோய். சுமந்திரனும் சம்பந்தனும் தமிழர்களுக்குச் செய்த எந்த காரியம் எமக்கு நன்மை பயக்கும் என்று கேட்க விரும்புகின்றோம். நீங்கள் ஒரு நன்மையையும் பெயரிட முடியாது. தமிழ் விடுதலையாளர்களை அரசியல்வாதிகளாகவோ அல்லது முடிவெடுப்பவர்களாகவோ வைத்திருந்தால் மட்டுமே தமிழர்களின் இறையாண்மையை மீள் எடுக்க முடியும் என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)

# எழுத்தாளர் அகணி சுரேஸின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா சிறப்பாக இடம்பெற்றது







கனடா வாழ் எழுத்தாளரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய தலைவருமாகிய அகணி சுரேஸ் எழுதிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ நகர சபை சபா மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

மண்டபம் நிறைந்த விழாவாக இடம்பெற்ற இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் அவர்கள் கலந்து சிறப்பிக்க அழைக்கப்பெற்றிருந்தார்.

கவிதை கட்டுரை விமர்சனம் பாடல்கள் எழுதுதல் கற்பித்தல் மற்றும் இசை போன்ற பல துறைகளில் தனது பங்களிப்புக்களை தொடர்ச்சியாக வழங்கி வரும் எழுத்தாளர் அகணி சுரேஸ் அவர்களின் இந்த விழாவில் அனைத்துப் பிரிவுகள் சார்ந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தன.

சிறுவர் சிறுமியர் மாணவ மாணவிகள் பெரியோர்கள் கலைஞர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கு பற்ற வாய்ப்புக்கள் வழங்கப்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கட்டுரைச் சாரல் கதைச் சாரல் மற்றும் ஆங்கில நூல் ஒன்று என அன்று வெளியிடப்பெற்ற மூன்று நூல்களின் பிரதிகளை பலரும் பணம் கொடுத்துப் பெற்றுச் சென்றார்கள். அங்கு வாழ்த்துரைகளை வழங்க அழைக்கப்பெற்றவர்களில் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வரும் அன்பர்களும் கலந்து கொண்டார்கள் என்பது இங்கு கவனிக்கத் தக்க வேண்டியதொன்றாகும்.

# தென்னிலங்கை நோக்கி திரும்பியுள்ள அரச பயங்கரவாதம்

### வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்




ரணில்விக்ரமசிங்கவின் அக்ராசன உரை "தகர்ந்து போகும் வாக்குறுதிகள்" என்பதை விரைவில் காலம் உணர்த்தும்.

. சூழ்நிலைகளின் கைதியான ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க ராஜபக்'க்களினதும் பொதுஜனபெரமுன கட்சியினதும் கடிவாளத்தை மீறி எவ்வளவு தூரம் பயணிக்க முடியும்?

தென்னிலங்கையின் அரசியல்வானில் கோலோச்சிய இளைஞர் யுவதிகளின் அரசியல் சாதனையை வெறும் நூறு நாட்களுடன் முடித்துவிட்டதாக தென்னிலங்கையின் அரசியல் சக்திகள் மார் தடடிக்கொண்டிருக்கின்றனர்.நூறு நாட்களுக்குள் தென்னிலங்கை அரசியல்வானில் பல சாதனைகளை இளைஞர் யுவதிகள் நிகழ்த்திக் காட்டியுள்ளனர். தென்னிலங்கை மக்களின் அபிலாஷ‘களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய இளைஞர் யுவதிகள் தென்னிலங்கை மக்களின் மீட்பராக போற்றப்பட்டனர். அதேவேளையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் என்றும் கிளர்ச்சியாளர்கள் என்றும் சித்தரிக்கப்பட்டனர்.

(உள்ளே விபரமான கட்டுரை 13ம் பக்கத்தில்)

# 'மொன்றியால் வீணைமைந்தன்' பவள விழா ஆகஸ்ட் 7 அன்று நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது




கனடா வாழ் எழுத்தாளரும், பேச்சாளரும் கனடா 'உதயன்' தொடர் எழுத்தாளரும். கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் நிறுவுனர்களில் ஒருவருமான 'மொன்றியால் வீணைமைந்தன்' அவர்களின் பவள விழா (75வது அகவை பூர்த்தி விழா) எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 7ம் திகதி நல்லூரில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் இலக்கிய வட்டத்தின் தலைவரும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்களில் ஒருவருமான பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் யாழ்ப்பாணத்தில் கல்வி. கலை இலக்கியம் மற்றும் பொதுச்சேவை ஆகியவற்றில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வரும் பலர் வாழ்த்துரை யாற்றவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker